REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஏப்ரல் 16 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY திනකරන්

வரு. 92 இல. 90 | Tuesday 16, April, 2024 | 16பக்கங்கள் | 50/-




## யாழ்ப்பாணத்தில் இரண்டு சர்வதேச மைதானங்கள்


### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கள ஆய்வு



யாழ். செம்மணி பகுதியில் சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்ட மைதானங்களை அமைப்பதற்கான சாத்தியப்பாடு குறித்து ஆராயப்படவுள்ளது.

இதற்காக யாழ், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா துறைசார் அதிகாரிகளுடன் அப்பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்தார். 06

## அதிவேக நெடுஞ்சாலைகளின் புத்தாண்டுகால வருமானம் 15 கோடி ரூபாவை தாண்டியது



புத்தாண்டு காலத்தில் அதிவேக நெடுஞ்சாலைகளின் வருமானம் 15 கோடி ரூபாவைத் தாண்டியுள்ளதாக, வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

புத்தாண்டு காலத்தின் ஆரம்ப நாட்களான கடந்த 10 முதல் 13 வரையே இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.இந்நாட்களில் அதிவேக நெடுஞ்சாலைகள் மூலம் 15 கோடியே 98 இலட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக அதிவேக நெடுஞ்சாலையின் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புப் பிரிவின் பணிப்பாளர் ஆர். ஐ.டி. கஹடபிட்டிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் 13ஆம் திகதி சனிக்கிழமை மட்டும் அதிவேக நெடுஞ்சாலைகளின் வருமானம் சுமார் 06

## தலைக்கு எண்ணெய் வைக்கும் தேசிய நிகழ்வு



சுதேச மருத்துவ அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழ், சிங்கள புத்தாண்டு விழாவின் சிறப்பம்சமான தலைக்கு எண்ணெய் தேய்க்கும் தேசிய நிகழ்வு நேற்று (15) வத்தளை ஹெந்தலை ரஜமஹா விகாரையில் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்றது. விகாராதிபதி ஹிக்கொட சந்திம நாயக்க தேரர், பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைக்கு எண்ணெய் வைக்கும்போது பிடிக்கப்பட்ட படம்.

## 2024 ITN சித்திரைப் புத்தாண்டு விழா



சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசை நிறுவனம் ஏற்பாடு செய்த "2024 ITN சூர்ய மங்கல்ய" எனும் சித்திரைப் புத்தாண்டின் மாபெரும் கலாசார விழா, மீகொட மகா வித்தியாலய மைதானத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்றது. புத்தாண்டு அழகு ராணி போட்டியில் வெற்றி பெற்ற சிறுமிக்கு அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன சால்வை அணிவித்தபோது பிடிக்கப்பட்ட படம்.



03 பாவனை அதிகரிப்பால் முட்டை விலை உயர்வு

### இறையாண்மை பத்திர உரிமையாளர்களுடன் பேச்சு நடத்தி இறுதித் தீர்வு

# IMF மூன்றாம் தவணை கொடுப்பனவு நிச்சயம்

### சிக்கல் எதுவுமின்றி இலகுவாக பெறலாம் என்பதில் இலங்கை நம்பிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் தவணை கடன் கொடுப்பனவு எதிர்வரும் ஜூன் மாதத்தில் கிடைக்கவுள்ளது. இந்நிலையில், இத்தவணைக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பதாக இறையாண்மை பத்திர உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இறுதித் தீர்வு எட்டப்படும் என, ஜனாதிபதியின் ஆளணி பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சில மாதங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் அவசியமான இணக்கப்பாட்டை பெற்றுக் கொண்டு, அதன் மூலம் சிக்கல்களின்றி சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது தவணையை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் பரிசிலுள்ள கடன் மறு மறுசீரமைப்புக்கான இரண்டு முக்கிய நிறுவனங்களான *Lazard Institute of France* மற்றும் *Clifford Chance LLP Institute* ஆகியன இலங்கை இறையாண்மைப் 06

**ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஜனாதிபதியின் ஆளணி பிரதானியும், சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்கா நம்பிக்கை தெரிவிப்பு**

## தமிழ் பொது வேட்பாளர் தெரிவு இனவாதத்தை தூண்டும் செயல்



ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது இனவாதத்தைத் தூண்டும் செயற்பாடெனா, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஊடக மாநாட்டிலேயே (14) அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

தமிழ் வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டுமென முன்னைய காலங்களிலும் முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

குமார் பொன்னம்பலம், சிவாஜி லிங்கம் ஆகியோர் போட்டியிட்டுமுள்ளனர். இவர்களு க்கு தமிழ் மக்கள் கொடுத்த ஆதரவு எப்படியாக இருந்தது என்பது 06

## இத்தாலிய சொகுசுக் கப்பல் 1978 பிரயாணிகளுடன் கொழும்பு வருகை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இத்தாலிய நவீன சொகுசு பயணிகள் கப்பலான கொஸ்ட்டா டெலிசியோசா நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் ஜப்பான், அமெரிக்கா,மற்றும் பிரிட்டன் ஆசிய நாடுகளைச் 06

### புத்தாண்டு கொண்டாட்டங்களின் பின்

## போதைப்பொருள், குற்றச்செயல்களுக்கு எதிரான நடவடிக்கை இரட்டிப்பாக்கப்படும்



புத்தாண்டுக்குப் பின்னர் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளை இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்கப்படுமென, பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு கொழும்பு மாவட்டத்தில் போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளை (14) சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,"குற்றம் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு 06

## கொரோனா தொற்றில் 62 வயது பெண் உயிரிழப்பு

### பிரான்ஸிலிருந்து வந்ததாக தகவல்

**யாழ். விசேட நிருபர்**



யாழில், கொரோனா தொற்றுக்குள்ளாகி 62 வயதுப் பெண் உயிரிழந்தார். இப்பெண் பிரான்ஸிலிருந்து ஆயுர்வேத சிகிச்சைக்காக இங்கு 06

## நெல் கொள்வனவு நாளை முதல் மீண்டும் ஆரம்பம்

புத்தாண்டு காலத்தை முன்னிட்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த நெல் கொள்வனவு செயற்பாடுகள், நாளை புதன்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தல்மல்கொட தெரிவித்துள்ளார். 06

### 3,798 மில்லியன் ரூபா பெறுமதியான

## பாரிய போதைக் கடத்தல் ஆழ்கடலில் முறியடிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பெருந்தொகை போதைப் பொருட்களுடன் ஆறு சந்தேக நபர்களை 06


## கொங்கிறீட் ஒட்டகச்சிவிங்கி உடைந்து விழுந்து சிறுவன் பலி



கொங்கிறீடினால் உருவாக்கப்பட்ட ஒட்டகச்சிவிங்கி சிலை உடைந்து வீழ்ந்ததில் 08 வயது சிறுவன் உயிரிழந்துள்ளதாக 06

## ஜனாதிபதி தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் யாருக்கு ஆதரவு

### தமிழ் மக்களுக்கு வெளிப்படையாகக் கூற வேண்டும்



ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மக்களைக் கோருவதில், யாரோ ஒரு ஜனாதிபதி வேட்பாளரை வெற்றியடையச் செய்யும் நோக்கம் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ். சுன்னாகம் பகுதியிலுள்ள அவரது இல்லத்தில் (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே, அவர் இதனை கூறியுள்ளார். இதுபற்றி 06

### வீதி, ஒழுங்கு விதிமுறைகள் மீறல்

## பஸ் சாரதிகள் குறித்து அறிவிக்க 1955 Hotline இலக்கம் அறிமுகம்



வீதி, ஒழுங்கு விதிமுறைகளை மீறும் பஸ் சாரதிகள் தொடர்பில் உடனடியாக அறிவிப்பதற்கு துரித தொலைபேசி இலக்கம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பான முறைப்பாடுகளை 1955 என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது. இந்தத் தொலைபேசி 24 மணி நேரமும் 06

## நுகர்வோர் சட்டத்தை மீறிய 700 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு



நாடளாவிய ரீதியில் பண்டிகைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் நுகர்வோர் சட்டத்தை மீறிய 726 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

விலைப்பட்டியலின்றி பொருட்களை விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பில் இவர்களுக்கு எதிராக வழக்கு தொடரவுள்ள 06

## தொடர் மழை வீழ்ச்சி: டெங்கு நோயாளர் தொகை அதிகரிப்பு

### கொழும்பில் மட்டும் 4,527 ஆக பதிவு



டெங்கு நோயாளர் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது. இவ்வருடம் இதுவரை 21,028 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக டெங்கு நோயாளர் பதிவாகியுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 06

# நகர்வலம்



## பூஜாப்பிட்டிய பிரதேச சபை

# முன்னாள் உப தலைவருக்கு இனந்தெரியாதோர் அச்சுறுத்தல்

பூஜாப்பிட்டிய பிரதேச சபை முன்னாள் உப தலைவர் அப்துல் லத்தீப் மொஹமட் றஸானை இனந் தெரியாத நபர்கள் அவரின் இல்லத் திற்குச் சென்று அச்சுறுத்தல் விடுத் துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போது அவர் வீட்டில் இருக்க வில்லை. மனைவியிடமே அச்சுறுத் தல் விடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனது கணவர் வீட்டில் இல்லாத வேளை, இரு நபர்கள் வந்து எதிர் வரும் காலங்களில் மொஹமட் றஸான் அரசியல் நடவடிக்கைக ளில் ஈடுபடக் கூடாது என்று தெரி வித்துள்ளதுடன், அவர் அவ்வாறு அரசியல் நடவடிக்கைகளில் ஈடு பட்டால் கடுமையான நடவடிக் கையினை மேற்கொள்வோம் என்று அவருடைய மனைவி முஹாஜரீன் பாத்திமா முஸ்மினாவிடம் குறித்த நபர்கள் அச்சுறுத்தல் விடுத்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் அங்கும்புர பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

# சீகிரிய, தம்புள்ள, திருமலை நகரங்கள் சுற்றுலா வலயமாக அபிவிருத்தி

## ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

**திறப்பனை தினகரன் நிருபர்**



சீகிரிய, தம்புள்ள, திருகோண மலை ஆகிய நகரங்களை சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்யும் வேலை திட்டத்தை மீண்டும் ஆரம் பித்து வைப்பதற்கான நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உத வியுடன் மேற்படி திட்டம் முன்னெ டுக்கப்படவுள்ளது. கடந்த 2019 ஆம் வருட காலப்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்வேலைத் திட்டம் நாட்டில் ஏற்பட்ட கொவிட் பரவல் மற்றும் நாட்டில் ஏற்பட்ட பொரு ளாதார நெருக்கடி காரணமாக தற்கா லிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இவ்வருடத்தில் இவ்வே லைத் திட்டத்தை மீண்டும் ஆரம் பித்து வைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரனதுங்க தெரிவித்துள்ளார்.

## கற்பிட்டி

# அல் அக்ஸாவில் இன்று சிரமதானம்

**புத்தளம் தினகரன் நிருபர்**

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் இன்று செவ் வாய்க்கிழமை (16) இடம்பெறும் சிரமதான பணியில் பாடசாலை யின் சகல பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் என சகலரையும் கலந்து கொள் ளுமாறு கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.எப் சாஜீனாஸ் அறி வித்துள்ளார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் என்பவற்றின் ஒத்துழைப் புடனும் பெற்றோர்களின் பங்க ளிப்புடனும் இன்று காலை 7.30 மணி தொடக்கம் பி.ப 12.30 மணி வரை நடைபெறும் மேற்படி சிர மதான பணிக்கு சகலரையும் கலந் துகொள்ளுமாறு கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளது.

# இந்தோனேசிய தூதுவர் ஏற்பாட்டில் ஈதுல் பித்ர் ஒன்றுகூடல் நிகழ்வு



**ருஸைக் பாரூக்**

இலங்கைக்கான இந்தோனேசிய குடியரசின் தூதுவர் டெவி குஸ்டினா டோபிங் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் "ஈதுல் பித்ர்" ரமழான் பெருநாள் நிகழ்வொன்றை ஒழுங்கு செய்திருந்தார்.

இவ்வைபவத்தில் ஈரான், வியட் நாம், தென் ஆபிரிக்கா, தாய் லாந்து, சீனா, கியூபா, பாகிஸ்தான், நேபாளம் , எகிப்து மற்றும் பங்களா தேஷ் ஆகிய நாடுகளின் இலங்கை தூதுவர்களுடன் இந்தோனேசிய குடி யரசின் தூதுவர் டெவி குஸ்டினா டோபிங், ஈதுல் பித்ர் கேக் வெட்டிக் கொண்டாடினர். மலேசிய தூதரக கவுன்சிலர் மொஹமட் டுமிங், இந்தோனேசியா தூதரக கவுன்சிலர் லைலா கே யுனியார்டி, இலங்கை இந்தோனேசியா நட்புறவு சங்கத் தின் தலைவி மர்லீனா லக்சனா, அரப் நியூஸ் கொழும்பு செய்தியாளர் மொஹமட் ரசூல்தீன், வெளிவிவ கார அமைச்சின் மேலதிக செயலா ளர் சிதாரா கான், தூதரக அதிகாரிகள் மற்றும் விசேட அழைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு கொழும்பு, புதுச்செட்டியார்தெரு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் சிவன் கோவிலின் ஏற்பாட்டில் மாபெரும் தேர்ப்பவணி புறக்கோட்டைப் பகுதியில் பல்வேறு வீதிகளினூடாக உலா வந்தது. இதன்போது பெருமளவான கொழும்பு வாழ் தமிழ் பக்தர்கள் தேர்ப்பவணியில் கலந்து கொண்டதுடன் பல நூற்றுக்கணக்கான தேங்காய்களை உடைத்து தமது நேர்த்திக் கடன்களையும் நிவர்த்தி செய்தமையை அவதானிக்க முடிந்தது. (படங்கள் : கொழும்பு தினகரன் நிருபர்)

# மெல்போர்னில் ஈதுல் பித்ர் பெருநாள் நிகழ்வு



மெல்போர்னில் இலங்கை சமூகத்தினர் ஈதுல் பித்ர் பெருநாளை மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். இஸ்லாமிய சமூகம் மற்றும் ஆதரவு சங்கம் கடந்த 11ஆம் கிரனாட் என் பிரின்சஸ் சென்டரில், மல்கிரேவில் இலங்கையர்களின் பாரம்பரிய காலை உணவுடன் ஒன்றுகூடலும் இந்த ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் ஹலீம் எம்.பி உட்பட 400க்கும் மேற்பட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

# பப்புவா நியூகினி ஆளுநருக்கு 'சாதனைத் தமிழன்' விருது



பப்புவா நியூகினி தமிழ்ச் சங்கத்தின் சார்பாக தலைநகர் போர்ட் மோர்ஸ் பையில் நடந்த தீப விழாவில், பப்புவா நியூகினி மேற்கு நியூ பிரிட்டன் மாகா ணத்தின் ஆளுநரான, தமிழ்நாடு, சிவ காசியைப் பிறப்பிடமாகக் கொண்ட சசீந் திரன் முத்துவேல் சாதனை தமிழன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அவருக்கான 'சாதனைத் தமிழன்' விருதை பப்புவா நியூகினி வாழ் இலங் கைத் தமிழரும் மேற்படி பல்கலைக்க ழக நிறுவனத் தலைவருமான மாணிக் கம் நடேசலிங்கம் வழங்கினார். ஆளுநர் சசீந்திரன் முத்துவேல், மேற்கொண்ட உயரிய சேவைகளுக்காக, அவருக்கு பப்புவா நியூகினி நாட்டு அரசாங்கம் பல்வேறு விருதுகளையும் பட்டங்களை யும் வழங்கியுள்ளது.

அத்துடன் அண்மையில், இந்திய நாட்டின் உயர்ந்த விருதான பத்மசிறி விருதுக்கும் அவர் தெரிவாகியுள்ளார். பப்புவா நியூகினியாவில் நடைபெற்ற தீப விழாவில் பப்புவா நியூகினி வாழ் தமிழ் மக்களும், தமிழ்ச் சங்கத்தினரும் கலந்து சிறப்பித்தனர்.

# மின்னல் தாக்குதலில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் மஹகும்புக்கடவல, ஹோம்ப கஸ்வெவ பகுதியில் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகி குடும்பஸ்தர் ஒருவர் கடந்த சனிக் கிழமை (13) மாலை உயிரிழந் துள்ளார்.

மஹகும்புக்கடவல, ஹோம்ப கஸ்வெவ பகுதியைச் சேர்ந்த லேன்ந் துவாகே விமல் சோமஸ்ரீ (வயது 56) எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள் ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற தினம் மாலை உயிரிழந்த நபர் தனது விவசாய நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது மின்னல் தாக் குதலுக்கு உள்ளானதாக தெரிவிக்கப் படுகிறது.

இதன்போது, மின்னல் தாக்கு தலுக்கு உள்ளான குறித்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக மஹகும்புக்கடவல கிராமிய வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் ஏற்கனவே உயிரி ழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரி வித்துள்ளனர்.

புத்தளம் பகுதிக்கு பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிசாம், மின்னல் தாக்குதலில் உயி ரிழந்த நபரின் சடலம் மீதான மரண விசாரணையை நடத்தினார்.

# நுகர்வோர் அதிகார சபையினால் சோதனை

**திறப்பனை தினகரன் நிருபர்**

நிர்ணய விலையை மீறி அரிசி, அழகு சாதனப் பொருட்கள் மற்றும் இலத்திரனி யல் உபகரணங்களை விற்பனை செய் பவர்களை கண்டறிவதற்காக 7,500 க்கும் அதிகமான விசேட சோதனை நட வடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ள தாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. அதன்படி இந்த வரு டத்தில் இது வரையான காலப்பகுதியில் சுமார் 7662 சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை விடுத்துள்ள அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பண்டிகை காலங்களில் பொருட்களை கொள்வனவு செய்யும் போது காலாவதி திகதி மற்றும் அதன் தரம் தொடர்பில் மிகவும் அவதானமாக செயல்படுமாறு நுகர்வோர் விகார அதிகார சபை பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது .

# தமிழ், சிங்கள புத்தாண்டில் யாசகர்களை மகிழ்விக்கும் விசேட திட்டம் முன்னெடுப்பு

## இரண்டாவது வருடமாகவும் பாணந்துறையில் நடைபெற்றது



**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

தமிழ் சிங்கள புத்தாண்டை முன் னிட்டு பாணந்துறை நகரப் பகு தியில் பல்வேறு பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ள மனிதர்களான யாசகர்களையும் தமிழ் சிங்கள புத் தாண்டுக்கு தயார்படுத்தி மகிழ்விக்கும் முன்மாதிரியான சிறந்த மனித நேய வேலைத் திட்டம் இரண்டாவது வருடமா கவும் பாணந்துறையில் முன்னெடுக் கப்பட்டது.

பாணந்துறை பிரபல சமூக வலைத் தளம் மற்றும் சுயாதீன செய்தியாள ரான சமன் காரியவசத்தின் ஏற்பாட்டில் பல்வேறு மனிதநேய ஆர்வலர்களின் அனுசரணையுடனும் அரச துறைசார்ந்த அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இத்திட் டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட் டது. வெளிநாட்டில் உள்ள இலங்கையர் களும் இத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினர்.

'யாசகர்களும் மனிதர்கள்; இவர்களை யும் மனிதர்களாக மதிக்க வேண்டும், புத்தாண்டில் அவர்களையும் மகிழ்ச்சி யுறச் செய்தல் வேண்டும்' எனும் திட் டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க பங்களிப்புச் செய்த உள்நாட்டு வெளி நாட்டு மக்கள் மற்றும் பொலிஸ் உய ரதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் சிகையலங்கார நிலையங்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்த திட் டத்தின் முன்னோடி சுயாதீன செய்தியா ளர் சமன், அப்பாவி மனிதர்களுக்கு உதவியதில் அனைவரும் பெருமகிழ்ச்சி யடைவதாகவும் தெரிவித்தார்.

# இளைஞர் மீது பொலிஸார் தாக்குதல்

## இரு பொலிஸார் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மதவாச்சி பொலிஸ் பகுதி யில் வைத்து 23 வயதுடைய இளைஞர் பொலிஸாரால் தாக் கப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டு பொலிஸ் உத்தியோகத் தர்கள் கைது செய்யப்பட்டுள்ள னர்.

மதவாச்சி பொலிஸ் நிலையத் தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் கான்ஸ்ட பில் ஒருவருமே கைது செய்யப் பட்டுள்ளனர்.

கடந்த 07 ஆம் திகதி பொலிஸ் உத்தரவை மீறி பயணித்த லொறியை பின்தொடர்ந்து சென்று நிறுத்தி அதிலிருந்தவர் களை கைது செய்ய முற்பட்ட போது இந்த தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த இளைஞர் மதவாச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அநுராதபுரம் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு அங்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச் சையின் போது அவரது விதை யொன்று அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஏப்ரல் 16 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.46
ளுஹர் - 12.12
அஸர் - 03.19
மஃரிப் - 06.19
இஷா - 07.30

**இன்றைய சுபதினம்**
குரோதி வருடம் சித்திரை 04
ராகுகாலம் : காலை : 3.04 - 4.34வரை
சுபநேரம் : பகல் : 10.34 - 12.04வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# நுவரெலியா சித்திரை புத்தாண்டு நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பு

நுவரெலியா சித்திரைப் புத்தாண்டு நிகழ்வில் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க பங்கேற்றார்.

நுவரெலியா மீபிலிபான "அபி யூத்" இளைஞர் அமைப்பினர் நுவரெலியா மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் என்பவற்றுடன் இணைந்து (14) இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

பாரம்பரிய சம்பிரதாயங்களுக்கு அமைவாக, நடைபெற்ற இந்நிகழ்வில், விளையாட்டு மற்றும் கலாசார அம்சங்கள் பலவும் உள்ளடங்கியிருந்தன.

புத்தாண்டு நிகழ்வு நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில போட்டிகளைக் கண்டுகளித்த பின்னர், அங்கு நடைபெற்ற சைக்கிளோட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.





சித்திரைப் புத்தாண்டு நிகழ்வை கண்டுகளிக்க வந்த பிரதேச மக்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடிய ஜனாதிபதி மக்கள் முன்வைத்த பிரச்சினைகளுக்கு தீர்வைத் தருவதாக உறுதி அளித்தார்.

இதற்கு இணையாக நாடளாவிய ரீதியில் உள்ள பல பிரதேச செயலக பிரிவுகளிலும் இம்முறை தமிழ் சிங்களப் புத்தாண்டு நிகழ்வு ஏற்பாடு செய்யப்படிருந்தது.

கடந்த வருடத்தை விடவும் இம்முறை அதிகளவில் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள் ஏற்படு செய்யப்பட்டமை சிறப்பம்சமாகும்.

நுவரெலியா மீபிலிபான சித்திரைப் புத்தாண்டு நிகழ்வில் சுற்றுலா, காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவும் கலந்து கொண்டார்.

# ஹெந்தலை ரஜமஹா விகாரையில் எண்ணெய் வைக்கும் தேசிய நிகழ்வு

தமிழ்,சிங்கள புத்தாண்டு விழாவின் தலைக்கு எண்ணெய் வைக்கும் தேசிய நிகழ்வு (15) வத்தளை ஹெந்தலை ரஜமஹா விகாரையில் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்றது.

சுதேச மருத்துவ அமைச்சு இந்த தேசிய நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. சுப வேளையான முற்பகல் 10.17 மணிக்கு ஹெந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி ஹிக்கொட சந்திம நாயக்க தேரர், பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைக்கு எண்ணெய் வைத்தார்.

இதனைத் தொடர்ந்து இந்த தேசிய நிகழ்வில் பங்கேற்ற மக்களுக்கு மகா சங்கத்தினர் எண்ணெய் வைத்தனர்.

தலைக்கு எண்ணெய் தேய்க்கும் நிகழ்வில் எதிர்பார்த்தபடி மக்களுக்கு நோய் நொடிகளற்ற ஆரோக்கியமான வாழ்வுக்கு பிரார்த்திப்பதாக பிரதமர் தெரிவித்தார்.இத்தினத்தில்,சுதேச வைத்தியர்கள் மற்றும் சகல விகாரைகளுக்கும் சிங்கள புத்தாண்டு பஞ்சாங்கங்களை வழங்கவும் அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்நிகழ்வில் சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி, இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன, சுகாதார செயலாளர் பாலித மஹிபால மற்றும் அரச அதிகாரிகள், பிரதேசவாசிகள் கலந்துகொண்டனர்.



# அமெ.டொலரின் பெறுமதி; மாற்றங்கள் எதுவுமில்லை

அமெரிக்க டொலரின் கொள்வனவு மற்றும் விற்பனை விலைகள் கடந்த வாரத்தைப்போன்றே நேற்றும் பொதுவானதாக காணப்பட்டது.இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நேற்றைய (15) நாணய மாற்று வீதங்களுக்கமைவாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபா நேற்று நிலையாக காணப்பட்டுள்ளது.

நீண்ட விடுமுறைக்குப் பின்னர் நேற்றைய தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 293.7979 ரூபாவாக காணப்பட்டது. விற்பனை விலை 303.2586 ரூபா என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.




# 2024 ம் ஆண்டு வாக்காளர் இடாப்பு மே 06 வரை பார்வையிட வாய்ப்பு

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*


2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மறு பரிசீலனை பட்டியல் தற்போது வாக்காளர்களின் பார்வைக்காக வெளியிடப்பட்டுள்ளதாக, தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

சகல மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபை நிறுவனங்கள் மற்றும் அனைத்து கிராம உத்தியோகத்தர் காரியாலயங்களிலும் அது பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறு மறுபரிசீலனை செய்யப்பட்ட வாக்காளர் இடாப்பு மேற்படி இடங்களில் எதிர்வரும் மே மாதம் (06) வரை காட்சிக்கு வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் அந்த பட்டியலில் தமது பெயர் உள்வாங்கப்படவில்லை என தெரியவரும் வாக்காளர்கள், இது தொடர்பில் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் தமது முறைப்பாட்டை முன்வைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாவனை அதிகரிப்பால் முட்டை விலை உயர்வு



நாட்டில் சில நாட்களாக குறைவடைந்திருந்த முட்டையின் விலைகள், தற்போது மீண்டும் அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.கடந்த காலங்களில் 38 ரூபாவாக காணப்பட்ட முட்டையின் விலை தற்போது 55 ரூபாவாக உயர்ந்துள்ளது. அத்துடன், உள்நாட்டில் முட்டைகளுக்கு தட்டுப்பாடு நிலவும் பட்சத்தில் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில், கேக் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் உற்பத்திக்காக அதிகளவில் முட்டைகள் பயன்படுத்தப்பட்டதாலேயே முட்டை விலைகள் அதிகரித்துள்ளன.

# இஸ்ரேலிலுள்ள இலங்கையருக்கு எந்தவித பாதிப்புகளும் இல்லை

## இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவிப்பு

இஸ்ரேலிலுள்ள இலங்கையரின் பாதுகாப்பு தொடர்பில் அங்குள்ள இலங்கை தூதரகம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாகவும், அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் தேவையற்ற அச்சத்தை தவிர்க்குமாறும் தூதரகம் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது அண்மையில்ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது. ஆனால், இஸ்ரேலின் வான் பாதுகாப்பு கட்டமைப்பு அவை அனைத்தையும் முறியடித்துள்ளது. ஒரு சிறுமி இதில், காயமுற்றுள்ளார். இது தவிர, இஸ்ரேலில் வேறு எவருக்கும் ஈரானின் தாக்குதலால் பாதிப்பு ஏற்படவில்லை என தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தனது முகநூல் ஊடாக இலங்கையர்களுக்கு அனுப்பியுள்ள குறிப்பிலேயே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

பிளை துபாய் ஏர்லைன்ஸுக்குச் சொந்தமான FZ 1625 விமானம் துபாயிலிருந்து டெல் அவிவ் நோக்கி கடந்த (13) 20.10 மணிக்குப் பயணித்துக் கொண்டிருந்த போது வான் வழித் தாக்குதல் பற்றிய தகவல் தெரியவந்துள்ளது.

அந்த விமானத்தில் இஸ்ரேலுக்கு வரவிருந்த இலங்கையர் இருந்ததாகவும், அவர்கள் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலவரப்படி, ஜோர்டான், லெபனான், ஈராக், இஸ்ரேல் போன்ற நாடுகளை கடந்து செல்லும் விமானங்கள், அப்பகுதியைத் தவிர்த்து, வேறு வழிகளில் ஐரோப்பாவின் பல நாடுகளுக்குத் செல்வதால், உரிய பயணங்களுக்கான நேரமும், பயணச்சீட்டு கட்டணமும் அதிகரித்துள்ளது.

ஜெருதசலத்தில் கனசகர் Jerusalem Ganjshakar மைதானத்தில் கடந்த 13இல், புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ள தூதுவர்.

இதில் சுமார் இரண்டாயிரம் இலங்கையர் கலந்துகொண்ட தாகவும் தெரிவித்தார். இரவு 9.00 மணி வரை இந்நிகழ்ச்சி வெகு சிறப்பாக இடம் பெற்றது.

# ஜும்ஆ தொழுகைக்கு சென்ற எகிப்து பிரஜை, பின் கதவால் தப்பியோட்டம்

வெலிசறை குடிவரவு குடியகல்வு தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எகிப்து பிரஜையொருவர் தப்பிச் சென்றுள்ளார்.

வத்தளை, மாபோலை ஜும்ஆ பள்ளிவாசலுக்கு தொழுகைக்காக அழைத்துச் செல்லப்பட்ட இவர், பள்ளிவாசலின் பின் கதவின் ஊடாக தப்பிச் சென்றுள்ளதாக மஹபாகே பொலிஸார் தெரிவித்துள்ளனர். முஹமத் நசீர் ஏ பீ டி அல் சபா நசீர் என்பவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் கூறினார்.

இவருக்கு எதிராக எந்தவிதமான குற்றச் சாட்டு அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளோ இல்லையெனவும், விசா காலம் முடிவடைந்து நாட்டில் தங்கியிருந்த குற்றச்சாட்டின் பேரில் சீகிரிய பொலிஸ் நிலையத்தினால் கைது செய்யப்பட்டு ஆஜர்படுத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மஹபாகே பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொக்கெய்ன் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பெண் அதிரடிக் கைது

## சுமார் ரூ.03 கோடி பெறுமதியென மதிப்பீடு

கொக்கெய்ன் போதைப் பொருளுடன் வெளிநாட்டுப் பெண் ஒருவர் கைதாகியுள்ளார்.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி 03 கோடி ஐம்பது இலட்சம் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது. சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் குழுவினர் இப்பெண்ணை கடந்த வெள்ளிக்கிழமை (12) கைது செய்தனர்.

38 வயதான மடகாஸ்கர் பெண்ணான இவர் போதைப் பொருளை 75 சிறு, சிறு உருண்டைகளாக விழுங்கியபடி நாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்.



முதலில் எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபாவிலிருந்து இந்தியாவின் மும்பைக்கு வந்து, அங்கிருந்து கடந்த (12) பிற்பகல் 04.00 மணியளவில், விஸ்டாரா ஏர்லைன்ஸ் விமானம் UK131 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

விழுங்கிய பின்னர் வயிற்றுக்குள் கசிவு ஏற்படாமல் இருக்க, கொக்கெய்ன் போதைப் பொருளை ஆணுறைகளுக்குள் போட்டு, செலோ டேப்பால் ஒட்டியபின் விழுங்கியுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணை நீர்கொழும்பு பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அவர் விழுங்கிய கொக்கெய்ன் மாத்திரைகளை அகற்ற, பேதி மாத்திரை வழங்கி போதைப் பொருள் உருண்டைகள் அகற்றப்பட்டன.

விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் இப்பெண் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

# பண்டிகைக் கால விபத்துக்களில் 164 பேர் பாதிப்பு; 10 பேர் உயிரிழப்பு

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

பண்டிகைக் காலங்களில் விபத்துக்கள் குறைவடைந்து காணப்பட்டதாகவும் கடந்த 24 மணித்தியாலங்களில் பதிவான எட்டு வீதி விபத்துக்களில் பத்துப் பேர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். இந்த 8 விபத்துக்களில் ஐந்து விபத்துக்கள் வீதியில் இடம்பெற்ற வாகன விபத்துக்களாகும். சாரதிகளின் கவனக்குறைவாலேயே பல வீதி விபத்துக்கள் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கடந்த 24 மணித்தியாலங்களில் பல்வேறு விபத்துக்கள் காரணமாக 162 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வான வேடிக்கைகள் மற்றும் பட்டாசுகளினால் அனர்த்தங்கள் எதுவும் பதிவாகவில்லை என்றும், கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் புத்தாண்டு தினத்தில் இடம்பெற்ற விபத்துக்களின் எண்ணிக்கை இம்முறை குறைவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீராடிய தம்பதிகள் உயிரிழப்பு

## கணவனைக் காணவில்லை; மனைவி பலி

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்ற பெண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன் அவரது கணவர் காணாமற் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். நீராடிக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள பெண் 22 வயதுடையவர் எனவும் காணாமற்போன அவரது கணவர் 28 வயதானவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 04ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 07

## குறள் தரும் சிந்தனை



தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

கற்புநெறியில் தன்னையும் தன் கணவனையும் காத்துக் கொண்டு, தமக்குப் பெருமை சேர்க்கும் புகழையும் காப்பாற்றிக் கொள்வதில் உறுதி குலையாமல் இருப்பவள் பெண்.

# இந்திய அரசியல்வாதிகளின் தேர்தலுக்கான ஆயுதம்!

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் நிலையில், கச்சதீவு விவகாரம் பிரதான இடத்தைப் பிடித்திருக்கின்றது. தமிழ்நாட்டில் மக்களின் வாக்குகளை வசீகரிப்பதற்காக மாநில ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகமும் மத்திய ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சியும் கச்சதீவு விவகாரத்தை துரும்பாக வைத்து ஏட்டிக்குப் போட்டியான விதத்தில் அனல் பறக்கும் கருத்துகளை வெளியிட்டு வருகின்றன.

இலங்கைக்குச் சொந்தமான கச்சதீவை இந்தியா மீளப்பெற்றுக் கொள்வதென்பது இனிமேல் நடைமுறைச் சாத்தியமான விடயமல்ல. இந்தியாவில் இந்திரா காந்தியும், இலங்கையில் சிறிமாவோ பண்டாரநாயக்கவும் பிரதமர்களாகப் பதவி வகித்த காலப்பகுதியில் இரு நாட்டு அரசாங்கங்களுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட நட்புறவுப் பரிமாற்றம் அதுவாகும்.

அவ்வாறிருக்கையில், இலங்கைக்குச் சொந்தமாகவுள்ள கச்சதீவை இந்தியா எதிர்காலத்தில் மீளப்பெற்றுக் கொள்வதென்பது நடைமுறைச் சாத்தியமான விடயமல்ல. இந்தியாவில் இன்னும் இரண்டொரு தினங்களில் ஆரம்பமாகவிருக்கின்ற தேர்தல் கருதியே அங்குள்ள அரசியல்வாதிகள் இவ்வாறான வெறும் கோஷங்களை எழுப்பி வருகின்றனர்.

இலங்கையின் வடபகுதிக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிக்கும் சம்பவங்கள் நீண்ட காலமாகத் தொடர்ந்து வருகின்றன. இந்திய மீனவர்களின் சட்டவிரோதமான இந்நடவடிக்கை தொடர்பாக இலங்கை மீனவர்களாலும் அரசாங்கத்தினாலும் தொடர்ச்சியாக கண்டனங்கள் எழுப்பப்பட்டு வருகின்ற போதிலும், தமிழக மீனவர்கள் தங்களது அத்துமீறலை இன்னுமே நிறுத்திக் கொள்வதாக இல்லை.

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடிப்பது சட்டபூர்வமான செயலென்றே தமிழக அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டு வருகின்றனர். தமிழகக் கரையோர மீனவர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக தமிழக அரசியல்வாதிகள் நடத்துகின்ற நாடகம் இதுவாகும். இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறுகின்ற இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்வது சட்டவிரோதமான செயலென்றும் தமிழக அரசியல்வாதிகள் கூறி வருகின்றனர்.

தமிழக அரசியல்வாதிகள் தங்களது அரசியல் ஆதாயத்துக்காக வெளியிடுகின்ற இவ்வாறான கருத்துகளாலேயே தமிழக மீனவர்கள் துணிச்சலுடன் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித்து வருகின்றனர். தமிழக அரசியல்வாதிகளின் நீதிக்குப் புறம்பான கருத்துகளாலேயே தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறுகின்றனர்.

தமிழக மீனவர்களின் அத்துமீறலுக்கு மேலும் ஆதரவளிக்கும் வகையில் ஆரம்பத்திலேயே தமிழக அரசியல்வாதிகள் கச்சதீவு விவகாரத்தைக் கையில் எடுத்தனர். கச்சதீவை இலங்கையிடமிருந்து இந்தியா மீளப்பெற வேண்டுமென்பதே தமிழக அரசியல்வாதிகள் பலரின் நீண்டகாலக் கோரிக்கையாகும். தமிழக மாநிலத்தில் ஆளும் கட்சியான தி.மு.கவின் நீண்டகாலக் கோரிக்கையும் இதுவாகும்.

கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தமாகி விட்டால், தமிழக மீனவர்களுக்குப் பிரச்சினை இருக்கப் போவதில்லை. தமிழக மீனவர்கள் கச்சதீவு வரை சென்று தாராளமாக மீன்பிடிக்கலாம். தங்களது வலைகளைக் காயவைப்பதற்கும், இளைப்பாறுவதற்கும் கச்சதீவைப் பயன்படுத்தலாமென்று தமிழக அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

தமிழக அரசியல்வாதிகளின் இக்கோரிக்கையின் பின்னணியிலும் அரசியல்தான் உள்ளது. கச்சதீவை இந்தியா மீளப்பெற வேண்டுமென வலியுறுத்துவதன் மூலம் மீனவர்களின் வாக்குகளை வசீகரிக்க முடியுமென தி.மு.க நம்புகின்றது. தி.மு.க மாத்திரமன்றி, தமிழக அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவை கச்சதீவை இந்தியா மீளப்பெற வேண்டுமென்றே வலியுறுத்தி வருகின்றன.

இவ்விடயத்தில் இன்னொரு வேடிக்கையும் உள்ளது. கச்சதீவை இந்தியா மீளப்பெற வேண்டுமென்று தமிழக அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்ற போதிலும், ஆளும் பாரதீய ஜனதா கட்சி முன்னர் இந்த விடயத்தை கவனத்தில் எடுத்ததே கிடையாது. அதுமாத்திரமன்றி, தமிழக அரசியல்வாதிகளின் இக்கோரிக்கையை பா.ஜ.க பரிசீலனை செய்ததும் இல்லை. கச்சதீவு விடயத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை பா.ஜ.க அலட்சியம் செய்து வந்ததென்பதே உண்மை.

கடந்தகால நிலைமை இவ்வாறிருக்கையில், கச்சதீவை மீளப்பெற வேண்டுமென்பதில் பா.ஜ.கவினரே தற்போது அதிகம் குரலெழுப்பி வருவதைக் காண முடிகின்றது. தமிழக மண்ணிலேயே பா.ஜ.கவினர் கச்சதீவு விவகாரத்தில் அதிக கரிசனை செலுத்தி வருகின்றனர். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் தமிழகத்திற்கு வருகை தந்திருந்த வேளையிலும் கச்சதீவு விவகாரத்தை முன்னிலைப்படுத்தியிருந்தார்.

காங்கிரஸின் தவறினாலேயே கச்சதீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்டதாக நரேந்திர மோடி கண்டனம் வெளியிட்டார். இந்திய தேசத்துக்கு அதிக பாதிப்புகளை காங்கிரஸ் இழைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார். கச்சதீவு விவகாரத்தில் இதுவரை மௌனம் காத்து வந்த பா.ஜ.கவினர் தற்போது இவ்விடயத்தை கையில் எடுத்திருப்பது அரசியல் ஆதாயத்துக்காக என்பதில் சந்தேகமில்லை.

இந்நிலையில் கச்சதீவு விவகாரம் தற்போது முன்னிலைப்படுத்தப்படுவதை தமிழகத் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியமானது. 'தொப்புள்கொடி' உறவுக்குப் பங்கம் ஏற்படாத விதத்தில் இருநாட்டுத் தமிழர்களும் அவதானம் பேணுவது அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

# இன்னும் மூன்று தினங்களில் இந்தியத் தேர்தல் ஆரம்பம்



## முதல் கட்டமாக தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் 19ஆம் திகதி வாக்குப்பதிவு; தமிழக பிரசாரக் கூட்டங்கள் நாளை மாலையுடன் முடிவு!

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகின்றது. லோக்சபா தேர்தல் நாடு முழுவதும் 7 கட்டங்களாக நடைபெறுகிறது. முதல் கட்டமாக தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் எதிர்வரும் 19 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பல கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறும் நிலையில் புதுச்சேரி, தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடக்கிறது.

இந்திய தேர்தலுக்கான ஏற்பாடுகள் நாடு முழுவதும் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்தியா கூட்டணியில் தி.மு.க, காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் உள்ளன. எதிர்க்கட்சியான அ.தி.மு.க அணியில் தே.மு.தி.க, புரட்சிப் பாரதம், புதிய தமிழகம் உள்ளிட்ட பலவேறு கட்சிகள் உள்ளன. மறுபுறம், மூன்றாம் அணி அமைத்துள்ள பா.ஜ.க கூட்டணியில் பா.ம.க, புதிய நீதிக் கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் உள்ளன.

தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, பிரதமர் மோடி 7 முறை தமிழகத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். மோடிநேற்றும் தமிழகம் வந்திருந்தார். அதேபோல், இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டுவதற்காக அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைவர் ராகுல் காந்தி கடந்த 12 ஆம் திகதி திருநெல்வேலியில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு திருநெல்வேலி, தென்காசி, மதுரை உள்ளிட்ட தொகுதிகளின் வேட்பாளர்களை ஆதரித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்த ஆண்டில் 8ஆவது முறையாக பிரதமர் நரேந்திர மோடி தமிழகம் வந்துள்ளார்.

தமிழகத்தில் நாளை 17 ஆம் திகதி மாலை 6 மணியுடன் தேர்தல் பிரசாரம் முடிவடைய உள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு தெரிவித்தார். தமிழகத்தில் 19ம் திகதி லோக்சபா தேர்தல் ஒரே கட்டமாக நடைபெறுகிறது. இதற்கான பிரசாரம் நாளை முடியவுள்ள நிலையில், பிரசாரம் சூடுபிடித்துள்ளது.

அரசியல் கட்சி தலைவர்கள் பிரசாரங்களை தீவிரப்படுத்தியுள்ளார்கள். பிரதமர் மோடி நேற்று மீண்டும் தமிழ்நாடு வருகை தந்து நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். திருவனந்தபுரத்தில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் நேற்று மாலை 4 மணி அளவில் அகஸ்தியர்பட்டிக்கு வந்து சேர்ந்த மோடி, மாலை 4.20 மணி முதல் 5.00 மணி வரை நடைபெற்ற கூட்டத்தில் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி தொகுதி பா.ஜ.க கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரசாரம் மேற்கொண்டார்.

# இனநல்லிணக்கத்தை பேணி வருகின்ற சிறந்த அரசியல் தலைவர் ரவூப் ஹக்கீம்

இலங்கை முஸ்லிம் அரசியலில் சர்வதேசமறிந்த தலைவர்,சிறந்த அரசியல் இராஜதந்திரி, சட்ட முதுமாணி, கவிஞர், சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், மும்மொழித்தேர்ச்சி மிக்கவர் என பல்வேறு துறைகளில் தடம்பதித்த ஆளுமைமிக்க ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி அகவை 64 ஐ எட்டியிருக்கிறார்.

கண்டி குருந்துகொல்லையை பிறப்பிடமாகவும் கலகெதரயை வசிப்பிடமாகவும் கொண்ட நூர் முஹம்மத், ரவூப் ஹக்கீமின் தந்தைவழி பாட்டனார் ஆவார். சிங்கள மற்றும் தமிழ் மொழியாற்றல் மிக்க அவர் கவிஞராகவும், எழுத்தாளராகவும் இருந்தார். அவர் திருக்குர்ஆனில் சில பகுதிகளை சிங்கள மொழியில் மொழி பெயர்த்ததோடு, சிங்கள மொழியில் 'இஸ்லாம் யனு குமக்த' (இஸ்லாம் என்பது என்ன?) என்ற கேள்வி, பதில் அமைப்பிலான நூலையும் அச்சிட்டு வெளியிட்டிருந்தார்.

'சத்திய இஸ்லாம் சன்மார்க்க வினா, விடை' என்ற ஐந்து கடமைகளின் விளக்கத்தை தமிழில் புத்தகமாக வெளியிட்டுமிருந்தார். சிங்கள பாடசாலையொன்றிலும் கூட முதன் முறையாக முஸ்லிம் அதிபராக நியமிக்கப்பட்ட நூர் முஹம்மது அவர்கள், கலகெதரயில் 'வாத்தியார் அப்பா' என அழைக்கப்பட்டார்.

இவ்வாறான சிறந்த குடும்பப் பின்னணியைக் கொண்டிருந்த அப்துல் ரவூப், ஹாஜரா தம்பதிகளுக்கு மூன்றாவது குழந்தையாக 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி நாவலப்பிட்டியில் அப்துல் ரவூப் ஹிப்பதுல் ஹக்கீம் பிறந்தார்.

**கல்வி மற்றும் தொழில்:**

ரவூப் ஹக்கீமின் ஆரம்பகால கற்றல் நடவடிக்கைகள் தந்தையோடு இணைந்து குடும்பமாக புலம்பெயர்ந்த பாடசாலைகளில் இருந்தாலும், ஆறாம் தரத்திற்கு அவர் தன் தந்தையின் கிராமமான கலகெதரவிலுள்ள ஜப்பார் மத்திய கல்லூரியில் சேர்க்கப்பட்டார். சிறுவயதிலேயே சிறந்த பேச்சாற்றலைக் கொண்டிருந்த ரவூப் ஹக்கீம் கண்டி மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட அனைத்து மொழி, வயது பிரிவுகளிளுமான மிகச்சிறந்த பேச்சாளருக்கான மலேஷிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கேடயத்தையும் வென்றிருந்தார். கலகெதரையில் பயின்று கொண்டிருந்த போது அக்காலப்பகுதியில் ஏழாம் தரத்தில் நடாத்தப்பட்டுவந்த 'நவோதய' புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி மிகச் சிறப்பாக சித்தியடைந்ததன் காரணமாக 1973 இல் கொழும்பிலுள்ள ரோயல் கல்லூரியில் கற்கும் சந்தர்ப்பத்தை அவர் பெற்றுக் கொண்டார்.

அவர் ரோயல் கல்லூரியில் தமிழ் நாடக மன்றத்தின் தலைவராக இருந்தார். ரோயல் கல்லூரியின் விவாதக் குழுவில் நான்கு வருடங்கள் உறுப்பினராக இருந்து பின்னர்அதன் தலைவராவும் அணியை வழிநடத்தினார்.

1976ம் ஆண்டு பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்தில், பாகிஸ்தானின் சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் ரவூப் ஹக்கீம் ரோயல் கல்லூரியிலிருந்து பங்கேற்று அந் நாட்டின் சிற்பி முஹம்மத் அலி ஜின்னா பற்றி சிறப்பாக எழுதியதற்காக தங்கப்பதக்கத்தை வென்றதோடு, பின்னர் 1979 ஆம் ஆண்டில் சிறந்த பேச்சாளருக்கான இராமநாதன் நினைவு விருதையும் வென்றார்.

பாடசாலைக் கல்வியை முடித்து விட்டு சட்டக் கல்லூரியில் இணைந்தார். அங்கும் தனது திறமைகளால் மிகச்சிறப்பாக அவர் செயற்பட்டார். சட்டக் கல்லூரி தமிழ் மன்றத்தின் தலைவராகவும் ரவூப் ஹக்கீம் இருந்தார்.

இங்கிலாந்தின் சொலிசிடர் பரீட்சையில் தேறியிருந்த ரவூப் ஹக்கீம் பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட முதுமாணி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார் .

கண்டி மாநகர சபை உறுப்பினராக இளம் வயதில் தெரிவு செய்யப்பட்ட பிரபல வர்த்தகரும், சமூக சேவையாளருமான இஸ்மாயில் முஹம்மத் குத்தூஸ் அவர்களின் ஒரே மகளான ஷானாஸ் என்பவரை ரவூப் ஹக்கீம் திருமணம் செய்து கொண்டார்.

ரவூப் ஹக்கீம்_ ஷானாஸ் தம்பதிகளுக்கு



அகவை 64 இல் தடம்பதிக்கிறார்

செய்னப், செய்தூன் என இரு பெண் பிள்ளைகள் உள்ளனர்.

ரவூப் ஹக்கீம் முதன் முதலாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸினூடாகவே அரசியலுக்குள் பிரவேசித்தார். சட்டக்கல்லூரியில் கற்றுக் கொண்டிருக்கும்போது முதன் முதலாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃப்பைச் சந்தித்தார். அதனையடுத்து அவருடன் அரசியலில் இணைந்தார்.

1988ம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து தலைவர் அஷ்ரஃப்பின் வேண்டுகோள்களின்படி சிறப்பாகச் செயற்பட்டது மாத்திரமின்றி, கட்சி வளர்ச்சிப் பணிகளிலும் ஹக்கீம் அயராது பாடுபட்டார். 1992 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளராக ரவூப் ஹக்கீம் நியமிக்கப்பட்டார்.

ரவூப் ஹக்கீமின் ஆளுமை பண்புகள்,கட்சி செயலாளராக சிறப்பாக செயற்பட்டமை, கட்சி வளர்ச்சியில் அவரது பங்களிப்பு என்பவற்றோடு தலைமைத்துவ விசுவாசம் கருத்திற் கொள்ளப்பட்டதால் 1994ம் ஆண்டு ரவூப் ஹக்கீமின் 34 ஆவது வயதில் தேசியப்பட்டியலூடாக பாராளுமன்ற உறுப்புரிமை அஷ்ரஃப்பினால் வழங்கப்பட்டது. அத்தோடு, பாராளுமன்றத்தில் குழுக்களின் பிரதித் தலைவராகவும் ரவூப் ஹக்கீம் நியமிக்கப்பட்டார்.

1998ம் ஆண்டு அரசியல் மற்றும் அரசாங்க விவகாரங்களுக்காக ஜெய்சீஸ் அமைப்பு வருடாவருடம் வழங்கும் சிறந்த இளைய அரசியல்வாதிக்கான விருதை வென்றுள்ள ரவூப் ஹக்கீம், கொழும்பு மாவட்ட பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பையும் வென்றவராவார் .

1999ம் ஆண்டு தலைவர் அஷ்ரஃப் தூர நோக்கோடு தேசிய ஐக்கிய முன்னணி கட்சியை ஆரம்பித்தார். முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளராக இருந்த ரவூப் ஹக்கீமை அப்பதவியில் இருந்து அகற்றி, தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளராக ஹக்கீமை அஷ்ரஃப் பதவிமாற்றம் செய்தார்

2000ம் ஆண்டு கண்டி மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி, மரச் சின்னத்தில் பாராளுமன்ற தேர்தலில் அஷ்ரஃப்பினால் ரவூப் ஹக்கீம் களமிறக்கப்பட்டார். வடக்கு, கிழக்கிற்கு வெளியே பிரதான அரசியல் நீரோட்ட தேசிய கட்சிகளில் அல்லாது ஒரு முஸ்லிம் கட்சியிலிருந்து ஒருவர் போட்டியிட்டு வெற்றி பெற்றமை அதுவே முதல் தடவையாகும்.

2000 ஆம் ஆண்டு அஷ்ரஃப்பின் திடீர் மறைவைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸிக்குள் தலைமைத்துவ வெற்றிடம் ஏற்பட்டது. இதன் காரணமாக ரவூப் ஹக்கீம் மற்றும் பேரியல் அஷ்ரஃப் ஆகிய இருவரும் கட்சி தலைமைத்துவத்திற்கு இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டார்கள். அதன் பின், சிறிது காலத்திலேயே சில முரண்பாடுகள் ஏற்பட, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராக பேரியல் அஷ்ரஃப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக ரவூப் ஹக்கீமும் நியமிக்கப்பட்டார்கள்.

2000 ஆம் ஆண்டு ரவூப் ஹக்கீம், உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகம், முஸ்லில் சமய விவகாரங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சராக சந்திரிக்கா அம்மையாரின் தலைமையிலான அமைச்சரவையில் நியமிக்கப்பட்டார்.

2001 ஆம் ஆண்டு ஒக்டோபரில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்டது. அதே ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கண்டியில் போட்டியிட்டு ரவூப்ஹக்கீம் மீண்டும் அங்கு வெற்றி பெற்றார்.

பாராளுமன்றத் தேர்தல் வெற்றியின் பின்னர் அமைக்கப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் துறைமுக அபிவிருத்தி, கப்பல் துறை, முஸ்லிம் விவகார மற்றும் கிழக்கு அபிவிருத்தி அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டார்.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தோடு செயற்படும் தலைவராக ரவூப் ஹக்கீம் விளங்குகின்றார். அவர் சிங்கள மக்களோடும்,தமிழ் மக்களோடும் சிறந்த உறவைப் பேணி வருகிறார். ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் இன நல்லுறவைப் பலப்படுத்தும் தலைவராக ரவூப் ஹக்கீம் உள்ளார்.





**எம்.என்.எம்.யஸீர் அறபாத்...**
ஓட்டமாவடி

# டெல்லி முதலமைச்சரின் தடுப்புக்காவல் நீடிப்பு

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் இந்தியாவின் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலின் நீதிமன்றத் தடுப்புக்காவலை ஏப்ரல் 23 ஆம் திகதி வரை நீடித்து ரோஸ் அவென்யூ நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

டெல்லி அரசின் மதுபானக் கொள்கையில் முறைகேடு நடைபெற்றதாக அம்மாநில முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் மீது பணமோசடி உள்பட பல்வேறு பிரிவுகளில் அமுலாக்கத்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது.

இந்த வழக்கில் விசாரணைக்கு ஆஜராகும்படி 9 முறை அழைப்பாணை அனுப்பியும் கெஜ்ரிவால் ஆஜராகவில்லை. இந்த அழைப்பாணையை எதிர்த்து டெல்லி உயர்நீதிமன்றத்தில் கெஜ்ரிவால் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு கடந்த மாதம் 20 ஆம் திகதி விசாரணைக்கு வந்தபோது கெஜ்ரிவால் மீதான சட்ட நடவடிக்கைக்கு தடை விதிக்க நீதிமன்றம் மறுத்து விட்டது.

இதனிடையே, மதுபானக் கொள்கை முறைகேடு வழக்கில் கெஜ்ரிவாலை கடந்த மாதம் 21ஆம் திகதி இரவு அமுலாக்கத்துறை கைது செய்தது. கைது செய்யப்பட்ட கெஜ்ரிவால் திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவரின் நீதிமன்றக் காவல் தொடர்ந்து நீடிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், கெஜ்ரிவாலின் நீதிமன்ற காவல் நேற்றுடன் நிறைவடைந்த



நிலையில், திகார் சிறையில் உள்ள அவர் நேற்று டெல்லி ரோஸ் அவன்யூ காணொலி காட்சி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.

அப்போது, கெஜ்ரிவாலை மேலும் விசாரிக்க வேண்டியுள்ளதால் அவரது நீதிமன்ற காவலை நீடிக்கவேண்டுமென அமுலாக்கத்துறை தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்தக் கோரிக்கையை ஏற்ற டெல்லி நீதிமன்றம், அரவிந்த் கெஜ்ரிவாலின் நீதிமன்றக் காவலை 23 ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டுள்ளது.

# முதுமைத் தோற்றம் ஏற்படக் காரணம்?

உடலின் உட்புற செயல்பாட்டிற்கு விட்டமின் பி 12 மிகவும் முக்கியமானது. மனித உடலில் 9 வகையான விட்டமின்கள் உள்ளன. இவற்றில் விட்டமின் பி12 மிக முக்கியமானது. விட்டமின் பி 12 மத்திய நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டை செயல்படுத்துகிறது.

ஆரோக்கியமான இரத்த சிவப்பணுக்களை உருவாக்குகிறது. விட்டமின் பி12 டி.என்.ஏ தொகுப்பை ஊக்குவிக்கிறது.

ஆனால், விட்டமின் பி12 குறைபாடு இருந்தால் மந்தமான சருமத்தை ஏற்படுத்தும். அதன் நிறத்தை இழக்கச் செய்யும். மேலும் முகத்தில் பருக்கள் மற்றும் சுருக்கங்கள் ஏற்படும். நேர்த்தியான கோடுகள் தோன்ற ஆரம்பிக்கும். இதன் காரணமாக, ஒரு நபர் தனது வயதிற்கு முன்பே வயதானவராகத் தோன்றத் தொடங்குகிறார்.



ஆரோக்கியமான சருமத்தை பராமரிக்க விட்டமின் பி12 மிகவும் நன்மை பயக்கும். உடலில் ஆற்றல், சிறந்த வளர்சிதை மாற்றம் மற்றும் நரம்பு மண்டலத்தை மேம்படுத்துவதைத் தவிர, இது தோல் மற்றும் முடிக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இது உங்கள் உடலில் உள்ள செல்களை மீளுருவாக்கம் செய்ய வேலை செய்கிறது. மேலும், இது தோல் அழற்சி, வரட்சி மற்றும் முகப்பருவை குறைக்க உதவுகிறது.

# இயேசு என்ற நல்லாயன்

## கத்தோலிக்க திருச்சபை நல்ல ஆயன் இயேசு என்ற திருவிழாவை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சிறப்பிக்கின்றது



இயேசுவைப் பல பெயர்களில் மக்கள் அழைத்தாலும் இயேசு தமக்குத் தாமே சூட்டிக் கொண்ட பெயர்களில் ஒன்று ஆயன். "நானே நல்ல ஆயன்" என யோவான் 10:11 இல் அவர் குறிப்பிடுகிறார்.

நமக்காக மரித்து உயிர்த்த இயேசுவின் உயிர்ப்பு விழா மகிழ்ச்சியைக் கொண்டாடும் இக்காலங்களில் நல்லாயனாம் இயேசுவைப் பற்றி தியானிப்பது சிறப்பானதாகும்.

ஆடுகளுக்கு நல்ல ஆயன் யார்? இயேசு எவ்வாறு நல்ல ஆயனாக செயற்படுகிறார் என்பது பற்றி சிந்திக்கும் முன், ஆடுகளைப் பற்றியும் அதன் குணநலன்களைப் பற்றியும் அறிவது அவசியம். ஆடுகள் ஒன்றை ஒன்று சார்ந்து கூட்டமாக வாழும். அவற்றால் சுயமாக செயல்பட முடியாது. வழி தவறி விடும். ஒன்றை ஒன்று எப்போதும் பின் தொடரும். அவை மிகவும் பலவீனமானவை என்பதால் எளிதில் பிற விலங்குகளுக்கு இறையாகி விடும்.

இந்த கூற்றுக்களை நோக்கும் போது இயேசுவும் இம் மக்கள் வலக்கைக்கும் இடக்கைக்கும் வேறுபாடு அறியாமல் செய்கிறார்கள் என்ற தந்தை கடவுளின் ஆதங்கத்தை அறிந்தவராய் சுயமாய் செயற்பட முடியாத ஆடுகளோடு மக்களையும் ஒப்புமைப்படுத்தி தம்மை நல்ல ஆயனாகவும் மக்களை ஆடுகளாகவும் உருவகப்படுத்துகின்றார்.

நல்ல ஆயன் எப்படிப்பட்டவர்? அவரது குணநலன்கள் என்ன? என்பதை திருப்பாடல் 23 மற்றும் யோவான் 10லும் காணலாம்.

நல்லஆயன் திருடனைப்போல் வேறுவழியாக வராமல் உரிமையுடையவராய் வாயில் வழியே ஆட்டுப்பட்டிக்குள் நுழைவார். நல்லஆயன் தம் ஆடுகளுக்கு பெயரிட்டு அழைக்கிறார். பழக்கமான ஆயனின் குரலை ஆடுகளும் அறியும். ஆடுகளைப் பசும்புல் உள்ள இடங்களைக் கண்டறிந்து அங்கு மேய்ச்சலுக்கு அழைத்து செல்வார். ஆடுகளின் முன்னே சென்று வழி நடத்துவார். அப்போதுதான் காட்டு விலங்குகள் வருவதை முன்னறிந்து, அவற்றிலிருந்து ஆடுகளை மீட்க முடியும்.

தேவையனில் ஆயன் தன் உயிரையும் கொடுப்பார். ஆனால் கூலியாள் சொந்த ஆயனைப் போல ஆடுகளைக் காப்பாற்றுவதில்லை. தனக்கு இடர் வரும் என அறிந்தால் ஆடுகளை விட்டுவிட்டு ஓடிவிடுவார். நல்ல ஆயன் தம் மந்தையில் ஒரு ஆடு காணமற் போனாலும் அதை கண்டுபிடித்து மீண்டும் மந்தையில் சேர்க்கும் வரை ஓயமாட்டார்.

இயேசுவும் நல்ல ஆயனாக திகழ்கிறார். நம் இதயமென்னும் வாசல் வழியே ஆடுகளாகிய நம்முன் நுழைந்து நம்மை ஆள்கிறார். நாள்தோறும் தம் வார்த்தை எனும் உணவைத் தருகிறார். தூய ஆவி எனும் நீரைத்துந்து இளைப்பாற்றுகிறார்.

சாவின் இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கு போல துன்பங்கள் வரும்போதும் உடன் இருந்து வழி நடத்துகிறார். ஆறுதல் தருகிறார். ஆடுகளாகிய நம்மை மீட்க தம்மையே சிலுவையில் பலியாக்கினார். அதை நாள்தோறும் திருப்பலியில் நிகழ்த்துகிறார்.

தாம் தேர்ந்தெடுத்த மக்களுக்காக மட்டும் அன்று எல்லா மக்களுக்காகவும் பலியாகிறார். இதனால் ஒரே மந்தையும் ஒரே ஆயனும் எனும் நிலையை ஏற்படுத்துகிறார். ஆடுகளாகிய நாமும் அவரது குரலுக்கு செவிசாய்த்து அவரின் வழி நடத்துதலை பின்பற்றும் போது வழி தவறாமல் நிலைவாழ்வை சென்றடைவோம்.




# உங்களுக்கு அமைதி உண்டாகுக



இயேசு சீடர்கள் மத்தியில் வந்து நின்று, அவர்களை உங்களுக்கு அமைதி உண்டாகுக என வாழ்த்தி தனது உடனிருப்பை அறிவிக்கிறார்.

அதன்பின் "நான் தான் அஞ்சாதீர்கள்" என தன் கைகளையும் கால்களையும் காண்பித்து தன்னை உறுதிப்படுத்தி கொள்கிறார்.

அப்பத்தைப் பிட்டு அவர்களின் மனக் கண்களையே திறந்து வைக்கிறார்.தான் உயிரோடு இருப்பதை உணர வைக்கிறார்.

சாட்சியாக வாழ ஊக்கப்படுத்தி அதிகாரத்தைக் கொடுத்து அவர்களை அனுப்பி வைக்கிறார்.

வாழ்வுக்கு ஊற்றான வரை நாங்கள் எங்களது பாவங்களினால், மீறுதல்களினால் கொன்று விட்டோம்.

ஆனால் கடவுள் அவரது திட்டப்படி இறந்த அவரை உயிரோடு எழும்பி வரச் செய்தார்.

உயிர்த்த அவர் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.பாவ இருளில் மூழ்கி இருக்கும் எம்மால் அவரைக் கண்டு கொள்ள முடியாது. எங்களது மனக்கண்களை திறந்து விடும்படி மகிமையின் மன்னராகிய இயேசுவிடம் மன்றாடுவோம்.

பாவ மன்னிப்பு பெற்று சாட்சிகளாக மாற நம்மை அர்ப்பணித்து ஆயத்தமாகுவோம். ஆவியினால் நிறைவடைந்து அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வோம்.

மறுபடி பிறக்க, எங்களை மறு ரூபமாக்க ஆவியின் வரங்கள் கொடைகளைப்பெற்று, அவரின் சாட்சிகளாக வாழ நம்மையே அர்ப்பணிப்போம். எழுந்து ஒளி வீசுவோம். அனைத்தைத் தையும் அவரே பார்த்து பதில் அளிக்கும் வரை பொறுமையாக காத்திருப்போம்.படைத்தவர் படியளப்பார். பாராமரிப்பார் பாதுகாப்பார். நடத்திச் செல்வார் என்ற உறுதியான நம்பிக்கை கொள்வோம்.

**எஸ்.ஜே.**

# யாழில் மருதமடு அன்னையின் திருச்சுரூப பவனி











மருதமடு அன்னையின் திருச்சுரூபம் இக் காலங்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள கத்தோலிக்க தேவாலயங்களுக்கு பவனியாக எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி பூசை நடத்தப்பட்டு மக்கள் வழிபாட்டுக்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. அண்மையில் இளவாலை, பெரிய விளான்புனித யுவானியார் ஆலயத்திற்கு மருதமடு அன்னையின் திருச்சுரூபம் வருகை தருவதையும் வழிபாட்டு நிகழ்வுகளையும் திருச்சுரூபத்தால் மக்களுக்கு ஆசீர்வாதம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். அருட்தந்தை அந்தனி மேரியன் தலைமையில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பெருமளவு விசுவாசிகள் இந்த வழிபாடுகளில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

படங்கள் உதவி: செல்வி ஜென்சி ஜோன்

# அன்றாட வாழ்வும் ஓர் அருளடையாளமே

பாஸ்கா காலத்தில் மூன்றாம் வாரத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். நம் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்து நம்முடன் வாழ்கின்றார் என்பதை சாட்சியம் பகர்வதாக இந்த ஞாயிறு நற்செய்தி அமைகிறது

இயேசு பாடுபட்டு சிலுவையில் இறந்து, உயிர்த்தெழுந்து உலகை மீட்க வேண்டும் என்னும் கடவுளின் மீட்புத் திட்டத்தைப் பரிசேயர்கள் புரிந்து கொள்ளவில்லை; ஏனெனில் அவர்கள் தலைக்கனம் பிடித்தவர்கள். இயேசுவின் சீடர்களும் புரிந்து கொள்ள வில்லை. ஏனெனில் அவர்கள் அறிவிலிகள். உண்மையில் உயிர்த்த ஆண்டவர் எம்மாவுக்குச் சென்றுகொண்டிருந்த இரு சீடர்களையும் 'அறிவிலிகளே, மந்த உள்ளத்தினரே' என்று கடித்துகொண்டார். (லூக் 24:25).

கடந்த ஞாயிறு நற்செய்தியில் உயிர்த்த இயேசுவைக் கண்ட சீடர்கள் திகிலும் அச்சமும் கொண்டவர்களாய். ஏதோ ஓர் ஆவியைக் காண்பதாக நினைத்தனர். இயேசுவோ, "நான்தான்" என்றுகூறி, அவர்கள் கண்டது ஓர் ஆவியல்ல.மாறாக எலும்பும் தசையும் கொண்ட, ஊனுடல் எடுத்த அதே நாசரேத்து இயேசு என்பதை எண்பித்தார்.

கடவுள் ஒருவருக்குத்தோன்றி, "நான் தான் கடவுள்" என்று கூறியபோது, அம்மனிதர், "நீங்கள் கடவுள் என்பதை எண்பிக்க அடையாள அட்டை காட்டுங்கள்" என்று கேட்டாராம்.

உயிர்த்த ஆண்டவர் தம் சீடர்களுக்குக் காட்டிய அடையாள அட்டை என்ன? "என் கைகளையும் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள். எனக்கு எலும்பும் தசையும் இருப்பதைக் காண்கிறீர்களே. இவை ஆவிக்குக் கிடையாதே" என்றார் (லூக் 24:39).

'என் முகத்தைப் பாருங்கள்' என்று இயேசு கூறாமல், தமது கைகளிலும் கால்களிலும் ஆணிகளால் ஏற்பட்டத் தழும்பைப் பார்க்கும்படி கேட்கிறார். மகிமையுடன் உயிர்த்த இயேசு பாடுகளின் தழும்புகளுடன் உயிர்த்தெழுந்தார் என்பதை நாம் ஒருபோதும் மறக்கமுடியாது, வீர மரணம் அடைந்த அதே இயேசு விழுப்புண்களுடன் உயிர்த்தெழுந்தார்.

சிலுவையில் அறையப்பட்ட 'வரலாற்று இயேசுவும்' மாட்சியுடன் உயிர்த்தெழுந்த விசுவாச இயேசுவும் ஒரே ஆள் தான் என்பதை ஐயத்திற்கு இடமின்றி எண்பிக்கிறார் நற்செய்தியாளர் லூக்கா, எனவேதான், உயிர்த்த இயேசு சீடர்களுக்கு முன்பாக வேகவைத்த



மீனை உண்டார் என அவர் குறிப்பிட்டுள்ளார் . (லூக் 24:4243). இயேசுவின் உயிர்ப்பு வரலாற்றிற்கு அப்பாற்பட்டது என்றாலும்கூட, அது உண்மை நிகழ்வு.

ஞாயிறு முதல் வாசகத்தில் திருத்தூதர் பேதுரு இயேசு உண்மையிலே உயிர்த்தார் எனச் சான்று பகர்கிறார் (திப 3:1315). திருத்தூதர் யோவானும், "தொடக்க முதல் இருந்த வாழ்வு அளிக்கும் வாக்கை நாங்கள் கேட்டோம்; கண்ணால் கண்டோம், கையால் தொட்டுணர்ந்தோம்" என்கிறார் (1யோவா 1:1).

எனவே திருத்தாதர்கள் இயேசுவைக் கண்டு, கேட்டு அவருடன் உண்டு. உற்று உணர்ந்தனர். அவர்கள் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் தான் (திப 4:20) நமக்கு அறிவித்துள்ளனர். அவர்களுடைய சாட்சியத்தை ஏற்று நிலைவாழ்வும் நிறைமகிழ்ச்சியும் அடைய நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

இயேசு உயிர்த்தெழுந்தது மண்ணக வாழ்வுக்குத் திரும்புவதற்காக அன்று மாறாக விண்ணக மகிமையில் நுழைவதற்காகவே. அவர் விண்ணகத் தூயகத்தில் அமைந்து விட்டார். (எபி 9:24), அவ்வாறு அவர் விண்ணகம் செல்லுமுன், மறைநூலைச் சரியாகப் புரிந்து கொள்ளும் வண்ணம் தம் சீடர்களின் மனக்கண்களைத் திறந்தார். அவர்கள் மீது தூய ஆவியைப் பொழியப் போவதாக வாக்களித்தார், "பாவமன்னிப்புப் பெற மனம் மாறுங்கள்' என்று அனைத்துலக மக்களுக்கும் போதிக்கும்படி போரித்தார் (லூக் 24:4549).

தூய ஆவியாரின் வல்லமையுடன் மறைநூலை மையமாகக் கொண்டு, அனைத்து நாட்டு மக்களுக்கும் 'மனமாற்றத்தின் நற்செய்தியை அறிவிப்பது திருச்சபையின் கடமையும் உரிமையுமாகும். இக்கடமையை ஆற்ற, விண்ணகத்தில் கடவுளின் வலப்பக்கம் அமர்ந்து நமக்காகப் பரிந்துபேசும் கிறிஸ்து (உரோ 8:34), உலகு முடியும் வரை எந்நாளும் நம்மோடு இருக்கிறார் (மத் 28:20) என்பதை நாம் உணர்ந்து வாழ்கிறோமா?

'நாயினும் கடையேன்', அதாவது 'நாயை விட நான் கேடுகெட்டவன்' என்று ஞானிகள் கூறுவர். ஏனெனில், நாயானது தனது தலைவர் மாறுவேடத்தில் வந்தாலும், தனது மோப்ப சக்தியால் அவரை அடையாளம் கண்டுகொள்ளும் ஆனால், கடவுள் பல்வேறு வடிவங்களில் வரும்போது அவரை அடையாளம் கண்டு கொள்ளும் ஆற்றல் மனிதருக்கு இல்லையே! எனவே, அவர்கள் நாயினும் கேடுகெட்டவர்கள் என வருந்துகின்றனர் ஞானிகள்.

உயிர்த்த இயேசு சீடர்களுக்கு வேற்றுருவில் (மாற் 16:12) தோன்றினார். ஆனால், எம்மாவுக்குச் சென்ற இரு சீடர்கள் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை (லூக் 24:18). மகதலா மரியாவோ அவரைத் தோட்டக்காரரர் என நினைத்தார் (யோவா 20:15).

திபேரியாக் கடல் அருகே அவர் தோன்றியபோது சீடர்கள் அவரை அறியவில்லை (யோவா 21:4). இன்றும் இயேசு நம் வாழ்வில் பல்வேறு நிகழ்வுகளில், பல்வேறு வடிவங்களில் தோன்றி, "நான்தான்" என்கிறார்.

நாமே அவரை அடையாளம் கண்டு கொள்ளாதவாறு நமது பயஉணர்வு, பகைமை உணர்வு, தாழ்வு மனப்பான்மை, குற்ற உணர்வு. தன்னலம், ஆணவம், முன் சார்பு எண்ணங்கள் போன்றவை நமது விசுவாசப் பார்வையை மறைக்கின்றன.

இயேசுவின் இரண்டாம் வருகைவரை அவரை மறைநூலிலும் அருளடையாளங்களிலும் அப்பம் பிடுவதிலும் இன்னும் சிறப்பாக ஏழை எளிய மக்களிலும் நமது இன்ப துன்பங்களிலும் கவலை கண்ணீரிலும் ஏக்கங்கள் ஏமாற்றத்திலும் அடையாளம் கண்டு கொள்ளப்பழகிக் கொள்வோம்.

**அருட்பணி வை. இருதயராஜ்**

# முக்கிய தேவைகளை கருத்திற் கொண்டே வாகன இறக்குமதிக்கு அரசு அனுமதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மிக அவசியமான தேவைகளை கருத்திற் கொண்டே வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். வாகன இறக்குமதிக்கான அனுமதியைக் கோரி வாகன இறக்குமதியாளர்கள் அரசாங்கத்திடம் முன் வைத்துள்ள வேண்டுகோளை கவனத்திற் கொண்டுள்ளதாகவும் எவ்வாறாயினும் அவசியம் கருதியே வாகன இறக்குமதிக்கான அனுமதி எதிர்காலத்தில் வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் டொலர் கையிருப்பை கவனத்திற் கொண்டே, அரசாங்கம் வாகன இறக்குமதிக்கான அனுமதியை உடனடியாக வழங்காமலுள்ளது.

எதிர்காலத்தில் அவசியத் தேவைகளை கருத்திற் கொண்டு அதற்கான அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றின் பின்னர் இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் வெளிநாட்டுக் கையிருப்பு தற்போது அதிகரித்து வருகிறது. 05 பில்லியன் அமெரிக்க டொலர்களை விட அது, தற்போது அதிகரித்துக் காணப்படுவதாகவும் அவர் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். இ.போ.ச — தனியார் பஸ் சேவை பிரச்சினை; அமைச்சரின் தலையீட்டில் தீர்வு

(யாழ்ப்பாணம் குறூப், பருத்தித்துறை விசேட, யாழ். விசேட நிருபர்கள்)

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் இணைந்த நீண்ட தூர பஸ் சேவை விவகாரத்துக்கு தீர்வாக – யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு அருகாமையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையத்திலிருந்து இணைந்த சேவையாக பரீட்சார்த்த அடிப்படையில் சேவைகளை நடத்துமாறு அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் இணைந்த பஸ் சேவையை முன்னெடுப்பதில், இருந்துவரும் இழுபறி நிலையையடுத்து யாழ். நீண்ட நீண்டதூர தனியார் பஸ் சேவையில் ஈடுபட்டுவரும் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு முறையான பஸ் தரிப்பிடம் இல்லாமையால் பிரச்சினைகள் எழுந்தன.

இதையடுத்தே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டையடுத்து பரீட்சார்த்த அடிப்படையில் சேவைகளை நடத்துவதென சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளது முன்பதாக முறையான பஸ் தரிப்பிடம் இல்லாமையை கண்டித்து, உள்ளூர் மற்றும் நீண்ட தூர தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்கள் யாழ்.மத்திய பஸ் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியிருந்தனர்..

இந்நிலையில் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் முன்னெடுத்துள்ள போராட்டத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடி தீர்வு வழங்கப்படுமென வடமாகாண ஆளுநர் உறுதி வழங்கியிருந்தார்.

இதையடுத்து, இவ்விடயம் தொடர்பில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அரச மற்றும் தனியார் பஸ் சேவையிலீடுபடும் தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது சுமுகமான தீர்வு எட்டப்படாமையால் அன்றைய தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இவ்விடயம் தொடர்பில் வடக்கு ஆளுநர் தலைமையில் 05 பேர் அடங்கிய விசேட குழு ஒன்றை நியமித்து பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் பொறிமுறைகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோரியிருந்தார். இப் பிரச்சினைக்கான தீர்வை வழங்கும் வகையில் ஆளுநர் அலுவலகத்தில் கூட்டம் நடைபெற்றது.

இக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் பரீட்சார்த்தமான முறையில் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்கள் வீரசிங்கம் மண்டபத்துக்கு அருகாமையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையத்திலிருந்து இணைந்த சேவையாக பரீட்சார்த்த அடிப்படையில் நெடுந்தூர சேவைகளை முன்னெடுக்குமாறு அமைச்சர்ட டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார்.

## IMF மூன்றாம் தவணை...

பத்திர மறுசீரமைப்புக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் நடைபெறும் உலக வங்கி மாநாட்டுக்காக சென்றுள்ள இலங்கை பிரதிநிதிகள் குழு, அந்த மாநாடு நிறைவடைந்த பின்னர் லண்டனில் சர்வதேச இறையாண்மைப் பத்திர உரிமையாளர்களுடன் மீண்டும் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இறையாண்மைப் பத்திர உரிமையாளர்களுடன் இடம்பெறும் மேற்படி பேச்சு வார்த்தைக்கு சட்ட ஆலோசனை மற்றும் நிதி ஆலோசனை குழுக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

மேற்படி விடயம் தொடர்பான ஆரம்ப பேச்சு வார்த்தை கடந்த மார்ச் மாதம் லண்டன் நகரில் இடம் பெற்றது.

அங்கு முக்கிய விடயங்கள் சம்பந்தமாக அவர்கள் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். அப் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமைந்தது.

இதன் போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடும் காணப்பட்டுள்ளது. அங்கு நான்கு முக்கிய விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டன.

இரண்டு விடயங்கள் தொடர்பில் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தி இறையாண்மை பத்திர உரிமையாளர்கள் மற்றும் அரசாங்கத்துடன் இணைக்கப்பாட்டை பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் விரைவில் நடைபெறவுள்ள பேச்சு வார்த்தையின் போது, இரு தரப்பினராலும் இணக்கப்பாட்டுக்கு வராத இரண்டு விடயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் இரண்டு...

யாழ்ப்பாணத்தை வரவேற்கும் செம்மணி வளைவு பகுதியை அண்டிய நிலப்பரப்பில் சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்ட மைதானத்தை அமைப்பதற்கான திட்ட முன்மொழிவை நகர அபிவிருத்தி அதிகார சபை முன்வைத்துள்ளது.

இதையடுத்து இதற்கான அனுமதியை கோரி யாழ். மாவட்ட அபிவிருத்தி குழுவுக்கு திட்டமுன்மொழிவை சமர்ப்பித்துள்ளது.

இந்நிலையில், அமைச்சர் இப்பகுதியை நேரில் சென்று பார்வையிட்டார்.

முன்பதாக இவ்விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது இப்பகுதியில் விவசாய நிலங்கள் மற்றும் மழைநீர் வழிந்தோடும் வழிகள் இருப்பதால் அப்பகுதியில் மைதானங்களை அமைப்பதில் உள்ள சாதக பாதகங்கள் குறித்து ஆராயப்பட்ட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில் இப்பகுதிக்கு களவிஜயம் செய்த அமைச்சர், நிலைமைகளை அவதானித்ததுடன் விவசாயம் மற்றும் நீர் வழிந்தோடும் பொறிமுறையை உள்ளடக்கியதான தீர்வுகள் தொடர்பில் ஆராய்ந்து காணொளி வடிவிலான திட்டவரைபை தனக்கு தருமாறு துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

வட மாகாண சபை முன்னாள் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், கோப்பாய் பிரதேச செயலாளர் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் இவ்விஜயத்தில் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதி தேர்தலில்...

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஒவ்வொரு தடவையும் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்கி வந்தனர்.

ஆனாலும், துரதிஷ்டவசமாக தமிழ் மக்களின் கோரிக்கைகள் எவராலும் நிலைநாட்டப்பட வில்லை.

இதனால், தமிழ் மக்கள் சார்பாக பொது வேட்பாளரை நிறுத்த வேண்டுமென தமிழ் தேசியம் சார்ந்த ஐந்து கட்சிகள் இணைந்து கொள்கையளவில் முடிவெடுத்தன. சக தமிழ் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்பினருடன் கலந்துரையாடி, தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டால் நாம் ஆதரிப்போம்.

இந் நிலையில், ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்களை புறக்கணிக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கூறுகிறார்.

தேர்தலை புறக்கணிக்கக் கோரும் அவர், யாரை வெற்றியடையச் செய்யப் போகிறார்? இது தொடர்பில் தமிழ் மக்களுக்கு வெளிப்படையாக அவர் கூற வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில்,பொது வேட்பாளராக நிறுத்தப்படும் தமிழர் வெல்ல மாட்டார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். பொது தமிழ் வேட்பாளராக வேலன் சுவாமிகளை நிறுத்தலாமென, விக்கினேஸ்வரன் எம்.பி கூறியிருந்தார்.

## தமிழ் பொது வேட்பாளர்...

எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆகவே, இது சம்பந்தமாக நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுக்கும் போது சரித்திர பின்னனியையும் நோக்க வேண்டும்.பொது வேட்பாளர் தெரிவானது தென்னிலங்கை இனவாத சக்திகளையும் உசுப்பேற்றும்.

தமிழ் வேட்பாளர் முன்வந்து விட்டார் என்பதை சொல்லி இனவாதத்தை தூண்டவும் வழியேற்படுத்தும். எனவே,இதுகுறித்து சரியானதொரு தீர்மானம் எடுப்பதே பொருத்தம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அதிவேக நெடுஞ்சாலைகளின்...

இரண்டு கோடியே 49 இலட்சம் ரூபாவாக காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அக்காலப்பகுதியில் அதிவேக நெடுஞ்சாலைகளில் 43 இலட்சத்து 50,000 வாகனங்கள் பயணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இத்தாலிய சொகுசுக் கப்பல்...

சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் உள்ளதாக துறைமுக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொஸ்ட்டா டெலிசியோசா சொகுசு பயணிகள் கப்பலில்,1978 உல்லாசப் பயணிகளும் 906 ஊழியர்களும் உள்ளனர்.

இவர்கள் காலி மற்றும் கொழும்பு பகுதிகளில் சுற்றுலாவை மேற்கொள்ளவுள்ளனர்.

இத்தாலி நாட்டுக்குச் சொந்தமான இக்கப்பல் இலங்கையில் சுற்றுலாவை முடித்துக் கொண்டு மாலைதீவுக்கு பயணிக்கவுள்ளது.

## பாரிய போதைக் கடத்தல்...

கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ள போதைப் பொருட்களின் பெறுமதி 3798 மில்லியன் ரூபா என்றும் கடற் படையினர் தெரிவித்தனர். ஆழ்கடல் மீன் பிடிப்படகொன்றை சந்தேகத்திற்கிடமான வகையில் சுற்றி வளைத்த கடற்படையினர், அதிலிருந்து

ஐஸ்,ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்களைக் கைப்பற்றினர். தெற்கில் தேவேந்திரமுனை கடற்பரப்பில் பயணித்த ஆழ்கடல் மீன்பிடிப் படகையே படையினர் சோதனையிட்டனர்.

கடற் படையினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களையடுத்து இச்சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

மீட்கப்பட்ட போதைப் பொருட்களின் பெறுமதி 3798 மில்லியன் ரூபா என கடற் படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் மற்றும் மீன்பிடிப் படகு என்பவை சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

## போதைப்பொருள், குற்றச்செயல்களுக்கு...

நடவடிக்கைகள் வெற்றி பெற்றுள்ளன. புதுவருடத்தின் பின்னர் பாதாள உலக குழு நடவடிக்கையை ஒடுக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும்.

இது குறித்து பொலிஸாரிடம் மிகப் பெரிய ஆற்றல் உள்ளது. குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் தொடர்பாக ஒரு சிறிய அளவு மட்டுமே வெளியிடப்பட்டது.

இதனை இரட்டிப்பாக்குதல் மற்றும் மும்மடங்காக அதிகரிப்பதன் மூலம் விரைவாக நாட்டை சீர்படுத்தலாம்."என தெரிவித்துள்ளார்.

## கொரோனா தொற்றில்...

வந்துள்ளமை உறுதியாகி உள்ளது. அராலி பகுதியில் தங்கியிருந்து ஆயுர்வேத சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

திடீரென காய்ச்சல் ஏற்பட்டமையால் , யாழ்.போதான வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இப்பெண், கடந்த வெள்ளிக்கிழமை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

கொரோனா விதிமுறைகளுக்கு அமைவாக சடலத்தை தகனம் செய்யுமாறு உறவினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## நுகர்வோர் சட்டத்தை மீறிய...

தாக அதிகார சபையின் விசேட விசாரணை பணிப்பாளர் சஞ்ஜய தெரிவித்துள்ளார்.இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 7,627 வர்த்தக நிலையங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

## கொங்கிறீட் ஒட்டகச்சிவிங்கி...

ஹெட்டிபொல பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் ஹெட்டிபொல, திக்கலகெதர பிரதேசத்தில் (14) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. இச்சிறுவன் தனது வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் போது, அங்கிருந்த இந்த கொங்கிறீட் சிலை உடைந்து வீழ்ந்ததில் இப் பரிதாப சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதையடுத்து காயமடைந்த சிறுவன் குளியாப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் ஹெட்டிபொல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பஸ் சாரதிகள் குறித்து...

செயற்படும். இதேவேளை பஸ்களால் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்காக உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளை தெளிவுபடுத்துவதற்கும் ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

Info@ntc.gov.lk என்ற மின்னஞ்சலுக்கு 0112503725 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக சம்பந்தப்பட்ட முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியுமென்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# இன்றைய பலன்கள்

(16.04.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:** முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதை தவிர்க்கவும். எதிலும் நிதானித்து முடிவெடுங்கள். நீண்ட காலமாக சந்திக்க நினைத்த ஒரு முக்கிய நபரை சந்திப்பீர்கள்.

**ரிஷபம் :** கொடுக்கல் வாங்கல்களில் சற்று கவனம் தேவை. தேவையற்ற விவாதங்களில் ஒதுங்கி இருப்பது நல்லது. ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை.

**மிதுனம்:** எதிலும் நிதானம் தேவை. மறைமுகமாக இருந்து வந்த எதிர்ப்புகள் மறையும். உங்கள் செயல் மற்றவரால் பாராட்டப்படும்.

**கடகம்:** அதிக முயற்சிகளோடு வேலைகளில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்க்கும் வரவுகள் வந்தாலும் திடீர் செலவுகள் ஏற்படும். எந்த வேலையும் நாளைக்கென்று தள்ளி வைக்காமல் சுறுசுறுப்பாக செய்து முடிப்பீர்கள்.

**சிம்மம்:** தீவிர முயற்சியுடன் செயல்களில் ஈடுபடுவீர்கள். சில காரியங்கள் வெற்றி அளித்தாலும் சில காரியங்கள் எதிர்பார்த்தபடி நடக்காமல் போகக்கூடும்.

**கன்னி:** உங்களது சிந்தனைகள் தெளிவாக இருந்தாலும் எடுத்த காரியங்கள் நினைத்த நேரத்திற்குள் முடியாமல் இழுத்தடிக்கலாம்.

**துலாம்:** பணிகளில் அதிக முயற்சியோடு செயற்பட்டு முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். நண்பர்களும் உறவினர்களும் உங்கள் பணிகளுக்கு தக்க நேரத்தில் உதவியாக இருப்பார்கள்.

**விருச்சிகம்:** உங்கள் செயல்கள் பலவற்றில் தீவிரமாக முயன்று நல்ல பலன்களை பெறுவீர்கள். தளர்வடைந்த செயல்களுக்கு தக்க நபர்களின் உதவியை நாடுவீர்கள்.

**தனுசு:** ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். முயற்சிகள் மூலம் முன்னேற்றமான காரியங்கள் நடைபெறும். கொடுக்கல் வாங்கல்களில் கவனமாக இருப்பது அவசியம்.

**மகரம்:** அதிக முயற்சியோடு செயல்பட்டாலும் எதிர்பார்ப்புக்கு தக்க பலன் கிடைப்பது சந்தேகமே. பணவரவுகள் எதிர்பார்த்தபடி வந்தாலும் செலவுகள் அதிகமாக இருக்கும்.

**கும்பம்:** உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேற உறவினர்கள் உதவிகரமாக செயல்படுவார்கள். பணவரவுகள் தேவையான நேரத்தில் வந்து சேரும் .

**மீனம்:** பயணங்களில் கவனம் தேவை. வாக்குறுதி கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் ஏற்படும் சிறு தவறுகளும் உயர் அதிகாரிகளுக்கு பெரிதாக தோன்றுக்கூடும்.

## விக்டோரியா நீர்த்தேக்கத்தில்... (03ஆம் பக்க தொடர்ச்சி)

திஹாரிய பிரதேசத்தைச் சேர்ந்த இத் தம்பதியினர் தெல்தெனிய பிரதேசத்திலுள்ள மேற்படி பெண்ணின் கிராமத்திற்கு சென்று கும்புக்கந்துர பிரதேசத்திலிருந்து விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு நீராடச் சென்றுள்ளனர்.

அச்சமயம் பெண் நீரில் மூழ்கி உயிரிழந்தார். உயிரிழந்த பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் காணாமற்போன நபரை தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸாரும் பிரதேசவாசிகளும் இணைந்து அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தொடர் மழை வீழ்ச்சி...

கொழும்பு மாவட்டத்தில் 4,527 டெங்கு நோயாளர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளில் மழை பெய்து வருவதால் டெங்கு, பரவும் அபாயமும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் டெங்கு நோயைத் தடுக்கும் வகையில் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமென சுகாதாரத் துறையினர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்படி இவ்வருடம் இதுவரை பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 21,028 ஆகும். கொழும்பு மாவட்டத்திலேயே அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 4,527 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

## நெல் கொள்வனவு...

நாடு முழுவதிலுமுள்ள 37 நெற்களஞ்சியசாலைகளும் நெல் கொள்வனவுக்காக திறக்கப்படவுள்ளதாக தலைவர் புத்திக இத்தல்மல்கொட தெரிவித்துள்ளார்.

30 இலட்சம் கிலோவுக்கு மேற்பட்ட நெல் இதுவரையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், புத்தாண்டு காலப்பகுதியில் நெல் கொள்வனவுக்காக களஞ்சியசாலையை திறந்து வைப்பதால் ஏற்படும் விரயத்தை தவிர்க்கும் நோக்கிலேயே, நெல் கொள்வனவு தற்காலிமாக இடைநிறுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார். நெல்லுக்காக நியாயமான விலையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், தம்மிடம் இருக்கும் நெல்லை, நெல் கொள்வனவு சபையிடம் வழங்குமாறும் சபையின் தலைவர் விவசாயிகளிடம் கேட்டுள்ளார்.




தினகரன் வாரமஞ்சரி

ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா

தினகரனின் 92 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

களுத்துறை மாவட்டத்தில் உள்ள
தமிழ் மொழி பாடசாலைகளின் ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும்
பேருவளை தேர்தல் தொகுதியில் உள்ள பாடசாலைகளின்
ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா

பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய
அஷ்செய்க் முஸ்தபா வலியுல்லாஹ் கேட்போர்கூடத்தில்
19.05.2024 காலை 9 மணிக்கு

தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர்
தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறும்.

எம். பாஸி ஸுபைர்
விழா ஏற்பாட்டுக் குழுத் தலைவர்
தொ.பேசி இல. 077 0812420

# ஐ.ரி.என் தொலைக்காட்சி அலைவரிசையின் சூர்ய மங்கல்ய – 2024















சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் (ஐ.ரி.என்) ஏற்பாடு செய்திருந்த ஐ.ரி. என் சூர்ய மங்கல்ய 2024 ' என்ற கலாசார நிகழ்ச்சி, போக்குவரத்து, பெருந் தெருக்கள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் மீகொட மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் சிறப் பாக நடைபெற்றது. கயிறு இழுத்தல், சைக்கிள் போட்டி, பாரம்பரிய விளை யாட்டுப் போட்டிகள், வேடிக்கை வினோதப் போட்டிகள் உள்ளிட்ட பல நிகழ்ச் சிகள் இங்கு இடம்பெற்றன. இவ்வைபவத்தில் கொழும்பு மாவட்ட செயலாளர் கே.ஜி. விஜேசிறி, சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவர் சட்டத்த ரணி சுதர்சன குணவர்தன, பிரதேச அதிகாரிகள், அனுசரணை வழங்கிய நிறு வனங்களின் தலைவர்கள் மற்றும் பிரதேசவாசிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசை ஊடாக இந்நிகழ்ச்சிகள் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

வியாழன் 2024.04.11

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5447
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,207,272.00
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 7 4 9 1 5 5

அத சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 022
F ஆங்கில எழுத்து
9 1 5 5 வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3689
சீட்டிழுப்பு திகதி 2024.04.11
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 73,616,871.76
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 08 35 42 79
விசேட எழுத்து P
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 74343

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1795
2024.04.11
04769
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 430,228,196.00
ஆங்கில எழுத்து J
சுப்பர் இலக்கம் 07
வெற்றி இலக்கங்கள் 38 44 51 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP
திகதி 2024.04.11
சீட்டிழுப்பு இலக்கம் 0273
ஆங்கில எழுத்து V
L7 எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 9 2 9 3 3 3
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ 28,426,156.48

ராசி சுப பலன்
திகதி 2024.04.11
சீட்டிழுப்பு இலக்கம் 756
செவ்வாய் அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,234,999.56
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 28 31 41 50
தனயோக இலக்கம் 42587
நாளுக்கான விதி எண் 27

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1477
2024.04.11
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 88,562,863.60
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 02 15 20 42
விசேட எழுத்து H
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 52701



இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2024 ஏப்ரல் 17 திகதி ஏலவிற்பனையினூடாக 78,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124G194 | LKA18224J187 | LKA36425D181 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 30,000 | 25,000 | 23,000 | 78,000 |

ஏலவிற்பனைத் திகதி : 2024 ஏப்ரல் 17
தீர்ப்பனவுத் திகதி : 2024 ஏப்ரல் 19
வழங்கப்படும் திகதி : 2024 ஏப்ரல் 19
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 ஏப்ரல் 17. புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்சத் தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| கொமர்ஷல் பாங் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய, இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்குகிடையிலான தொகைகளை மீள்ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**



வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமானசேவைகள்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**இலங்கை, கட்டுநாயக்க,பண்டாரநாயக்க சர்வதேச வீமான நிலையத்தில் வெளிச்செல்லல்/ நடைபாதை இடப்பரப்பில் கடையொன்றை பாதுகாக்கப்பட்ட / உடன் தயாரிக்கப்பட்ட உணவு, வெதுப்பகம் / உள்ளூர் இனிப்பு பண்ட உற்பத்திகள் மற்றும் குடிமங்கள் (மதுசார மற்ற) ஆகியவற்றை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டி ரீதியிலான வீலைமனுக்கோரல்**

**(Tender No. 147/T/2023)**

மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வெளிச்செல்லல் நடைபாதை பிரதேசத்தில் பாதுகாக்கப்பட்ட, உடன் தயாரிக்கப்பட்ட உணவு, வெதுப்பகம் / உள்ளூர் இனிப்பு பண்ட உற்பத்திகள் மற்றும் குடிமங்கள் (மதுசாரமற்ற) ஆகியவற்றை செயற்படுத்துவதற்காக பதிவுபெற்ற கம்பனிகள், நிறுவனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

பிரயோகப்படுத்தப்படவுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ஏனைய விபரங்கள் ஆகியன விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும். 2024 மே 07 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணிவரையும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் முனைய கட்டிடத்தின் 2 ஆம் மாடி, 31 ஆம் இலக்க அறையின் வர்த்தக மற்றும் சொத்துக்கள் பிரிவு அலுவலகத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், விலைமனுதாரரின் தலைப்புக் கடிதத்தில் கோரிக்கை கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். 5000 ரூபாவை செலுத்துவதன் மூலம், www.airport.lk என்ற வரையறுக்கப்பட்ட (தனியார்) ஸ்ரீ லங்கா விமானநிலையம் மற்றும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச வரையறுக்கப்பட்ட (தனியார்) ஸ்ரீ லங்கா விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் வர்த்தக மற்றும் சொத்துக்கள் தலைவரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன.

விலைமனுக்கள் கம்பனியினால் வழங்கப்படும் விலைமனுக்கோரல் படிவங்களிலேயே தயாரிக்கப்படல் வேண்டுமென்பதுடன், விலைமனுப்பிணையானது கீழே வழங்கப்பட்டுள்ளவாறு வங்கிவரைவு அல்லது புகழ் வாய்ந்த வர்த்தக வங்கியொன்றினால் 460,000 ரூபாவிற்கு வழங்கப்பட்ட அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமான உரிமமுள்ள விஷேடத்துவ வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் அல்லது ரொக்கப் பணத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

2024 ஏப்ரல் 30 ஆம் திகதியன்றுமு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்றும் அதன் பின்னர் அமைவிடத்திற்கான விஜயமொன்றும் நடைபெறும். விலைமனு முன்னோடிக் கூட்டஉரைக்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம். முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தலைவர், கேள்விச் சபை இல. 1 என முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவு அலுவலகம், வரையறுக்கப்பட்ட (தனியார்) ஸ்ரீ லங்கா விமான நிலையம் மற்றும் விமான சேவைகள், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 1 ஆம் இலக்க பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024 மே 08 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர், வரையறுக்கப்பட்ட (தனியார்) ஸ்ரீ லங்கா விமான நிலையம் மற்றும் விமான சேவைகள், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்தில் பகிரங்கமாக வாசிக்கப்படும். விலைமனுக்களை மூடுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் பின்னர் பெறப்படும் எந்தவொரு விலைமனுவும் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

மேலதிகவிபரங்களை 011-2264000 என்ற தொலைபேசி இலக்கங்களூடாக அல்லது head.cp@airport.lk என்ற மின்னஞ்சல் வழியாககட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், பயணிகள் முனையக் கட்டிடத்தின் 2 ஆம் மாடியின் 31 ஆம் இலக்க அறையின் வர்த்தக மற்றும் சொத்துக்கள் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம்**
**மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க**

# கிழக்கின் குரல்



## சாய்ந்தமருதில் பாரிய கடலரிப்பு

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)





சாய்ந்தமருதில் பாரிய கடலரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இதை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாய்ந்தமருது கடற்கரை பிரதேசத்தில் என்றும் இல்லாதவாறு கடலரிப்பு ஏற்பட்டதன் காரணமாக அப்பகுதியில் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக சாய்ந்தமருதில் கடலரிப்பின் வேகம் மீண்டும் அதிகரித்துள்ளதால் பிரதேச மக்கள் பொழுதுபோக்குக்காக ஒன்றுகூடும் மருதூர் சதுக்கம் என அழைக்கப்படும் கடற்கரை திடல் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். சதுக்கத்தோடு இணைந்ததாக காணப்படும் கொங்றீட் வீதியின் ஒரு பகுதி கடலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதுடன் அவ்விடத்தில் அமைந்துள்ள மீனவர் பல்தேவை கட்டடமும் இடிந்துவிழும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தற்போதைய நிலையை கருத்திற்கொண்டு மருதூர் சதுக்கம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களை பாதுகாக்க கரையோரம் பேணல் திணைக்களம், பிரதேச செயலகம் என்பன இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் இது குறித்து பிரதேச அரசியல்வாதிகள் கவனம் செலுத்தி கல் அணை அமைப்பதற்கான நிதியை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கல்லடி இராமகிருஷ்ண மிஷன் இல்ல சிறுவர்களுக்கு ஜனாதிபதியின் புத்தாண்டு பரிசு

(காரைதீவு குறூப் நிருபர்)





தமிழ்,சிங்கள சித்திரை புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புத்தாண்டு பரிசு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் அப்பிரதேச இராணுவ அதிகாரிகளால் ஜனாதிபதியின் புத்தாண்டு பரிசு பொதிகள் சிறுவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

நாட்டிலுள்ள 336 சிறுவர் மேம்பாட்டு நிலையங்களில் வாழும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு புத்தாண்டு பரிசு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

'சிறுவர் இல்ல குழந்தைகளுக்கு புத்தாண்டு' எனும் தொனிப்பொருளில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இராணுவ பாதுகாப்பு பதவி நிலை பிரதானி ஜெனரல் சவேந்திரசில்வாவின் வழிகாட்டலில் இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேயின் ஏற்பாட்டில் சமகாலத்தில் அனைத்து இல்ல சிறார்களுக்கும் இந்த புத்தாண்டு பரிசு வழங்கப்பட்டது.

இனிப்புகள் பரிசு பொருட்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

## முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் மழையுடனான காலநிலை நிலவிவருவதால் முதலைகள் மக்கள் குடியிருப்புகளை நோக்கிவரும் அபாயம் காணப்படுவதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். எனவே பொதுமக்களை எச்சரிக்கையாக செயற்படுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

வரட்சியான காலநிலை நீங்கி தற்போது மழைபெய்துவருவதால் மக்கள் குடியிருப்புகளை நோக்கி முதலைகள் வரும் சாத்தியம் காணப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட மக்கள் அதிகளவில் வாழும் கூழாவடி பகுதிக்குள் நுழைந்த முதலையொன்று பொதுமக்களால் அண்மையில் பிடிக்கப்பட்டு வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

எனவே பொதுமக்கள் முதலைகள் நடமாட்டம் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 16 கைதிகள் பொதுமன்னிப்பில் விடுதலை

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 16 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் (12) மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 16 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் நல்லையா பிரபாகரனின் முன்னிலையில் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

## SKO கழகத்தின் வந்தாறுமூலை கராத்தே பாடசாலை திறப்பு விழா





மட்டக்களப்பு மாவட்டத்தில் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் முகமாக பல வேலைத்திட்டங்கள் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் S.K.O கழகத்தின் சர்வதேச தரத்திலான வந்தாறுமூலை கராத்தே பாடசாலை திறப்பு விழா அண்மையில் S.K.O கழக தலைவரும் பிரதான போதனாசிரியருமான கே.ரீ.பிரகாஷ் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்தார். சர்வதேச தரத்திலான கராத்தே பாடசாலை கட்டடத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்ததுடன் கராத்தே கருப்பு பட்டி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டதோடு கராத்தே கலை பயிலுகின்ற மாணவர்களை ஊக்கப்படுத்தும் முகமாக சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் கராத்தே பயிற்சிக்கு தேவையான உபகரணங்களையும் வழங்கி வைத்தனர்.

அதாவது 2015 ஆம் ஆண்டளவில் இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தனின் ஆதரவுடன் S.K.O விளையாட்டுக் கழகத்தின் உடல் வலுவூட்டல் நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்ததுடன் அதன் தொடர்ச்சியாக அங்கு பயிற்சி பெற்ற வீரர்கள் மாவட்ட மற்றும் மாகாண ரீதியில் பலசாதனை புரிந்திருந்தனர்.

அத்துடன் கடந்த 2015 ஆம் ஆண்டளவில் S.K.O விளையாட்டுக் கழகத்தின் தலைமை ஆசிரியரும் இராஜாங்க அமைச்சர் சிவ.சந்திரகாந்தனும் இணைந்து மட்டக்களப்பு மாவட்ட கராத்தே மாணவர்கள் தேசிய மட்டத்தில் பல சாதனைகளை புரிய வேண்டும் என்பதற்காக விசேட கராத்தே குழுவொன்றினை (pool team) உருவாக்கி அதற்கு தேவையான பயிற்றுவிப்பாளர்களை வெளிமாவட்டங்களிலிருந்து தமது சொந்த செலவில் கொண்டு வந்து தேவையான பயிற்சிகளை வழங்கியிருந்தனர்.

அவரது முயற்சிகளின் பலனாக 2019 ஆம் ஆண்டு தேசிய மட்ட பாடசாலை கராத்தே விளையாட்டுப் போட்டியில் கிழக்கில் முதல் தடவையாக தங்கப் பதக்கத்தை சிவானந்தா தேசிய பாடசாலையைச் சேர்ந்த எஸ். வசந்தன் என்ற மாணவன் பெற்றிருந்தார். அத்துடன் விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட தேசிய ரீதியான பாடசாலை கராத்தே போட்டியில் மூன்றாமிடத்தை செல்வி. அச்சுகா என்ற மாணவியும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி பாரதி கென்னடி, கல்குடா வலயக்கல்வி பணிப்பாளர் திரு த. அனந்தரூபன், காத்தான்குடி பிரதேச செயலாளர் திரு உதய ஸ்ரீதர், எமது கட்சியின் மாவட்ட அமைப்பாளர் அருண் திருநாவுக்கரசு, இளைஞர் அணி செயலாளர் சண்முகலிங்கம் சுரேஷ்குமார் உட்பட துறைசார் அதிகாரிகள், கராத்தே மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## அட்டளைச்சேனை அல்– ஜன்னா பள்ளிவாசலுக்கு நவீன நேரஅறிவிப்பு திரை வழங்கிவைப்பு



( சாய்ந்தமருது விசேட நிருபர்)

அட்டளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த அல் - ஜன்னா பள்ளிவாசலின் நீண்டகால தேவையாகவிருந்த நவீன நேர அறிவிப்பு திரை பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வை குழுவின் இளைஞர் பிரதிநிதி றிஸ்கான் முகம்மட்டினால் மஸ்ஜித் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

பள்ளிவாசல் தலைவர் முகம்மட் நசீர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க நவீன நேர அறிவிப்பு திரை மஸ்ஜித் நிருவாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் பள்ளிவாசல் நிர்வாகத்தினர், முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## உணவுப் பாதுகாப்பு விதிமுறைகளை மீறினால் கடும் நடவடிக்கை

(பாலமுனை விசேட நிருபர்)

நுகர்வோருக்கு தரமற்ற மற்றும் சுகாதாரமற்ற உணவுகளை வழங்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எப்.எம்.உவைஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உணவை விற்பனை செய்யும் மற்றும் அவற்றைக் கையாளும் நிறுவனங்களை மேற்பார்வை செய்வது உணவின் தரம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்து மக்களுக்கு பாதுகாப்பான உணவை வழங்குவதற்காகும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் உணவு நிறுவனங்களுக்குரிய சட்ட ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்காது அலட்சியமாக இருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உணவு விற்பனை செய்யும் மற்றும் அவற்றைகையாளும் நிறுவனங்களில் காணப்படுகின்ற சுகாதார சீர்கேடுகள் தொடர்பில் எமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு கடந்த சில தினங்களாக பொத்துவில் பிரதேசத்திலுள்ள உணவகங்கள் சோதனை செய்யப்பட்டு வருகின்றன. நேரடியாக உணவைக் கையாளும் நிறுவனங்களும் அதில் வேலை செய்பவர்களும் ஒரு மாத காலப்பகுதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். அத்துடன் வேலை செய்பவர்கள் தமக்குரிய மருத்துவ சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்தார்.

## மனித நுகர்வுக்கு ஒவ்வாத மீன்கள் கல்முனையில் விற்பனை

(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளில் நுகர்வுக்கு பொருத்தமில்லாத மீன் விற்பனை செய்யப்படுவதாக, பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுச் சந்தைகள், மற்றும் நடமாடும் மீன் வியாபாரிகள் மீன்களை புதிதாகக் காட்டுவதற்காகவும் நிறையை மோசடி செய்வதற்காகவும் மண் கலப்படம் செய்து வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்குட்பட்ட சம்மாந்துறை, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு , நிந்தவூர் , அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, திருக்கோவில் மற்றும் பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் மீன் வியாபாரிகளுக்கு இதுதொடர்பான அறிவித்தல்கள் உள்ளூராட்சி மன்றங்களினால் விடுக்கப்பட்டிருந்தது, எனினும் இதனை மீறி நுகர்வுக்கு பொருத்தமில்லாத மீன் விற்பனை செய்யப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

மண் கலப்படத்துக்கு தூய்மை அற்ற பகுதிகளிலிருந்து மண் எடுக்கப்படுவதால் சமையலுக்கு பின்னரும் மீன்களில் மண் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

## கத்திக்குத்துக்கு இலக்காகி ஒருவர் பலி

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை சேறுநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்காகி நபரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் (14) இரவு 8.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சேறுநுவர கல்வல சந்தியில் வசித்து வந்த எம்.ஜீ. சஞ்சீவ கருணாரத்ன (41வயது) என்பவர் உயிரிழந்துள்ளார்.

இதுதொடர்பில் விசாரணைகளை சேறுநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அம்பாறையில் மின்சார வேலி விழிப்புணர்வு நிகழ்வு

( மாளிகைக்காடு குறூப் நிருபர்)



அம்பாறை மாவட்டத்தின் உஹன பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பண்டாரதுவ கிராமத்தில் காட்டு யானை தாக்கத்திலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெறுவது என்பது தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நடைபெற்றது.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் மற்றும் ஹெல்ப் ஸ்ரீலங்கா ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் மின்சார வேலிகளை திறம்பட எவ்வாறு பராமரிப்பது தொடர்பான பயிற்சியும் வழங்கப்பட்டது.

பண்டாரதுவ கிராம மக்கள் அடிக்கடி காட்டு யானை தாக்கத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இச்செயலமர்வில் அப்பகுதியைச் சேர்ந்த 80க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்,

## ஒலிம்பியாட் போட்டியில் ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலய மாணவி சாதனை



ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் தரம் 8 இல் கல்வி பயிலும் எம்.எச்.நஸ்ஹத் அக்ஸிதா எனும் மாணவி மாகாண மட்ட ஒலிம்பியாட் போட்டியில் வெற்றிப் பெற்று கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நடைபெறவுள்ள தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி வரும் ஊடகவியலாளர் மற்றும் கவிஞர் ஷல்மானுல் ஹரீஸ் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் ஈ.சி.ஜி. தொழில்நுட்பவியலாளர் கடமையாற்றி வரும் எம்.ஐ.ரிஸ்வானா ஆகியோரின் புதல்வியும் ஆவார்.

## இராணுவ சேவையிலிருந்து ஓய்வு

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)



இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் 24வது இராணுவ காவல் படை பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் நெபுல சந்திர ஸ்ரீயின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது 24வது இராணுவ காவல் படை பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் நெபுல சந்திர ஸ்ரீயின் சேவையை பாராட்டி நினைவுச்சின்னம் மற்றும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் போரத்தின் தலைவர் எஸ்.எம். ஹனீபா, உப தலைவர், செயலாளர், பொருளாளர் என பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# உலக சாதனையாளன் திருச்செல்வத்தின் மற்றொரு முயற்சிக்கு அமைச்சர் பாராட்டு



தாடியால் பட்டா ரக வாகனத்தை இழுத்து பல சாதனைகளை நிகழ்த்திய யாழ்ப்பாணம் தென்மராட்சியைச் சேர்ந்த செல்லையா திருச்செல்வம், 2600 கிலோ எடையுள்ள உழவு இயந்திரத்தை கழுத்தினால் இழுத்து மற்றொரு உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இவர் கடந்த (14) இச்சாதனையை நிலைநாட்டினார். உரிய இடத்துக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திருச்செல்வத்தின் முயற்சியை பாராட்டினார். ஏற்கனவே இவர், 1550 கிலோ எடையுள்ள பட்டா ரக வாகனத்தை 500 மீற்றர் தூரம் தாடியாலும், 500 மீற்றர் தூரத்தை தலைமுடியாலும் இழுத்து சாதனை நிலைநாட்டினார். இந்நிகழ்வு கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில், மற்றுமொரு உலகசாதனை படைத்த திருச்செல்வத்தையே அமைச்சர் பாராட்டி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

2600 கிலோ எடையுள்ள உழவு இயந்திரத்தை 50 மீற்றர் தூரம் வரை கழுத்தினால் இழுத்து திருச்செல்வம் சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

## நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் குரோதி புதுவருட பூஜைகள்



மலர்ந்துள்ள குரோதி புது வருடப்பிறப்பை முன்னிட்டு, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களில் விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வகையில், யாழ்ப்பாணம் நல்லையம்பதி நல்லூர் கந்தசாமி ஆலயத்திலும் புதுவருட பூஜைகள் இடம்பெற்றன. ஆலய பிரதம குரு வ.வைகுந்தன் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரிகள் இப்பூஜைகளை நடாத்தி வைத்தனர்.அலங்கார கந்தன், வள்ளி, தெய்வானைக்கு விஷேட கிரியைகள் இடம்பெற்று, முருகப் பெருமான் மயில் வாகனத்தில் வீற்றிருந்து எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

## சாராய போத்தலுடன் பெண் கைது

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஊரெழு பகுதியில், சாராய போத்தல்களுடன் பெண் ஒருவர் கைதானார். இவரிடமிருந்து 75 சாராய போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. வியாபார நோக்கிற்காக இப்பெண் இச்சாராய போத்தல்களை தயார் படுத்தி வைத்திருந்தார். ஒவ்வொரு போத்தலிலும் கால் லீற்றர் அளவு சாராயம் நிரப்பப்பட்டிருந்தது. கைதான 36 வயதுடைய பெண்ணிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து ள்ளனர். கைதான இப்பெண்ணை நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளது. இவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

போதை ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சுன்னாகம் பொலிஸார், பிரதேசம் எங்கிலும் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## தமிழர் சமாதான நீதிவான் பேரவை அங்குரார்ப்பணம்

இலங்கை தமிழர் சமாதான நீதிவான் பேரவை உதயமாகியுள்ளது. இந்த அமைப்பை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 05 இல் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் அமைந்துள்ள ஈசிற்றி ஆங்கிலக் கல்லூரி வளாக மண்டபத்தில் பிற்பகல் இரண்டு மணிக்கு இந்நிகழ்வு மங்களகரமாக இடம்பெறும்.

வவுனியா பல்கலைக் கழக உபவேந்தர் சுப்பிரமணியம் மோகனதாஸ் இதில், பிரதம அதிதியாக பங்கேற்கிறார்.சிறப்பு அதிதிகளாக மலையக மக்கள் முன்னணி சிரேஷ்ட உப தலைவர் முனைவர் சிவலிங்கம் சதீஷ் குமார், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியரும் உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கான உப தலைவருமான தே.செந்தில்வேலவர் மற்றும் கிருபா லேணர்ஸ் உரிமையாளரும் தொழிலதிபருமான அ.கிருபாகரன் ஆகியோர் கலந்துகொள்வர்.



## உலக தாய்மொழி தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

வெண்கரம் படிப்பக மாணவர்களால் உலக தாய்மொழி தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. வெண்கரம் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற "எங்கள் இனத்தின் அடையாளம் தமிழ்"எனும்தொனிப் பொருளில் இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வெண்கரம் படிப்பக மாணவி அபிநயா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. வெண்கரம் பிரதான செயற்பாட்டாளரும் ஆசானுமாகிய திருமதி நி.சுமித்ரா இதை, நெறிப்படுத்தியிருந்தார்.

கலை நிகழ்வுகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வெண்கரம் பிரதான செயற்பாட்டாளர் திரு மு.கோமகன் வழங்கினார்.



எழுத்தாளர் விவேகானந்தனூர் சதீஷ் அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அவரது தாயார் திருமதி செல்லையா பவளவள்ளி பயனுள்ள புத்தகங்களை மாணவர்களுக்கு பரிசாக வழங்கினார்.

## காணி உரிமையாளர்கள் ஆளுநருடன் கலந்துரையாடல்



கேப்பாபிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் அண்மையில், வட மாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. காணி உரிமையாளர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர்.இராணுவத்தினர் கையகப்படுத்தி உள்ள தமது காணிகளை அவசரமாக விடுவித்துத் தருமாறு இவர்கள் கோரினர். இக்காணிகளை விடுவிக்குமாறு பல நாட்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. இந்நிலையிலே, இவர்கள் ஆளுநரைச் சந்தித்து தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தினர்.

இராணுத்தினர் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்க உரிய ஏற்பாடுகளைச் செய்வதாக ஆளுநர் உறுதியளித்ததாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

# மலைச்சாரல்



கடும்காற்று காரணமாக காவத்தை தலுகலை தோட்ட வீதியில் பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து தடை ஏற்பட்டிருந்தது. இதில் எவருக்கும் எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படவில்லை. (படம் :காவத்தை தினகரன் விசேட நிருபர்)



கம்பளை புப்புரஸ்ஸ லெவலன் பெக்ட்ரி டிவிசன் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் புனரமைப்பு பணிகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுக்குமார் மற்றும் மத்திய மாகாண முன்னாள் அவைத் தலைவர் மதியுகராஜா கண்டி வர்த்தக சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## புசல்லாவையில் கோர விபத்து உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு





(ஆ.ரமேஷ்)

புசல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்பொட கட்டுகித்துல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வேன் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கதிரமுள்ளை மற்றும் ரிதிகம பிரதேசங்களிலிருந்து NW/GO 0895 என்ற இலக்கம் கொண்ட வேனில் பயணித்தவர்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

நுவரெலியா வசந்தகால நிகழ்வுகளை பார்வையிட்டு திரும்பிவரும் வழியிலேயே இக்கோர விபத்துக்கு முகம்கொடுத்துள்ளனர். கட்டுகித்துல பகுதியில் வீதியை விட்டு விலகி சுமார் 150 அடி பள்ளத்தில் வேன் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான வேனில் இரு பெண்கள் ,இரண்டு வயது குழந்தை, வேன் உரிமையாளர், மூன்று ஆண்கள் என ஏழு பேர் பயணித்துள்ளனர்.

இவர்களில் மொஹமட் அணிஸ் ஆதில் என்ற இரண்டு வயதான குழந்தை மற்றும் எஸ்.எல்.எம்.அமீர்தீன் ஆகியோர் விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

ஏனைய ஐவருக்கும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதுடன் அவர்கள் புசல்லாவை வவுக்பிட்டிய பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் அவர்களில் மொஹமட் பீபீ (வயது 60) என்ற வயதான பெண் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

அதேநேரத்தில் சம்பவத்தில் உயிரிழந்த 2 வயது குழந்தையின் தாயான ரிப்னா (வயது 30) குழந்தையின் தந்தை ,வேன் உரிமையாளர் மற்றும் மேலும் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சைப் பெற்றுவருகின்றனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் புசல்லாவை பொலிஸார் தெரிவித்தனர்.

## சீரற்ற காலநிலை

பதுளை, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் நிலவுவதாக வானிலை அவதானநிலையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக சப்ரகமுவ, ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீ அளவான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ மாகாணத்தில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான காலநிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## விருந்துபசாரத்தில் துப்பாக்கிச் சூடு; இருவர் படுகாயம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

ஹம்பேகமுவ சீனுக்கல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தாண்டை முன்னிட்டு வீட்டின் உரிமையாளர் தனது உறவினர்கள், நண்பர்களுக்காக நேற்று முன்தினம் (14) இரவு நடத்திய விருந்துபசார நிகழ்விலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் விருந்துபசாரத்திலிருந்த இருவரை இலக்கு வைத்து துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவரும் ஹம்பேகமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக எம்பிலிப்பிடிய அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## சென். கிளையர் தமிழ் மகா வித்தியாலயத்தின் 80ஆண்டு நிறைவு



நுவரெலிய கல்வி வலயத்தின் தலவாக்கலை சென்.கிளையர் தமிழ் மகா வித்தியாலயத்தின் 80 வது ஆண்டு நிறைவு விழாவும், ‘பொழில்’ நூல் வெளியீடும், பரிசளிப்பு நிகழ்வும் பாடசாலை அதிபர் வேலாயுதம் தினகரன் தலைமையில் அண்மையில் கொட்டகலை ரிஷிகேஷ் மண்டபத்தில் விமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் கலந்துகொண்டதோடு . சிறப்பு அதிதிகளாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எஸ். முரளிதரன், நுவரெலிய கல்வி வலயத்தின் கோட்டம் இரண்டின் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ் ஜெகதீஸ்வரன், ஆசிரிய ஆலோசகர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## தீவிபத்தில் பெண் உயிரிழப்பு

திம்புலபத்தனை – கொட்டகலை பிரதேசத்தில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.



குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் அறையொன்றில் தீ பரவியதாகவும், தீக்காயங்களுக்குள்ளான பெண் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கொட்டகலை பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய பெண் என தெரிவிக்கப்படுகிறது.

# ராகுல் பயணம் செய்த ஹெலியில் சோதனை!



நீலகிரியில் தி.மு.க வேட்பாளர் ஆ.ராசாவை ஆதரித்து பிரசாரம் செய்ய வந்த காங்கிரஸ் எம்.பி., ராகுலின் ஹெலிகொப்டரில் தேர்தல் பறக்கும்ப டையினர் சோதனை மேற்கொண்டனர். நேற்றுமுன்தினம் ஊட்டி வந்த அமைச்சர் உதயநிதியின் ஹெலி கொப்டரும் சோதனை செய்யப்பட்டது.

நீலகிரி லோக்சபா தொகுதியில் பா.ஜ.க வேட்பாளர் எல்.முருகனை எதிர்த்து தற்போதைய தி.மு.க எம்.பி.,யான ஆ.ராசா போட்டியிடுகிறார். ராசாவை ஆதரித்து பிரசாரம் செய்ய நேற்று காங்கிரஸ் எம்.பி ராகுல் நீலகிரி மாவட்டம் கூடலூருக்கு ஹெலிகொப்டரில் வந்தார்.

அப்போது, ராகுல் வந்த ஹெலி கொப்டரில் தேர்தல் பறக்கும் படையினர் திடீரென சோதனை மேற்கொண்டனர். இதனால் சிறிதுநேரம் பரபரப்பு ஏற்பட்டது.

இதேவேளை நேற்றுமுன்தினம் ஊட்டிக்கு, தேர்தல் பிரசாரத்திற்காக அமைச்சர் உதயநிதி வந்த ஹெலி கொப்டரை, தேர்தல் பறக்கும் படையினர் சோதனை செய்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தமிழர் ஒருவரை எம்.பியாக நியமிக்க வேண்டும்

## இந்திய அரசுக்கு உலகத்தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வகுமார் வேண்டுகோள்



'தமிழோடு உறவாடுவோம்' என தமிழ்ப் புத்தாண்டு சித்திரை தினத்தில் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு, நம் சமுதாயத்தின் சிந்தனைகள் உயர்வு பெற வேண்டும் எனவும் உலகத் தமிழர்கள் ஒற்றுமையுடன் செயல்பட்டு தமிழ் சமுதாயம் மேலோங்க வேண்டுமெனவும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வகுமார் வாழ்த்துத் தெரிவித்தார். "உலக மக்கள் தொகையில் இரண்டு சதவீதம் உள்ள தமிழர்கள் 12 நாடுகளில் வாழ்கின்றார்கள். 152 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். நம் தமிழ் சமுதாயம் மனித வளம், கல்வி, பொருளாதாரத்தில் உயர வேண்டும். அதேபோல் பல்வேறு நாடுகளில் உள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தங்களின் அரசாங்கங்கள் மூலம் தமிழர்களுக்கு நலத்திட்ட உதவிகள், அரசாங்க சலுகைகள் போன்றன சென்றடையுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதேபோல் நம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தந்த நாட்டின் இறையாண்மைக்கு ஏற்ப அனைத்து நாடுகளிலும் இராஜாங்க உறவை பலப்படுத்தி அதன்மூலம் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்களுக்கு உதவி செய்ய வேண்டும். மேலும் தமிழர்கள் இந்திய மக்கள் தொகையில், தமிழ்நாடு மற்றும் பல மாநிலங்களில் சேர்த்து 8 சதவீதத்துக்கு மேல் வசிக்கிறார்கள். அயல்நாடுகளில் மூன்று கோடியே அறுபது இலட்சம் தமிழர்கள் வசிக்கின்றனர்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றனர். இவை அனைத்தையும் சுமுகமாகத் தீர்க்க வேண்டும் என்றால் இந்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் கீழ் அரசியல் சார்பற்ற ஒரு நபரை நியமன எம்.பியாக நியமித்து அதன் மூலம் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியும். எனவே, இந்தியாவில் அடுத்து அமையப்போகும் மத்திய அரசு அரசியல் சார்பற்ற ஒருவரை நியமன எம்.பி.யாக அமர்த்த வேண்டும்."

இவ்வாறு உலகத்தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வகுமார் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாரதம் சமகால நடப்புகள்

# தமிழகத்தில் பிரசாரம் நாளை முடிவு; அரசியல் களத்தில் தீவிர பரபரப்பு!



இந்திய நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. தமிழகத்தில் முதல் கட்ட தேர்தல் பிரசாரம் முடிவடைய இன்னும் 2 நாட்களே உள்ள நிலையில், இறுதிக்கட்ட பிரசாரத்தில் அரசியல் கட்சி தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும் நிலையில், தேர்தல் பிரசாரம் 17 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. நெல்லையில் நேற்று பிரதமர் மோடி, சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரசாரத்தில் ஈடுபட்டனர். இறுதிக்கட்ட பிரசாரத்தில் அரசியல் கட்சித் தலைவர்கள் ஈடுபட்டுள்ளதால் அரசியல் களம் பரபரப்பாகி உள்ளது.

அதன்படி நேற்று திங்கட்கிழமை 8 ஆவது முறையாக தமிழகம் வந்து சேர்ந்த பிரதமர் நரேந்திர மோடி, நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகே அகஸ்தியர்பட்டியில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் பேசினார்.

இதேபோல் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே நேற்று திங்கட்கிழமை புதுச்சேரி, கடலூர், விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதிகளில் பிரசாரம் மேற்கொண்டார். இதேபோல், தமிழகம்முழுவதும் பிரசாரத்தை முடித்துகொண்டு தலைநகர் சென்னைக்கு திரும்பியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திருவள்ளூர் காங்கிரஸ் வேட்பாளர் சசிகாந்த் செந்தில், வடசென்னை தி.மு.க. வேட்பாளர் கலாநிதி வீராசாமி ஆகியோருக்கு ஆதரவு திரட்டினர்.

இதேபோல், அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க் கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமியும் நேற்று மத்திய சென்னை தொகுதியில் போட்டியிடும் தே.மு.தி.க. வேட்பாளர் பார்த்தசாரதி, தென்சென்னை தொகுதியில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் டாக்டர் ஜெயவர்தன் ஆகியோருக்கு வாக்கு சேகரித்தார்.

இதேபோல் மத்திய இணை அமைச்சர் வி.கே.சிங், பா.ஜனதா வேட்பாளர்களை ஆதரித்து சென்னையில் நேற்று பா.ஜ.க வேட்பாளருக்கு ஆதரவாக பிரசாரம் செய்தார். நேற்றுக் காலை 9 மணி முதல் 11 மணி வரை தென்சென்னை பா.ஜ.க வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜனுக்கு ஆதரவு திரட்டினர். எதிர் வரும் 17 ஆம் திகதி மாலை 5 மணியுடன் தமிழகத்தில் பிரசாரம் ஓய்கிறது. தேர்தல் நாளான 19 ஆம் திகதி காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்க இருக்கிறது.

திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது

# சல்மான் கான் வீடு மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியோர் அடையாளம் காணப்பட்டனர்!



நடிகர் சல்மான் கான் வீட்டின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள், அடையாளம் காணப்பட்டுள்ளனர். மும்பை பாந்த்ராவில் நேற்றுமுன்தினம் அதிகாலையில் நடிகர் சல்மான் கான் வீட்டின் மீது மோட்டார்சைக்கிளில் வந்த இரண்டு பேர் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றனர்.

அவர்கள் வந்த பைக் சம்பவ இடத்தில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிச்சூடு சம்பவத்தை தொடர்ந்து சல்மான் கானுடன் முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தொலைபேசியில் தொடர்பு கொண்டு விசாரித்தார். அதோடு மும்பை பொலிஸ் கமிஷனருடனும் முதல்வர் இது குறித்து பேசி சல்மான் கான் வீட்டிற்கு பாதுகாப்பை அதிகரிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

உயர் பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை நடத்தினர். அதோடு சல்மான் கான் வீட்டிற்கு கூடுதல் பொலிஸார் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். நவநிர்மாண் சேனா தலைவர் ராஜ் தாக்கரே நேற்றுமுன்தினம் சல்மான் கான் வீட்டிற்கு சென்று விசாரித்துவிட்டு வந்துள்ளார்.

துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள் யார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. சல்மான் கானுக்கு நீண்ட நாள்களாக கொலை மிரட்டல் விடுத்துக் கொண்டிருக்கும் லோரன்ஸ் பிஷ்னோய் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் இந்த துப்பாக்கிச்சூட்டை நடத்தி இருப்பது தெரியவந்தது. துப்பாக்கிச்சூடு நடத்தியவரின் பெயர் விஷால் என்று தெரியவந்துள்ளது. ஏற்கெனவே குருகிராம் பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் சச்சின் முஞ்சால் என்பவரை கொலை செய்த வழக்கில் விஷால் தேடப்பட்டு வருகிறான். தற்போது ராஜஸ்தானில் லோரன்ஸ் பிஷ்னோய் கூட்டத்தை வழிநடத்தி வரும் ரோஹித் கோதாரா என்பவனின் கீழ் விஷால் செயல்பட்டு வருகிறான்.

துப்பாக்கிச்சூடு நடத்திய இரண்டு பேரும் மும்பையில் இருந்து தப்பிவிட்டனர். கண்காணிப்பு கேமரா பதிவு மூலம் அவர்கள் இருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். துப்பாக்கிச்சூடு நடந்தபோது சல்மான் கான் வீட்டில்தான் இருந்துள்ளார். அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பி இருக்கிறார்.

இதற்கு முன்னதாக லோரன்ஸ் பிஷ்னோய் சகோதரர் அன்மோல் பிஷ்னோய் இ த்துப்பாக்கிச்சூட்டிற்கு பொறுப்பு ஏற்றுள்ளார். இது தொடர்பாக அவர் பேஸ்புக் பக்கத்திலும் பதிவிட்டுள்ளார். அவர் தனது பதிவில் `இது ஆரம்பம் தான். எங்களது திறமையை தெரிந்து கொள்ளுங்கள். இது இறுதி எச்சரிக்கை' என்று குறிப்பிட்டுள்ளார்.

# இரண்டு இலட்சம் இந்தியர்களின் கணக்குகள் எக்ஸ் தளத்தில் நீக்கம்!

சமூக வலைதளங்களில் ஒன்றான எக்ஸ் தளம் ஒரே மாதத்தில் 2 இலட்சம் இந்தியர்கள் கணக்குகளை நீக்கி உள்ளதாக அறிவித்துள்ளது

கடந்த ஒரே மாதத்தில் மட்டும் 2.13 இலட்சம் இந்தியர்களின் கணக்குகள் நீக்கப்பட்டுள்ளதாக எக்ஸ் தளத்தின் மாதாந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

சட்டவிரோத செய்திகள் பரப்புதல், பாலியல் காணொளிகளை பரப்புதல் உள்ளிட்ட காரணங்களுக்காக இந்தக் கணக்குகள் நீக்கப்பட்டுள்ளதாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆயிரத்திற்கும் மேலான இந்தியர்களின் கணக்குகள் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் வகையில் இருப்பதாகவும் மத்திய அரசிடம் எக்ஸ் தளம் குற்றம் சாட்டியுள்ளது

மேலும் ஐயாயிரத்துக்கும் அதிகமான கணக்குகள் மீது புகார் பெறப்பட்டு உள்ளதாகவும், அந்த கணக்குகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது. ஒரே மாதத்தில் 2 இலட்சத்துக்கும் அதிகமான இந்தியர்களின் கணக்குகள் நீக்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# இந்திய தேர்தல் வரலாற்றில் முதன்முறையாக 4,650 ரூபா கோடி பணம், பொருட்கள் பறிமுதல்!

## மதுபானம், தங்கம், வெள்ளி, பணம், போதைப்பொருள் மீட்பு!



இந்திய தேர்தல் வரலாற்றில் முதல் முறையாக இந்தியா முழுவதும் ரூ.4,650 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது

நாடாளுமன்ற தேர்தல் நாடு முழுவதும் எதிர்வரும் 19 ஆம் திகதி தொடங்கி ஜூன் 1 ஆம் திகதி வரை 7 கட்டங்களாக நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 4 ஆம் திகதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தல் நெருங்கிவரும் நிலையில் அரசியல் கட்சி தலைவர்கள் அனல் பறக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதையொட்டி வாக்காளர்களுக்கு அரசியல் கட்சிகள் வாக்குக்காக பணம் கொடுப்பதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை தேர்தல் கமிஷன் மேற்கொண்டு வருகிறது. பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு ஆகியவை அதற்கான சோதனைகளை நடத்தி வருகின்றன. இந்த நிலையில், இந்திய தேர்தல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு முதற்கட்ட வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பாக இந்தியா முழுவதும் ரூ.4,650 கோடி மதிப்புள்ள பணம், பொருட்கள் கைப்பற்றப்பட்டு இருப்பதாக இந்திய தலைமை தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. கைப்பற்றப்பட்ட பொருட்களில் 45 சதவீதம் போதைப்பொருட்கள் எனவும் அதிர்ச்சிகரமான தகவலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

கடந்த மார்ச் 1 ஆம் திகதி முதல் தினமும் ரூ.100 கோடி பறிமுதல் செய்யப்படுவதாகவும் இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. 2019 தேர்தலில் பறிமுதல் செய்யப்பட்ட மொத்த தொகையை விட இது அதிகம் என்றும் இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்தச் சோதனையில் ரூ.4.43 கோடி அளவில் மதுபானங்களும், ரூ.78.75 கோடி மதிப்பில் தங்கம், வெள்ளி பொருட்களும், ரூ.31 கோடி மதிப்பிலான இலவச பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் மார்ச் 1 ஆம் திகதி முதல் ஏப்ரல் 13 ஆம் திகதி வரை ரூ.53 கோடிக்கு மேல் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது

# ஆதரவற்ற சிறார்களுக்கு 'ஜனாதிபதியின் புத்தாண்டு பரிசு'



திறப்பனை தினகரன் நிருபர்

பராமரிப்பு இல்லங்களில் உள்ள சிறார்களுக்கு "ஜனாதிபதியின் புத்தாண்டு பரிசுகள்" என்ற தொனிப்பொருளில் அநுராதபுரம் எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமத்தின் சிறார்களுக்கும் 212 ஆவது படைத் தளபதி பிரிகேடியர் சமிந்த ரத்நாயக்க தலைமையில் அண்மையில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 126 சிறார்களுக்கு பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அலுவலகம், பாதுகாப்புப் படைகளின் பிரதானி அலுவலகம் மற்றும் இலங்கை இராணுவம் இணைந்து இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தன. சி.பி.எல். நிறுவனம் இதற்கு நிதியுதவி வழங்கியிருந்தது.

இதன் மூலம் நாடு முழுவதும் 336 மையங்களில் இருக்கும் 8721 குழந்தைகளுக்கு இப் "பெருநாள் பரிசுகள்" வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# கூரிய ஆயுதத்தால் தாக்கி 37வயது நபர் கொலை

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் எலயாபத்துவ திப்படுவாகம விகாரை வீதியில் கத்தி மற்றும் கத்தரிக் கோல்களால் குத்தி ஒருவரை கொலை செய்துள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக எலயாபத்துவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (14) மாலை எலயாபத்துவ பொலிஸ் பிரிவின் திப்படுவாகம விகாரை வீதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். 37 வயதுடைய மஹபுளங்குளம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; இரு சாராருக்கிடையில் மது போதையில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இக்கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. கொலைச்சம்பவத்துடன் தொடர்புடைய 43 வயதுடைய மஹபுளங்குளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எலயாபத்துவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பண்டார வின் ஆலோசணைப்படி குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புத்தாண்டின் பின் கொழும்பு திரும்புபவர்களுக்கு விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகள்

## நேற்று முதல் ஆரம்பம்



லோரன்ஸ் செல்வநாயகம்

புது வருட கொண்டாட்டங்களுக்காக சொந்த ஊர்களுக்கு சென்றவர்கள் மீண்டும் கொழும்புக்குத் திரும்பி வருவதற்காக மேலதிக ரயில் மற்றும் பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படுவதாக ரயில்வே மற்றும் இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதற்காக மேலதிக ரயில் சேவைகள் நேற்று பிற்பகல் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே பிரதிப் பொது முகாமையாளர் நந்தன இந்திபொலகே தெரிவித்துள்ளார்.

அதன்படி நேற்றும் இன்றும் பதுளை, காலி மற்றும் பெலியத்தை ரயில் நிலையங்களிலிருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு 8 மேலதிக ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவற்றைத் தவிர இன்றைய தினம் 16ஆம் திகதி முதல் அலுவலக ரயில் சேவைகள் வழமை போன்று இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதே வேளை, வெளி மாகாணங்களிலிருந்து கொழும்புக்கு தொழிலுக்காக திரும்புபவர்கள் நலன் கருதி விசேட பஸ் சேவைகளை நடத்துவதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் லலித் அல்விஸ் அது தொடர்பில் தெரிவிக்கையில், அம்பாறை, பதுளை, ஹட்டன், மொனராகலை உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வழமையான நேர அட்டவணைக்கு மேலதிகமாக பஸ் சேவைகள் நடத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**நீர்ப்பாசன அமைச்சு**

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அனுகுமுறை**

**செயற்றிட்ட அடையாளம் - P 160005 / கடன் இலக்கம்: IBRD-89960**

### தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல்

**விலைக்கோரல் இலக்கம் :** CResMPA-1/RP/WORKS/ID-JAF/NCB/001, NCB/002, NCB/004 & NCB/007
CResMPA-1/RP/WORKS/ID-VAV/ NCB/011 & NCB/015
CResMPA-1/RP/WORKS/ID-KILI/NCB/005, NCB/012, NCB/014, NCB/015&NCB/016

1. காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அனுகுமுறை (**CResMPA**) கிரயச் செலவிற்காக மீள் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து (IBRD) கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் பெற்றுள்ளது என்பதுடன் இந்தக் கடனின் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலை ஒப்பந்தங்களின் கீழான தகுதியான கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தவுள்ளது. தகுதியுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மன்னார் - நீர்ப்பாசனப் பணிப்பாளர் அழைக்கின்றார்.

| ஒப்பந்த பொதி இலக்கம் | வேலையின் பெயர் | முடிவுறுத்தும் காலம் (மாதங்கள்) | ICTAD (ஆகக் குறைந்த தரம்) | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைக்கோரல் பிணை முறி | | விலை மனுக்களின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை (இல. ரூபா) | காலம் (நாட்கள்) | |
| CResMPA-1/RP/WORKS/ID-JAF/NCB/001 | கப்பூற்று வாதரவத்தை வெள்ள பாதுகாப்பு அணையை புனரமைத்தல் | 06 | C7 | 3,100.00 | 150,000.00 | 105 (2024-08-19ஆம் திகதி வரை) | 77 நாட்கள் |
| CResMPA-1/RP/WORKS/ID-JAF/NCB/002 | செம்மணி கோப்பாய் வெள்ள பாதுகாப்பு அணையை புனரமைத்தல் | 06 | C6 | 5,600.00 | 190,000.00 | 105 (2024-08-19ஆம் திகதி வரை) | 77 நாட்கள் |
| CResMPA-I/RP/WORKS/ID-JAF/NCB/004 | கந்தரோடை குளத்தை புனரமைத்தல் | 06 | C6 | 5,300.00 | 160,000.00 | 105 (2024-08-19ஆம் திகதி வரை) | 77 நாட்கள் |
| CResMPA-I/RP/WORKS/ID-JAF/NCB/007 | வல்லை முதல் வாதரவத்தை வரையில் வெள்ள பாதுகாப்பு அணையை புனரமைத்தல் | 06 | C6 | 5,600.00 | 200,000.00 | 105 (2024-08-19ஆம் திகதி வரை) | 77 நாட்கள் |
| CResMPA-1/RP/WORKS/ ID-VAV/ NCB/011 | மாங்குளத்திலுள்ள FC-08 A கால்வாயின் மேம்படுத்தல்கள் | 06 | C7 | 2,500.00 | 90,000.00 | 105 (2024-08-19ஆம் திகதி வரை) | 77 நாட்கள் |
| CResMPA-1/RP/WORKS/ ID-VAV/ NCB/015 | ராஜேந்திரன் குளத்தின் இடதுகரை பிரதான கால்வாயின் மேம்படுத்தல்கள் | 06 | C7 | 2,900.00 | 110,000.00 | 105 (2024-08-19ஆம் திகதி வரை) | 77 நாட்கள் |
| CResMPA-1/RP/WORKS/ID-KILI/NCB/005 | இரணைமடு இடதுகரை பிரதான கால்வாயிலுள்ள சரவணாஸ் பாலத்தின் மீள்நிர்மாணம் | 06 | C6 | 7,750.00 | 380,000.00 | 105 (2024-08-19ஆம் திகதி வரை) | 77 நாட்கள் |
| CResMPA-1/RP/WORKS/ID-KILI/NCB/012 | கிளிநொச்சி கமநல சேவை நிலையத்திலுள்ள LR அணைக்-கட்டின் மீள்நிர்மாணம் | 06 | C7 | 3,100.00 | 125,000.00 | 105 (2024-08-19ஆம் திகதி வரை) | 77 நாட்கள் |
| CResMPA-1/RP/WORKS/ID-KILI/NCB/014 | பூநகரி கமநல சேவை நிலையத்திலுள்ள கரியம்பிட்டிக்குளம் வலதுகரை மற்றும் இடதுகரை கால்வாய்களின் நிர்மாணம் | 06 | C7 | 2,800.00 | 110,000.00 | 105 (2024-08-19ஆம் திகதி வரை) | 77 நாட்கள் |
| CResMPA-1/RP/WORKS/ID-KILI/NCB/015 | கிளிநொச்சி கமநல சேவை நிலையத்திலுள்ள புதுலயன்குளம் பிரதான கால்வாய் I மற்றும் II என்பவற்றின் நிர்மாணம் | 06 | C7 | 2,400.00 | 80,000.00 | 105 (2024-08-19ஆம் திகதி வரை) | 77 நாட்கள் |
| CResMPA-1/RP/WORKS/ID-KILI/NCB/016 | அக்கராயன்குளம் கமநல சேவை நிலையத்திலுள்ள மணியன்கு-ளம் இடதுகரை மற்றும் வலதுகரை கால்வாய்களின் நிர்மாணம் | 06 | C7 | 2,600.00 | 100,000.00 | 105 (2024-08-19ஆம் திகதி வரை) | 77 நாட்கள் |

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் தகுதிநீக்கம் செய்யப்பட்ட பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் அலுவலகங்களில் இலவசமாக விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். விரும்பினால் தொடர்பு விபரங்களுடன் பின்வரும் இயைபுடைய அதிகாரிகளிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | அதிகாரிகள் | முகவரி | தொலைபேசி இலக்கம் | விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| கப்பூற்று வாதரவத்தை வெள்ள பாதுகாப்பு அணையை புனரமைத்தல் | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் (PID), கிளிநொச்சி | வட்டக்கச்சி வீதி, கிளிநொச்சி | 021-2283969 | • நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், பண்ணை, யாழ்ப்பாணம். தொ.பே. 021-2222288<br>• நீர்ப்பாசனப் பணிப்பாளர், மன்னார் பிராந்தியம், முருங்கன்.<br>• தொ.பே. 023-2050351 |
| செம்மணி கோப்பாய் வெள்ள பாதுகாப்பு அணையை புனரமைத்தல் | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் (PID), கிளிநொச்சி | வட்டக்கச்சி வீதி, கிளிநொச்சி | 021-2283969 | • நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், பண்ணை, யாழ்ப்பாணம். தொ.பே. 021-2222288<br>• நீர்ப்பாசனப் பணிப்பாளர், மன்னார் பிராந்தியம், முருங்கன்.<br>• தொ.பே. 023-2050351 |
| கந்தரோடை குளத்தை புனரமைத்தல் | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் (PID), கிளிநொச்சி | வட்டக்கச்சி வீதி, கிளிநொச்சி | 021-2283969 | • நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், பண்ணை, யாழ்ப்பாணம். தொ.பே. 021-2222288<br>• நீர்ப்பாசனப் பணிப்பாளர், மன்னார் பிராந்தியம், முருங்கன்.<br>• தொ.பே. 023-2050351 |
| வல்லை முதல் வாதரவத்தை வரையில் வெள்ள பாதுகாப்பு அணையை புனரமைத்தல் | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் (PID), கிளிநொச்சி | வட்டக்கச்சி வீதி, கிளிநொச்சி | 021-2283969 | • நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், பண்ணை, யாழ்ப்பாணம். தொ.பே. 021-2222288<br>• நீர்ப்பாசனப் பணிப்பாளர், மன்னார் பிராந்தியம், முருங்கன்.<br>• தொ.பே. 023-2050351 |
| மாங்குளத்திலுள்ள FC-08 A கால்வாயின் மேம்படுத்தல்கள் | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர், வவுனியா | இல. 06, கண்டி வீதி, வவுனியா | 024-2222584 | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், மன்னார் பிராந்தியம், முருங்கன்.<br>தொ.பே. 023-2050351 |
| ராஜேந்திரன் குளத்தின் இடதுகரை பிரதான கால்வாயின் மேம்படுத்தல்கள் | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர், வவுனியா | இல. 06, கண்டி வீதி, வவுனியா | 024-2222584 | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், மன்னார் பிராந்தியம், முருங்கன்.<br>தொ.பே. 023-2050351 |
| இரணைமடு இடதுகரை பிரதான கால்வாயிலுள்ள சரவணாஸ் பாலத்தின் மீள்நிர்மாணம் | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் (PID), கிளிநொச்சி | வட்டக்கச்சி வீதி, கிளிநொச்சி | 021-2283969 | கமநல அபிவிருத்தித் திணைக்களம், பரந்தன், கிளிநொச்சி.<br>நீர்ப்பாசனப் பணிப்பாளர்,மன்னார் பிராந்தியம், முருங்கன்.<br>தொ.பே. 023-2050351 |
| கிளிநொச்சி கமநல சேவை நிலையத்திலுள்ள LR அணைக்-கட்டின் மீள்நிர்மாணம் | உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்-தித் திணைக்களம், கிளிநொச்சி | பரந்தன், கிளிநொச்சி | 021-2285904 | கமநல அபிவிருத்தித் திணைக்களம், பரந்தன், கிளிநொச்சி.<br>நீர்ப்பாசனப் பணிப்பாளர்,மன்னார் பிராந்தியம், முருங்கன்.<br>தொ.பே. 023-2050351 |
| பூநகரி கமநல சேவை நிலையத்திலுள்ள கரியம்பிட்டிக்குளம் வலது கரை மற்றும் இடது கரை கால்வாய்களின் நிர்மாணம் | உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்-தித் திணைக்களம், கிளிநொச்சி | பரந்தன், கிளிநொச்சி | 021-2285904 | கமநல அபிவிருத்தித் திணைக்களம், பரந்தன், கிளிநொச்சி.<br>நீர்ப்பாசனப் பணிப்பாளர்,மன்னார் பிராந்தியம், முருங்கன்.<br>தொ.பே. 023-2050351 |
| கிளிநொச்சி கமநல சேவை நிலையத்திலுள்ள புதுலயன்குளம் பிரதான கால்வாய் I மற்றும் II என்பவற்றின் நிர்மாணம் | உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்-தித் திணைக்களம், கிளிநொச்சி | பரந்தன், கிளிநொச்சி | 021-2285904 | கமநல அபிவிருத்தித் திணைக்களம், பரந்தன், கிளிநொச்சி.<br>நீர்ப்பாசனப் பணிப்பாளர்,மன்னார் பிராந்தியம், முருங்கன்.<br>தொ.பே. 023-2050351 |
| அக்கராயன்குளம் கமநல சேவை நிலையத்திலுள்ள மணியன்கு-ளம் இடதுகரை மற்றும் வலதுகரை கால்வாய்களின் நிர்மாணம் | உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்-தித் திணைக்களம், கிளிநொச்சி | பரந்தன், கிளிநொச்சி | 021-2285904 | கமநல அபிவிருத்தித் திணைக்களம், பரந்தன், கிளிநொச்சி.<br>நீர்ப்பாசனப் பணிப்பாளர்,மன்னார் பிராந்தியம், முருங்கன்.<br>தொ.பே. 023-2050351 |

5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதிக்கு மேலதிகமாக சித்திகரமான விலைமனுதாரர் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பம், நிதி, சட்டபூர்வம் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-04-16ஆம் திகதி முதல் 2024-05-06ஆம் திகதி வரை மு.ப. 9.30 மற்றும் பி.ப. 2.30 மணிக்கிடையில் ஒவ்வொரு தொகுதிக்கும் மேற்கூறிய அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் முருங்கன், மன்னார் பிராந்தியம், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் அம்பாறை நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
7. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையிலிடப்பட்ட விலைமனுக்களை நகல்பிரதிகளுடன் 2024-05-07ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் ''நீர்ப்பாசனப் பணிப்பாளர், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், மன்னார் பிராந்தியம், முருங்கன்'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் ஒப்படைத்தல் வேண்டும். அல்லது முருங்கன், மன்னார் பிராந்தியம், நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் முருங்கன், மன்னார் பிராந்தியம் நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
8. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் செல்லுபடியாகும் வகையில் (விலைமனுக்கள் செல்லுபடிக் காலம் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளது) இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெறப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்று (விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளது) மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு முருங்கன் - நீர்ப்பாசனப் பொறியியலாளரின் பெயரில் விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுடனான விலைக்கோரல் பிணை முறிகள் அற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

| மாவட்டம் | வேலையின் பெயர் | வேலைத் தள விஜயத்திற்கு உதவும் பிரதேச பொறியியலாளர் | வேலைத் தள விஜயம் (திகதி மற்றும் நேரம்) | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் (திகதி மற்றும் நேரம்) | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | கப்பூற்று வாதரவத்தை வெள்ள பாதுகாப்பு அணையை புனரமைத்தல் | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் (PID), கிளிநொச்சி | 2024-04-24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு | 2024-04-25ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், வவுனியா |
| யாழ்ப்பாணம் | செம்மணி கோப்பாய் வெள்ள பாதுகாப்பு அணையை புனரமைத்தல் | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் (PID), கிளிநொச்சி | 2024-04-24ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு | 2024-04-25ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், வவுனியா |
| யாழ்ப்பாணம் | கந்தரோடை குளத்தை புனரமைத்தல் | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் (PID), கிளிநொச்சி | 2024-04-24ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு | 2024-04-25ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், வவுனியா |
| யாழ்ப்பாணம் | வல்லை முதல் வாதரவத்தை வரையில் வெள்ள பாதுகாப்பு அணையை புனரமைத்தல் | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் (PID), கிளிநொச்சி | 2024-04-24ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு | 2024-04-25ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், வவுனியா |
| வவுனியா | மாங்குளத்திலுள்ள FC-08 A கால்வாயின் மேம்படுத்தல்கள் | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியல-ாளர், வவுனியா | 2024-04-25ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு | 2024-04-25ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், வவுனியா |
| வவுனியா | ராஜேந்திரன் குளத்தின் இடதுகரை பிரதான கால்வாயின் மேம்படுத்தல்கள் | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியல-ாளர், வவுனியா | 2024-04-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு | 2024-04-25ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், வவுனியா |
| கிளிநொச்சி | இரணைமடு இடதுகரை பிரதான கால்வாயிலுள்ள சரவணாஸ் பாலத்தின் மீள்நிர்மாணம் | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் (PID), கிளிநொச்சி | 2024-04-24ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு | 2024-04-25ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், வவுனியா |
| கிளிநொச்சி | கிளிநொச்சி கமநல சேலை நிலையத்திலுள்ள LR அணைக்கட்டின் மீள் நிர்மாணம் | உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், கிளிநொச்சி | 2024-04-24ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு | 2024-04-25ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், வவுனியா |
| கிளிநொச்சி | பூநகரி கமநல சேவை நிலையத்திலுள்ள கரியம்பிட்டிக்குளம் வலது கரை மற்றும் இடது கரை கால்வாய்களின் நிர்மாணம் | உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், கிளிநொச்சி | 2024-04-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு | 2024-04-25ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு | பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், வவுனியா |
| கிளிநொச்சி | கிளிநொச்சி கமநல சேவை நிலையத்திலுள்ள புதுலயன்குளம் பிரதான கால்வாய் I மற்றும் II என்பவற்றின் நிர்மாணம் | உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், கிளிநொச்சி | 2024-04-24ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு | 2024-04-25ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு | பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், வவுனியா |
| கிளிநொச்சி | அக்கராயன்குளம் கமநல சேவை நிலையத்திலுள்ள மணியன்குளம் இடதுகரை மற்றும் வலதுகரை கால்வாய்களின் நிர்மாணம் | உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், கிளிநொச்சி | 2024-04-24ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு | 2024-04-25ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு | பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், வவுனியா |

9. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் வவுனியா நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் இடம்பெறும். (திகதி மற்றும் நேரம் என்பன மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளன.) வளமுள்ள விலைமனுதாரர்கள் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிரதேச பொறியியலாளரின் உதவியுடன் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம் (திகதி மற்றும் நேரம் என்பன மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளன.) மற்றும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றலாம்.
10. சகல பொதிகளுக்கும் அல்லது பட்டியலில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பொதிகளுக்காக விலைமனுதாரர்கள் சுதந்திரமாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். எவ்வாறாயினும் பல பொதிகளுக்காக தகுதியைப் பெறும் பட்சத்தில், மிகவும் சாதகமான பொருளாதார நன்மைகளைக் கவனத்திற்கொண்டு ஒரு விலைமனுதாரருக்கு வழங்கப்படும் பொதிகளின் எண்ணிக்கையை தொழில்வழங்குநர் தீர்மானிப்பார்.
11. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் உறுதியானதுமாகும். பிராந்திய பெறுகைக் குழு தனது சொந்த விருப்பத்தில் ஒன்றை அல்லது சகல விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

**நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**மன்னார் பிராந்தியம், முருங்கன்.**

**திகதி: 2024-04-16.**

## கள்ளுத்தவறணைகளில் விற்பனைக்கான கேள்வி பத்திரம் கோரல் 2024-2025

### புத்தளம் மாவட்டம் நாத்தண்டிய பிரதேச செயலாளர் பிரிவு

2024.07.01 ஆம் திகதி தொடக்கம் 2025.06.30 ஆம் திகதி வரையிலான காலத்துக்குள் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த நாத்தண்டிய பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ள கீழ் வரும அட்டவணையில் குறிப்பிடப்படும் கள்ளுத்தவறணைகளில் சில்லறைகள் விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள் 2024.05.22ஆம் திகதி மு.ப 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு 2024.04.10ஆம் திகதி இடப்பட்ட இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி பத்திரிகையைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் | | கிராமம் | கேள்விப் பத்திரத்திற்கான வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | நாத்தண்டிய | முதுகடுவ | 1000.00 |
| 02 | நாத்தண்டிய | கட்டுனேரிய | 1000.00 |

பிரதேச செயலாளர்
நாத்தண்டிய.
2024.04.16

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

## கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், இலங்கை

### சுகாதார காப்புறுதி சேவையை வழங்கல் - 2024/2025

**IFB No.: GWUIM/GA/05/INS/2024**

1. 2024/2025 ஆம் ஆண்டிற்காக பல்கலைக்கழக நிரந்தர பணியாளர் குழு அங்கத்தினர்களுக்கு சுகாதார காப்புறுதி சேவைகளை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. உத்தேசிக்கப்பட்டுள்ள சேவைக் கால எல்லையானது 365 நாட்களாகும்.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 033 2223784 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பொது நிர்வாக பிரிவிற்கான பதில் கடமையாற்றும் பதிவாளரிடமிருந்து பெற்று யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழக நிர்வாக கட்டிடம், 1 ஆம் மாடி, பொது நிர்வாக பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. தகைமைகள் மற்றும் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:

   அரசாங்க அதிகாரம் பெற்றவர்களினால் வழங்கப்பட்ட வியாபார பதிவு செய்தல் சான்றிதழை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

   பதிவானது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கீழே இருத்தல்.

   உரித்தான துறையில் ஆகக் குறைந்தது ஐந்து வருட அனுபவத்தை விலைமனுதாரர் கொண்டிருத்தல்.

   ஆகக் குறைந்தது 200 ஊழியர் அடங்கலாக கடந்த ஐந்து வருடங்களில் விலைமனுதாரர் ஆகக் குறைந்தது மூன்று (3) நிகரான சேவைகளை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல். இதனிடையே அரசாங்க துறைக்காக விலைமனுதாரர் ஆகக் குறைந்தது இரு (02) நிகரான சேவைகளை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
6. யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழக 2 ஆம் மாடியின் குழு அறையில் 2024.04.26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.
7. பல்கலைக்கழகத்தின் நிர்வாக கட்டிடத்தின் 1 ஆம் மாடியின் பொது நிர்வாக பிரிவின் பதில் கடமையாற்றும் பிரதி பதிவாளரின் அலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்) மீளளிக்கப்படாத கட்டணமாக இலங்கை ரூபா ஐயாயிரத்தை (5000 இ.ரூ.) செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்தப்படல் வேண்டும். கீழேயுள்ள 11 ஆம் பந்தியில் வழங்கப்பட்டவாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாளுக்கு ஒரு நாள் முந்திய தினத்திலும் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம்.
8. அனைத்து விலைமனுதாரர்களும் ஐம்பதினாயிரம் இலங்கை ரூபாவில் மாத்திரம் (50,000 இ.ரூ.) அமைந்துள்ளதும் இலங்கையில் செயற்படும் வங்கியிலிருந்து பெறப்பட்டதும் மீளளிக்கப்படும் விலைமனு பிணையாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும் அல்லது பல்கலைக்கழகத்தின் சிறாப்பரிடம் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
9. இதற்கமைவாக, சுகாதார காப்புறுதி சேவையை வழங்குவதில் ஆர்வமுள்ள சாரார் விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் ஒவ்வொன்றும் தனித்தனியான தபாலுறையில் அடக்கப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகிய இரு விலைமனுக்களையும் அடக்கியுள்ள இந்த இரு தபாலுறைகளும் தனியானதொரு தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் **"Supplying of Health Insurance 2024 & IFB No. GWUIM/GA/05/INS/2024"** என குறிப்பிடப்படல் வேண்டும்.
10. விலைமனுக்கள் 2024.05.09 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழக 2 ஆம் மாடியில் வைக்கப்பட்டுள்ள ''கேள்விப் பெட்டியில்'' சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (கீழ் மட்டம்), கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், கண்டி வீதி, யக்கல என்ற முகவரிக்கு மேலே குறிப்பிட்டுள்ள இறுதித் தினத்திற்கு முன்னராக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்களும் இலத்திரனியல் மூலமாக அனுப்பப்படும் விலைமனுக்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவைகள் நிராகரிக்கப்படும்.
11. விலைமனுக்கள் அவைகளை 2024.05.09 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மூடிய பின்னர், உடனடியாகவே யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழக 2 ஆம் மாடியின் குழு அறையில் திறக்கப்படுமென்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த நிகழ்ச்சிக்கு சமுகமளிக்கலாம்.
12. விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவு அல்லது எந்தவொரு செலவினங்களுக்கும் பல்கலைக்கழகமானது பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ் மட்டம்),**
**கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்,**
**கண்டி வீதி,**
**யக்கல.**
**16.04.2024.**

## ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள் (REIO)

### இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
### சுற்றாடல் அமைச்சு

**கமத்தொழில், வனவியல் மற்றும் ஏனைய காணிப் பயன்பாட்டுத் துறைக்கு** (AFOLU) **மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத் தன்மை கட்டமைப்புத் திட்டம்** (ETF)

### கமத்தொழில், வனவியல் மற்றும் ஏனைய காணிப் பயன்பாட்டுத் துறைக்கு அன்ரோய்ட் மொபைல் அப்லோடிங் வசதிகள் சகிதம் அளவீடு, அறிக்கையிடல் மற்றும் சரிபார்ப்பு (MRV) முறைமையொன்றை உருவாக்குதல்

1. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு உலகளாவிய சுற்றாடல் வசதிகளிடமிருந்து நிதியுதவியொன்றைப் பெற்றுள்ளது என்பதுடன் இதன் ஒரு பகுதியை கமத்தொழில், வனவியல் மற்றும் ஏனைய காணிப் பயன்பாட்டுத் துறைக்கு அன்ரோய்ட் மொபைல் அப்லோடிங் வசதிகள் சகிதம் அளவீடு, அறிக்கையிடல் மற்றும் சரிபார்ப்பு (MRV) முறைமையொன்றை உருவாக்குவதற்காக பிரயோகிக்கவுள்ளது.

   இலங்கை 1993 ஆம் ஆண்டு முதல் காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டில் (UNFCCC) அங்கம் வகிக்கிறது மற்றும் 2016ஆம் ஆண்டின் பெரிஸ் உடன்படிக்கையை அங்கீகரித்துள்ளது. பெரிஸ் ஒப்பந்தத்தின் 13வது பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அளவீடு, அறிக்கையிடல் மற்றும் சரிபார்ப்பு (MRV) ஆகியவற்றிற்கான திட்டமிடப்பட்ட மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத்தன்மை கட்டமைப்பை (ETF) அபிவிருத்தி செய்வதைக் குறிக்கின்றது. மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத்தன்மை கட்டமைப்பிற்கான வழிமுறைகள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் (MPGfs) UNFCCC ஆல் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் UNFCCC இன் தேசிய மையப் புள்ளியாக இருக்கும் சுற்றாடல் அமைச்சு அன்ரோய்ட் மொபைல் அப்லோடிங் வசதிகள் சகிதம் யுகுழுடுரு துறை தொடர்பான தரவுகளின் பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல் வசதிகளுடன் நிர்வகிக்க எதிர்வினையாற்றக்கூடிய நிர்வாகத் தரவுத் தளத்தை உள்ளடக்கிய இணைய அடிப்படையிலான மென்பொருள் தீர்வை உருவாக்க எதிர்பார்க்கின்றது.
2. தொழில்நுட்பத் துறையில் தனியாகவோ அல்லது கூட்டு முயற்சியாகவோ கடந்த 10 வருட காலங்களில் பின்வரும் சேவைகளில் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தி ஆலோசனை சேவைகளை வழங்கிய ஆலோசனை நிறுவனங்கள், கூட்டு நிறுவனங்கள், கூட்டமைப்புகள், அல்லது கூட்டு முயற்சிகளை சுற்றாடல் அமைச்சின் சார்பாக அமைச்சு ஆலோசனை பெறுகைக் குழு அழைக்கின்றது.

| ஆலோசனையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | ஆலோசனைக் காலம் | முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் இறுதி நாள் |
|---|---|---|
| கமத்தொழில், வனவியல் மற்றும் ஏனைய காணிப் பயன்பாட்டுத் துறைக்கு அன்ரோய்ட் மொபைல் அப்லோடிங் வசதிகள் சகிதம் அளவீடு, அறிக்கையிடல் மற்றும் சரிபார்ப்பு முறைமையொன்றை உருவாக்குதல் | 06 மாதங்கள் | 2024-04-29 |

3. 2007 ஆகஸ்ட் மாதத்தின் ஆலோசகர்களைத் தெரிவு செய்தல் மற்றும் வேலை வாய்ப்பிற்கான அரச பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின் பிரகாரம் ஆலோசனை நிறுவனம், கூட்டமைப்பு அல்லது கூட்டு முயற்சி தரம் மற்றும் செலவு அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.
4. ஆர்வமுள்ள ஆலோசனை நிறுவனங்கள், கூட்டமைப்புகள் அல்லது கூட்டுமுயற்சி என்பவர்கள் குறிப்பு விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சேவையைச் செய்யத் தகுதியுடையவர்கள் என்பதைக் குறிக்கும் ஆதார ஆவணங்களுடன் கொடுக்கப்பட்ட வடிவங்களில் பின்வரும் தகவலை வழங்க வேண்டும்.

   அ. அனுபவம், தகைமைகள், சேவை / வியாபாரத்தின் நோக்கம், சட்டபூர்வ நிலைமை, நிர்வாகம் மற்றும் நிதிக் கொள்ளளவு என்பவற்றை உள்ளடக்கிய ஆலோசனை நிறவனம், கூட்டமைப்பு அல்லது கூட்டு முயற்சியின் சுயவிபரம்.

   ஆ. இயைபுடைய துறை நிபுணர்கள் குழுவின் கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகள்

   இ. இயைபுடைய துறை நிபுணர்கள் குழுவின் அனுபவம்.

   ஈ. ஆலோசனைக்கான வழிமுறை, வேலைத் திட்டம் உட்பட தொழில்நுட்ப அணுகுமுறை பற்றிய விளக்கம் (இது ஆலோசனை சேவையின் நோக்கம், வழங்கக்கூடியவை மற்றும் குறிப்பு விதிமுறைகளில் கொடுக்கப்பட்டுள்ள நேரத் திட்டம்)
5. ஆலோசனை சேவையின் குறிப்பு விதிமுறைகள், REOI மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களை 2024 ஏப்ரல் 16ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரையான காலத்தில் www.climatechange.lk மற்றும் www.env.gov.lk எனும் இணையதளங்களிலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள ஆலோசனை நிறுவனங்கள், கூட்டமைப்புகள் அல்லது கூட்டுமுயற்சிகள் மேலதிக தகவல்களை cfpafolu@gmail.com அல்லது +94726400738 ஊடாக AFOLU துறைக்கான ETF திட்டத்தின் நிதி மற்றும் பெறுகை ஆலோசகரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
7. ஆர்வ வெளிப்பாட்டிற்கான முன்மொழிவுகளை ஆங்கில மொழியில் தயாரித்து இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்த ஆர்வ வெளிப்பாடுகளை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையினுள் இட்டு 2024 ஏப்ரல் 29ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஆலோசனை சேவையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

   **பணிப்பாளர் (CC),**
   **காலநிலை மாற்ற செயலகம், 06ஆம் மாடி,**
   **சுற்றாடல் அமைச்சு,**
   **''சொபாதாம் பியச", இல. 416/C/1,**
   **ரொபர்ட் குணவர்தன மாவத்தை,**
   **பத்தரமுல்ல.**
8. தாமதமாக சமர்ப்பிக்கப்படுபவைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்,**
**அமைச்சு ஆலோசனை பெறுகைக் குழு,**
**சுற்றாடல் அமைச்சு.**

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இல: AYDS/LND/01/ACQ/20**

இங்கு கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்காக 2368/19 இலக்கமும் 2024.01.23 திகதியுமுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் III ஆம் பகுதியைப் பார்க்கவும்.

**எச்.எம்.எச். பண்டார.**
**பிரதேச செயலாளர் (பதிற் கடமை).**
**அயகம.**

**2024.04.10 ஆம் திகதி.**
**அயகம பிரதேச செயலகத்தில்.**

**அட்டவணை**

சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், அயகம பிரதேச செயலகப் பிரிவில், குக்குழு கோரளையில், பல்லே பத்துவையில் இல. 193ஏ உடுகல கிராம உத்தியோகத்தர் பிரிவில், உடுகல என்னும் கிராமத்தில் அமைந்துள்ள, இரத்தினபுரி நில அளவை அதிகாரியின் பொறுப்பிலுள்ள அத்துடன் நில அளவையாளர் நாயகம் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட R/AYG/2019/706 இலக்கமுடைய களத்தாளில் மு.கி.ப. 239, வலய இல. 03, தாள் இல. 01 இல் துண்டு இல. 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள புப்புலேஹேன தோட்டம் சிறிகந்துரே தோட்டம் (பயின்ஹில் தோட்டம்) என்னும் 3.6588 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணி.

SUNDAY OBSERVER adz it's what you want | தினகரன் வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Kurunegala District**

Kurunegala - 077 0 325 625
6217 - Sampath Advertising - No. 15/6, Convent Lane, Kurunegala.

Kurunegala - 077 3 512 600
6163 - Athugala Media Center - No. 21A, Uthuru Wewa Road, Kurunegala.

Kuliyapitiya - 037 22 832 88
6101 - Sasthrodaya Book Shop - No. 11, Mihindu Mawatha, Kuliyapitiya.

Nikaweratiya - 077 6 064 640
6154 - Kumuditha Book Shop - No. 101/C, Puththalam Road, Nikaweratiya.

Wariyapola - 037 22 672 58
6188 - Kalugamuwa Road, Wariyapola.

Giriulla - 077 9 542 492
6233 - Chathura Book Shop - No. 49, Giriulla.

Pannala - 076 7 861 313
6118 - Miyumi Book Shop - No. 7, Negombo Road, Pannala.

Alawwa - 037 22 78 189
6145 - Gunasiri Welandasela - No.52, Main Street, Alawwa.

Narammala - 037 22 49 211
6155 - Sisira Stores & Pharmacy - Negombo Road, Narammala.

Ibbagamuwa - 037 22 59 508
6202 - Hiriyala Agencies - Dehelgamuwa, Ibbagamuwa.

Polgahawela - 071 6 375 293
6119 - Sagara Stores - Kurunegala Road, Polgahawela.

**Galle District**

Galle - 091 3 021 001
3117 - C. S. Munasingha - New Aradana Traders, No. 83, Main Street, Galle.

Galle - 075 9 699 402
3222 - J. A. S. Jayakodi - 28, P&J City, Gamini Mawatha.

Ambalangoda - 091 22 557 44
3132 - H. D. Mendis - 264, Cooperative Building, Main Street, Ambalangoda.

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343

To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT

Sunday Observer adz Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want



- Auto Focus

Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369 011 2 429 368
E-mail adzsuo@gmail.com

## கமத்தொழில் அமைச்சு

SARP Smallholder Agribusiness & Resilience Project

IFAD Investing in rural people

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## சிறிய அளவிலான விவசாய வணிக மற்றும் மீண்டெழல் கருத்திட்டம் (SARP)

## கமநல அபிவிருத்தி திணைக்களத்துடனான ஒருங்கிணைத்தல்

## IFAD கடன் இல.: 2000003227

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது கமத்தொழில் அபவிருத்திக்காக சர்வதேச நிதியத்திடமிருந்து சிறிய அளவிலான விவசாய வணிக மற்றும் மீண்டெழல் கருத்திட்ட ஆகுசெலவிற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை வவுனியா மாவட்டத்தின் வெண்கல செட்டிக்குளம் மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள சிறிய நீர்ப்பாசன திட்டங்களின் ஒப்பந்தங்களுக்காக செலவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. தொழில் வழங்குநர் (அமுல்நடத்தல்) "கமநல அபிவிருத்தி திணைக்களமானது – DAD" கணியப்பட்டியலின் அடிப்படையில் ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒரு அலகு விலையாக விலைமனுக்களை தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சிறிய நீர்ப்பாசன 7 எண்ணிக்கையான திட்டங்களுக்கான புனர்நிர்மாணத்திற்காக அழைக்கின்றது. விபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் சுருக்கமாக வழங்கப்பட்டுள்ளன.

| ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | வரிகள் நீங்கலாக மதிப்பீடு செய்யப் பட்டுள்ள தொகை (மில்) | ஒப்பந்தக் காலம் | தேவைப்படும் தரம் மற்றும் துறை | விலைமனு செல்லுபடி யாகும் காலப் பகுதி | தேவைப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | செல்லுபடி யாகும் காலம் |
| SARP/W/ NCB/DAD/ Vavu/2024/111 | சின்னசிப்பிகுள புனர்நிர்மாணம் | 13.827 | 180 நாட்கள் | சி6 மற்றும் சி5 நீர்ப்பாசனம் மற்றும் தரை வடிகாலமைப்பு | 2024.08.08ஆம் திகதியன்று வரையும் | 210,000.00 | 2024.09.05 ஆம் திகதியன்று வரையும் |
| SARP/W/ NCB/DAD/ Vavu/2024/112 | களுக்குண்ணம் மடுவ புனர்நிர்மாணம் | 22.970 | 180 நாட்கள் | சி6 மற்றும் சி5 நீர்ப்பாசனம் மற்றும் தரை வடிகாலமைப்பு | 2024.08.08ஆம் திகதியன்று வரையும் | 350,000.00 | 2024.09.05 ஆம் திகதியன்று வரையும் |
| SARP/W/ NCB/DAD/ Vavu/2024/113 | கங்கண்குள புனர்நிர்மாணம் | 13.364 | 180 நாட்கள் | சி6 மற்றும் சி5 நீர்ப்பாசனம் மற்றும் தரை வடிகாலமைப்பு | 2024.08.08ஆம் திகதியன்று வரையும் | 200,000.00 | 2024.09.05 ஆம் திகதியன்று வரையும் |
| SARP/W/ NCB/DAD/ Vavu/2024/114 | கிறீஸ்தவகுள புனர்நிர்மாணம் | 14.927 | 180 நாட்கள் | சி6 மற்றும் சி5 நீர்ப்பாசனம் மற்றும் தரை வடிகாலமைப்பு | 2024.08.08ஆம் திகதியன்று வரையும் | 225,000.00 | 2024.09.05 ஆம் திகதியன்று வரையும் |
| SARP/W/ NCB/DAD/ Vavu/2024/115 | நித்திக்குள புனர்நிர்மாணம் | 17.296 | 180 நாட்கள் | சி6 மற்றும் சி5 நீர்ப்பாசனம் மற்றும் தரை வடிகாலமைப்பு | 2024.08.08ஆம் திகதியன்று வரையும் | 260,000.00 | 2024.09.05 ஆம் திகதியன்று வரையும் |
| SARP/W/ NCB/DAD/ Vavu/2024/117 | இலுப்பைக்குள புனர்நிர்மாணம் | 14.476 | 180 நாட்கள் | சி6 மற்றும் சி5 நீர்ப்பாசனம் மற்றும் தரை வடிகாலமைப்பு | 2024.08.08ஆம் திகதியன்று வரையும் | 220,000.00 | 2024.09.05 ஆம் திகதியன்று வரையும் |
| SARP/W/ NCB/DAD/ Vavu/2024/118 | முசல்குட்டி புனர்நிர்மாணம் | 20.476 | 180 நாட்கள் | சி6 மற்றும் சி5 நீர்ப்பாசனம் மற்றும் தரை வடிகாலமைப்பு | 2024.08.08ஆம் திகதியன்று வரையும் | 310,000.00 | 2024.09.05 ஆம் திகதியன்று வரையும் |

3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும். ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டோரின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் மேலேயுள்ள அட்டவணைப்படுத்தியவாறு CIDA தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவர்களாகவுமிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தங்களுக்கான தேவைப்படும் தகைமைகள் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளன.

| இல. | சிறிய நீர்ப்பாசன திட்டத்தின் பெயர் (குளங்கள்) | கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி தொகையானது ஆகக் குறைந்தது பின்வருமாறு இருத்தல் வேண்டும் (மில்லியன் இ.ரூபாவில்) | கடந்த 5 வருடங்களில் கீழே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கு குறையாமல் வேலைகளை நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மையில் ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தை நிர்மாணித்தலின் அனுபவம் இந்த தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகுவதற்காக சான்று பகரும் வேலைகளில் ஆகக் குறைந்தது 70% பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும் (மில்லியன் இ.ரூபாவில்) |
|---|---|---|---|
| 1 | சின்னசிப்பிகுள புனர்நிர்மாணம் | 42 மில் | 14 மில் |
| 2 | களுக்குண்ணம் மடுவ புனர்நிர்மாணம் | 69 மில் | 23 மில் |
| 3 | கங்கண்குள புனர்நிர்மாணம் | 40 மில் | 14 மில் |
| 4 | கிறீஸ்தவகுள புனர்நிர்மாணம் | 45 மில் | 15 மில் |
| 5 | நித்திக்குள புனர்நிர்மாணம் | 52 மில் | 18 மில் |
| 6 | இலுப்பைக்குள புனர்நிர்மாணம் | 44 மில் | 15 மில் |
| 7 | முசல்குட்டி புனர்நிர்மாணம் | 62 மில் | 21 மில் |

| சரியான நேரத்தில் முன்மொழியப்படும் கையேற்பு (சொந்தமானது, குத்தகைக்கு, வாடகைக்கு இன்னும் பலவும்) முக்கியமான ஆகக் குறைந்த உபகரணம் (ஒவ்வொரு திட்டம்/ குளம்) | அகழ்தல் பொறி-3 எண்ணிக்கைகள், டிப்பர்-2 எண்ணிக்கைகள், ட்ரொலியுடனான ட்ரக்டர்-5 எண்ணிக்கைகள், கொன்கிறீட் மிக்சர்-1 எண்ணிக்கை, போக்கர் வைபிரேட்டர்- 1 எண்ணிக்கை, 6 தொன்னுக்கு குறையான வைபிரேட்டிங் கொம்பக்டர்-1 எண்ணிக்கை, தண்ணீர் பவுசர்கள் -2 எண்ணிக்கைகள், டோசர் D4E அல்லது மேற்பட்டது-1 எண்ணிக்கை. |
|---|---|
| | 1. தகைமையுள்ள வேலைத்தள பொறியியலாளர் விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது நிகரான தகைமையுடன் ஆகக் குறைந்தது 3 வருட நீர்ப்பாசன துறையில் வேலை அனுபவம்.<br>2. Technical Officer possessing NDT or equivalent with Two years or NCT with seven years qualification with experience in irrigation field.<br>3. நீர்ப்பாசன துறையில் 5 வருட வேலை அனுபவத்துடனான வேலை மேற்பார்வையாளர். |

5. பெசேவ இற்கு தகுதியுள்ள விலைமனுதாரர் செயற்பாடுடைய பெசேவ பதிவு சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து பெற்று (தொலைபேசி இல.: 024 222 2362, தொலைநகல் இல.: 024 222 80-69) ஆவணங்களை அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் பரீட்சிக்கலாம்.

7. 2024.04.16 ஆம் திகதியிலிருந்து 2024.05.08 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளருக்கு விண்ணப்பமொன்றை எழுத்தில் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

8. 2024.05.09 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் தலைவர், மாவட்ட பெறுகைக் குழு, கமநல அபிவிருத்தி திணைக்களம், வவுனியா என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்தப் பெயர் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும். விலைமனுவின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியான தபாலுறையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதென்பதை தயவு செய்து குறித்துக் கொள்ளவும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

9. அனைத்து விலைமனுக்களும் 9 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள விலைமனுப் பிணை படிவத்தில் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப் பிணையின் தொகை மற்றும் செல்லுபடியாகும் காலம் ஆகியன மேலேயுள்ள அட்டவணையில் காட்டியவாறான தகவலின் அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும்.

10. 2024 மே 2 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு வவுனியா, புகையிரத நிலைய வீதி, கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். சமுகமளித்தல் கட்டாயமானதல்ல ஆனால் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் சமுகமளிப்பதற்கு உற்சாகப்படுத்தப்படுகின்றனர். விலைமனுதாரர்கள் விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு முன்னராக அவர்களின் சொந்த தளவிஜயத்தை ஒழுங்கு பண்ணல் வேண்டும்.

**தலைவர்,**
**மாவட்ட பெறுகைக் குழு,**
**கமநல அபிவிருத்தி திணைக்களம்,**
**வவுனியா.**


# Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want **Classified**




For 15 Words **Rs. 800/-**

* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

**Hand over your Classified Advertisements to Our nearest Branch Office**

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361


## இந்திய உயர் ஸ்தானிகராலயம் கொழும்பு

### கேள்வி அறிவித்தல்

இலங்கை, கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம், கண்டி, இந்திய உதவி உயர் ஸ்தானிகராலயம், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம் மற்றும் ஹம்பாந்தோட்டையில் உள்ள இந்திய துணைத் தூதரகத்திற்கு தூதரக/ கடவுச்சீட்டு/ விசா/ OCI/ PCC/ ஒப்படைப்பு சான்றிதழ் (இந்திய குடியுரிமையை துறத்தல்)/ உலகளாவிய நுழைவுத் திட்டம் (GEP) சரிபார்ப்பு/ இதர சான்றளிப்பு தொடர்பான ஆதரவு சேவைகளின் (இதன் பின் 'CPV சேவைகள்' என்று குறிப்பிடப்படும்) வழங்கலுக்காக விரிவான தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவு ஒன்றை சமர்ப்பிப்பதற்கு நிறுவனங்களிடம் இருந்து கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் முன்மொழிவுகளை கோருகிறது.

2. விரிவான RFP இனை கொழும்பு, இந்திய உயர் ஸ்தானிகராலய இணையதளத்தில் இருந்து (www.hci.colombo.gov.in) தரவிறக்கம் செய்ய முடியும். அனைத்து ஆர்வமுடைய விலைமனுதாரர்களும் சான்சரித் தலைவர், இந்திய உயர் ஸ்தானிகராலயம், கொழும்பு என்ற முகவரிக்கு (36-38 காலி முகத்திடல் வீதி) இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கு பௌதீக வடிவில் 2 வெவ்வேறு கடித உறைகளில் தொழில்நுட்ப விலைமனுக்கள் மற்றும் நிதி விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2024 மே 17 அன்று.

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்கோரல்

**வீதி அபிவிருத்தி அதிகாசபையின் அங்குலான, அனுராதபுரம், மற்றும் உடுகாவ வேலைத்தளங்களுக்கு மசகு எண்ணெய் (Lubricant) கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல்**

| விபரம் | அளவு |
|---|---|
| Diesel Engine Oil 15 W 40 | 20 Drums |
| Gear Oil 80 W 90 | 06 Drums |
| Hydraulic Oil 46 | 10 Drums |
| Hydraulic Oil 68 | 10 Drums |

SELACINE

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வேலைத்தளங்களுக்கு மசகு எண்ணெய் (Lubricant) கொள்வனவு செய்வதற்காக தேசிய மனுக்கோரல் போட்டி முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.04.16** ஆம் திகதி **2024.05.06** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையி / நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையத்தளமான **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

## நீர்கொழும்பு மாநகர சபை

### கேள்வி அறிவித்தல்

நீர்கொழும்பு மாநகர சபையினால் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குத்தகைகளை 2024-07-01ஆம் திகதி முதல் 2025-12-31ஆம் திகதி வரையான 1 1/2 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக முத்திரையிடப்பட்ட இரு பிரதிகளுடனான கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை 01**

| தொ. இல. | குத்தகையின் பெயர் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | காமச்சோடை ஞாயிறு சந்தையை குத்தகைக்கு வழங்குதல் | 13,000,000.00 | 100,000.00 | 3000.00 |
| 02 | காமச்சோடை புதன் சந்தையை குத்தகைக்கு வழங்குதல் | 8,840,000.00 | 50,000.00 | 3,000.00 |
| 03 | கொச்சிக்கடை ஞாயிறு சந்தையை குத்தகைக்கு வழங்குதல் | 3,120,000.00 | 30,000.00 | 3,000.00 |
| 04 | சனிக்கிழமை இரவுச் சந்தையை குத்தகைக்கு வழங்குல் | 13,780,000.00 | 100,000.00 | 3,000.00 |
| 05 | அலியாபொல தினசரி சந்தையை குத்தகைக்கு வழங்குதல் | 200,000.00 | 10,000.00 | 3,000.00 |
| 06 | ஏத்துகால கடற்கரை பூங்கா மலசலகூட முறைமை மற்றும் வாகனத் தரிப்பிடத்தை பராமரித்தல் | 2,760,000.00 | 50,000.00 | 3,000.00 |
| 07 | பீ சந்தைக் கட்டிடத்தொகுதியின் பின்புறமுள்ள மலசலகூட முறைமை | 120,000.00 (மாதாந்தம்) 10,000.00 | 5,000.00 | 3,000.00 |
| 08 | நீர்கொழும்பு பிரதான பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள மலசலகூட முறைமை | 798,000.00 (மாதாந்தம்) 66,500.00 | 10,000.00 | 3,000.00 |
| 09 | ராஜபக்ஷ பூங்கா ஐஸ்கிறீம் சாலை | 312,000.00 (மாதாந்தம்) 26,000.00 | 10,000.00 | 3,000.00 |
| 10 | நீர்கொழும்பு பிரதான பஸ் நிலையத்தின் பஸ் தரிப்பிடக் கட்டணம் | 8,400,000.00 (மாதாந்தம்) 700,000.00 | 50,000.00 | 3,000.00 |
| 11 | CIB பின்புறமுள்ள தவறணை தோட்டக் காணியை குத்தகைக்கு வழங்குதல் | முழுக் காணிக்கும் ஒரு நாளைக்கு 4,000.00 | 50,000.00 | 3,000.00 |

**கேள்வி விண்ணப்பப் படிவ விநியோகம் -** 2024-04-16ஆம் திகதி முதல் 2024-04-30ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை நீர்கொழும்பு மாநகர சபையின் கணக்காளர் பிரிவில் கேள்விப் படிவங்கள்

**ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் நேரம்-** 2024-05-02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு
இந்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**கேள்விப் படிவங்களைத் திறத்தல் -** 2024-05-02ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு

**நிபந்தனைகள் -**

1. சகல கேள்விகளும் அவைகளை குத்தகைக்கு வழங்கும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு சட்டபூர்வமாக செல்லுபடியாகும். முதலாம் வருடத்திற்காக செலுத்தும் கேள்வித் தொகையின் 5% அதிகரிப்பு சகிதம் இரண்டாம் வருடத்திற்கான கேள்விக் கட்டணமாக அறவிடப்படும்.
2. இலங்கைப் பிரஜைகள் மட்டுமே விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
3. மாதிரிப் படிவக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையைச் செலுத்தியதன் பின்னரே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.
4. விண்ணப்பத்துடன் வழங்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. கேள்விதாரரினால் சபைக்குச் சொந்தமான சந்தைகளுக்காக கேள்விப் படிவங்களைச் சமர்ப்பிக்கும்போது கேள்வித் தொகையின் 03 மாதத்திற்கு சமமான மற்றும் ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும் மாநகர ஆணையாளரின் பெயரில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட வங்கிப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. ஏனைய சபை ஆதனங்களுக்கு கேள்விப் பெறுமதியாக 1,000,000.00 ரூபாவிற்கு மேல் கேள்விகளைச் சமர்ப்பிக்கும்போது கேள்வித் தொகையின் 06 மாதத்திற்குச் சமமான மற்றும் ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும் மாநகர ஆணையாளரின் பெயரில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட வங்கிப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. வெற்றிகரமான கேள்விதாரரினால் சபைக்குச் சொந்தமான சந்தைகளுக்காக 03 மாத தொகைக்கு இயைபான பண வைப்பொன்றையும், ஏனைய ஆதனங்களுக்கு 06 மாத தொகைக்கு இயைபான பண வைப்பொன்றையும் ஒரு வாரத்திற்குள் சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
8. உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது மாதிரிப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து வைப்புப் பற்றுச்சீட்டின் பிரதியொன்றுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் மற்றும் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியெனக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு எனும் முகவரிக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் வந்து மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். மேலதிக விபரங்களை மாநகர கணக்காளரிடமிருந்து (031-2281987) அறிந்துகொள்ளலாம்.
9. கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்துமூல அனுமதி வழங்கப்பட்ட ஒருவர் கலந்து கொள்ளலாம்.
10. இந்த கேள்வி கோரல் தொடர்பில் மாநகர ஆணையாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**2024-04-08ஆம் திகதி**
**நீர்கொழும்பு மாநகர சபை அலுவலகத்தில்.**

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**118**

**ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

DR - 5307 Mahindra bolero, 2011 cab. அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0714542958. 025182

**122**

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

QM - 2714, Bajaj, 2007, thre ewheel. அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0711210810. 025184

### வர்த்தகம்

**233**

**இயந்திராதிகள்/ கை கருவிகள் விற்பனைக்கு**

270 - 2729 JCB, 1991 அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 071 454 2958. 025180

# பெறுகை அறிவித்தல்
## இலங்கை தேசிய வைத்தியசாலை கொழும்பு 10

**இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு சலவையக இரசாயனப் பொருட்களை வழங்குதல்**

இலங்கை தேசிய வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விபரங்கள் | குறிப்பீட்டிலக்கம் |
|---|---|
| 1. Heavy Duty Detergent<br>2. Fabric Emulsifier<br>3. Oxy Bleach<br>4. Liquid Bleach<br>5. Fabric Softener | SI/08/2024 |

மேற்படி வழங்கல்களுக்காக தகைமை வாய்ந்த நிறுவனங்கள் மற்றும் நபர்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் சலவையக இரசாயனங்களுக்காக மீளளிக்கப்படாத 3,000.00 ரூபா வைப்பை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் 2024-04-16ஆம் திகதி முதல் 2024-05-07ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவிலிருந்து இயைபுடைய விலைக்கோரல் நிபந்தனைகள் சகிதமான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2024-05-08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை தேசிய வைத்தியசாலை பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**வைத்திய நிபுணர் டப்ளியூ. கே. விக்கரமசிங்க,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**




# அடகுவைத்து மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

DFCC வங்கி பி.எல்.சி.யின் சகல கிளைகளிலும் 2023 ஜனவரி 31 ஆம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு 2024 பெப்ரவரி 29 ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகள் பின்வருமாறு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்:

| உத்தேச திகதியும் நேரமும் | இடம் |
|---|---|
| 2024 ஏப்பிரல் 20<br>மு.ப. 10.00 | **வெள்ளவத்தை கிளைக் கட்டிடம்**<br>இல. 02, 33ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை.<br>**நீர்கொழும்பு கிளைக் கட்டிடம்**<br>இல. 454, பிரதான வீதி, நீர்கொழும்பு. |

மேற்குறிப்பிட்ட இடங்களில் ஏதேனுமொன்றில் ஏல விற்பனையை நடத்தவும் ஏல விற்பனைகளை இரத்துச்செய்ய அல்லது ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உள்ளது.

உதவி துணைத் தலைவர் - நுகர்வோர் சேவைகள்
DFCC வங்கி பி.எல்.சி.,
இல. 73/5, காலி வீதி, கொழும்பு 03.

0112 350000 www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

(பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு)
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA)

# பெறுகை அறிவித்தல்

**இரண்டு வருடங்களுக்கு சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான விலைமனுக்கோரல்**

**2024.06.01** ஆம் திகதி முதல் இரண்டு வருடங்களுக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் உணவகத்தை உயர் தரத்துடன் பராமரிப்பதற்கு பொருத்தமான நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக, **2024.04.16** ஆம் திகதி முதல் **2024.05.07** ஆம் திகதி வரை தகைமையுள்ள மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள **www.slida.lk / www.pubad.gov.lk** ஆகிய இணையத்தளங்களை நாடவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்,**
**28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07.**

**தொலைபேசி இல : 011-5980200 தொலைநகல் : 011-2584406**
**மின்னஞ்சல் : mail@slida.gov.lk**

SELACINE

# சுகாதார அமைச்சு
## தேசிய இரத்தமாற்று பிரயோக சேவை (NBTS)

**PROCUREMENT NOTICE FOR THE SUPPLY OF DEVICES FOR LUMINEX PLATFORM & ESSENTIAL ACCESSORY CONSUMABLES TO SUSTAIN IMMUCOR LIFECODES HLA MOLECULAR GENOTYPING & ANTIBODY SCREENING WORKFLOWS**

01. 2024.05.08 ஆம் திகதியன்று மு.ப. 11 மணி வரையும் கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, எல்விட்டிகல மாவத்தை, 555/5D , தேசிய இரத்தமாற்று பிரயோக சேவை, பிரதேச பெறுகைக் குழுத் தலைவரினால் கீழே குறிப்பிட்டுள்ள அம்சங்களுக்கான வழங்கலுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள்“ பெற்றுக் கொள்ளப்படும்.

**DEVICES FOR THE LUMINEX PLATFORM**

| Tender No. | Item No. | Item Description | Quantity | Non-refundable fee for the bid document |
|---|---|---|---|---|
| NBTS/ACC/ FA/2024/18 | 1 | Drive Systems for LUMINEX Platforms | 02 | Rs.5,000.00 |
| ESSENTIAL ACCESSORY CONSUMABLES TO SUSTAIN IMMUCOR ® LIFECODES™ HLA MOLECULAR GENOTYPING & ANTIBODY SCREENING WORKFLOWS | | | | |
| NBTS/ACC/ FJ/2024/08 | 1 | Polythylene 96-well Microplate Sealing Tape [CatID:6524] | 05 Packs (=500 seals) | Rs.5,000.00 |
| | 2 | Corning® well Microplate Alumium Sealing Tape | 03 Packs (=300 Seals) | |
| | 3 | Costar® 96 well Thermowell™ Plate 9 Model P [CatID: 6509] | 15 Packs (=375 Plates) | |
| | 4 | Multiscreen 96 well plate, hydrophilic pore size, 1.2µm [CatID:MSBVN1210] | 15 Packs (=150 plates) | |

2. இலங்கை சந்தையில் முன்வைக்கப்பட்ட உபகரணத்தின் ஏகநியமிக்கப்பட்ட பிரதிநிதி/ தரஅங்கீகாரம் பெற்ற முகவர் மாத்திரமே இந்த கேள்வியில் பங்குபற்றும் தகுதியை பெற்றுக் கொள்வர்.
3. எந்தவொரு ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர், முகவர், பிரதிநிதி அல்லது பெயர் நியமனம் பெற்றவர் முதன்மையானவர்களின் சார்பாக முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை இரு பிரதிகளில் கொள்வனவு செய்து பின்வரும் ஆவணங்களுடன் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
   - அ) கொழும்பு-05, தேசிய இரத்தமாற்று பிரயோக சேவை பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்று.
   - ஆ) மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணத்தில் கொழும்பு-5, NBTS கணக்காளரிடம் செலுத்துதல்.
   - இ) வியாபார பதிவு சான்றிதழும் அதனது நிழற்படப்பிரதியொன்றும்.
   - ஈ) முதன்மையாளர்களினால் அவர்களின் உள்ளூர் முகவர்களென வழங்கப்பட்ட சான்றிதழொன்று/ கடிதம்.

04. 2024.04.15 ஆம் திகதியிலிருந்து 2024.05.07 ஆம் திகதி வரையும் தேசிய இரத்தமாற்று பிரயோக சேவை கணக்காளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம்.
(தொலைபேசி இல.: 011-2368585, 2369931-35 நீடிப்பு. 221)
05. தேசிய இரத்தமாற்று பிரயோக சேவை பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களை மூடிய பின்னர், உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும்.
06. தேசிய இரத்தமாற்று பிரயோக சேவை பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
07. தேசிய இரத்தமாற்று பிரயோக சேவையின் பெறுகைப் பிரிவிலிருந்து மேலதிக தகவலை பெற்றுக் கொள்ளலாம்.

**Dr. E.A.L.C.K. Edirisinghe,**
**பணிப்பாளர்,**
**தேசிய இரத்தமாற்று பிரயோக சேவை,**
**555/5D, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-05.**

# அறிவித்தல்
## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல. : DSP/597/23
நடவடிக்கை : விஷேடம்
தன்மை : பொது
பெறுமதி : ரூ. 1,000,000/-

1. அம்பலங்கொட சரத் தேசப்பிரிய, கடவத மோட்டர்ஸ், டீ.எஸ். சேனாநாயக்க வீதி, அம்பாறை. (வாழ்நாள் உறுப்பினர்)
2. சமரவிக்ரம லியனகே ஒஸ்வின், ரஜ்பால் ஜயவர்தன, “நியு சிடி சுபர்”, டீ.எஸ். சேனாநாயக்க வீதி, அம்பாறை. (வாழ்நாள் உறுப்பினர்)
3. தரிந்த சந்துன் குமார சேனாநாயக்க, சியனே ஹார்ட்வெயார் ஸ்டோர்ஸ், 4ஆம் மாவத்தை, அம்பாறை (வாழ்நாள் உறுப்பினர்)
4. லந்துவ ஆரச்சிகே ரஞ்சித் பிரியந்த, மார்ஷல் ஒடோ சர்விஸ், டீ.எஸ். சேனாநாயக்க வீதி, அம்பாறை. (வாழ்நாள் உறுப்பினர்)
5. தேசிங்ஹலகே சுனில், இல. 30, மல்வத்த வீதி, அம்பாறை. (வாழ்நாள் உறுப்பினர்)
6. தருமராஜா சிவரத்னராஜா, இல. 374, திருஞானசம்பந்தர் மாவத்தை, திருகோணமலை (வாழ்நாள் உறுப்பினர்)
7. டாக்டர் குணநாயகம் இளஞ்செழியன் இல. 26, சாரதா வீதி, திருகோணமலை (வாழ்நாள் உறுப்பினர்)
8. அந்த்ரா ஹென்னதிகே பிரேமதிலக இல. 18, பண்டாரநாயக்க மாவத்தை, கந்தளை (வாழ்நாள் உறுப்பினர்)
9. எதிரிசிங்ஹ ஆரச்சிலாகே தினேஷ் ரியென்சி எதிரிசிங்ஹ, இல. 224, மல்பியலி மாவத்தை, மல்கடுவாவ, குருணாகலை (வாழ்நாள் உறுப்பினர்)
10. எதிரிசிங்ஹ முதலிகே நிமல்தர்மரத்ன இல.201/1,நீர்கொழும்பு வீதி, குருணாகலை (வாழ்நாள் உறுப்பினர்)
11. கிருஷ்ணபிள்ளை ரவீந்திரராசா மத்திய குரான்குளம், கிரான்குளம், மட்டக்களப்பு (அங்கத்துவர்)
12. சிவலிங்கம் மஹேஷ்வரன் புதுக்குடியிருப்பு - 05 புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு (அங்கத்துவர்)

**வழக்காளிகள்**

**எதிராளிகள்**

1. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், இல. 106, தர்மபால மாவத்தை, கொழும்பு 07
2. குலசேகரம்பிள்ளை பாலகிருஷ்ணன். தலைவர்
3. ஜனத் பந்து அபேசிங்ஹ, முதலாவது உப தலைவர்
4. மஹிமப்பு கங்கானம்கே சந்திரசிறி, இரண்டாம் உப தலைவர்
5. அன்டன் செல்வதுரை விக்டோரியா, தேசிய செயலாளர்
6. மத்துமாகே நந்தசிறி பெரேரா, மத்திய ஆட்சிக்குழு உறுப்பினர்
7. டாக்டர் அனுர சமன் ஏகநாயக்க, மத்திய ஆட்சிக்குழு உறுப்பினர்
8. அர்ஜுன் சுரஞ்ஜீவ அபேசிங்ஹ, மத்திய ஆட்சிக்குழு உறுப்பினர்
ஸ்ரீ லங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் அனைத்து ஊழியர்களுக்கும்
9. அமில இஷான் கங்கானம்கே, மத்திய ஆட்சிக்குழு உறுப்பினர்
10. ருக்ஷான் சமிந்த பீரிஸ், மத்திய ஆட்சிக்குழு உறுப்பினர்
11. பஸ்திநாயகம் அன்டன் புனிதநாயகம், மத்திய ஆட்சிக்குழு உறுப்பினர்
12. மயிலன் ஆரச்சிகே தொன் சுபத்ரா, மத்திய ஆட்சிக்குழு உறுப்பினர்
13. அளுத்கமகே காமினி நந்த குமார, மத்திய ஆட்சிக்குழு உறுப்பினர்
14. உபாலி விஜேரத்ன சிறிமான்ன, மத்திய ஆட்சிக்குழு உறுப்பினர்
15. கீர்த்தி சனத் அபேரத்ன, மத்திய ஆட்சிக்குழு உறுப்பினர்
16. மடவிட படபெந்திகே அதுல, மத்திய ஆட்சிக்குழுவின் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்
17. போமிரியே துலின் வாசனா பெர்னாந்து, மத்திய ஆட்சிக்குழுவின் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்
18. ரஞ்சாகொடகே நுசன்த பியல், மத்திய ஆட்சிக்குழுவின் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்
19. அருண் பிரசாத் லேகம்கே, தலைவர்,
நிதி ஆணைக்குழு
20. வைத்திய மகேஷ் குணசேகர, பொது பணிப்பாளர்
அனைவரும்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், இல. 106, தர்மபால மாவத்தை, கொழும்பு-07
21. செல்லஹென்னதிகே நிமல் குமார், முன்னால் தேசிய / கிளை செயலாளர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், திருகோணமலைக் கிளை, இல. 16, எத்யான வீதி, தெஹிவளை
22. அஜித் சூரியபண்டார, மத்திய ஆட்சிக்குழுவின் முன்னால் உறுப்பினர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், இல. 106, தர்மபால மாவத்தை, கொழும்பு-07
23. தம்பிபொடி வசந்தராஜா, முன்னால் கிளைத் தலைவர் / மத்திய ஆட்சிக்குழுவின் முன்னால் உறுப்பினர் மட்டக்களப்பு கிளை,
இல. 435/88, 5 ஆம் குறுக்கு வீதி, பும்புஹார், மட்டக்களப்பு
24. பிரசந்த தசநாயக்க, நிதி ஆணையத்தின் முன்னால் தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், இல. 160/4, பாலிகா குடியிருப்பு வீதி, ருக்மலே, பன்னிப்பிட்டிய.
25. சுனில் திசாநாயக்க, மத்திய ஆட்சிக்குழுவின் வெளிப்புற முகவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், அம்பாறை கிளை, இங்னியாகல வீதி, அம்பாறை.
26. சனத் தசநாயக்க, மத்திய ஆட்சிக்குழுவின் வெளிப்புற முகவர்/ உப தலைவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், மாத்தளை கிளை

**எதிராளிகள்**

மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட வழக்காளிகளினால் மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட 1 தொடக்கம் 26 வரையிலான எதிராளிகள் பெயரிடப்பட்டு இவ்வழக்கு இந்நீதிமன்றத்திற்கு கீழ் குறிப்பிடப்பட்ட நிவாரணங்களை கோரி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், குறித்த நிவாரணங்களாவன:

(அ) சிவில் வழக்கு சட்டக்கோவையின் 16ஆம் பிரிவின் படி 1ஆம் எதிராளி சங்கத்தினால் 2ஆம் மற்றும் 5ஆம் எதிராளிகளுக்கு எதிராக இவ்வழக்கை தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கு அனுமதி மற்றும் 1 ஆம் எதிராளி சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அறிவித்தலொன்றை வழங்குவதற்கான அனுமதியொன்றை வழங்குமாறும்,

(ஆ) 2023.06.24ஆம் திகதி நடாத்தப்படும் வருடாந்த பொதுக் கூட்டம் மற்றும் பதவி வெற்றிடமானது மற்றும் அதிகாரமற்றது எனவும் மற்றும் சட்டத்தின் முன்னிலையில் அதிகாரமற்றது எனவும் கூறி தீர்வொன்றையும் மற்றும் தீர்வுப் பிரகடனமொன்றை வழங்குமாறும்,

(இ) 2023.06.24 ஆம் திகதி நடாத்தப்படும் பொதுக்கூட்டம் மற்றும் தேர்வு 2 தொடக்கம் 19 6160 எதிராளிகள் மேற்படி தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நியமிப்பது சட்டப்பூர்வமானது அல்ல எனக் கூறிய தீர்வொன்றும் மற்றும் தீர்வுப் பிரகடனமொன்றை வழங்குமாறும்,

(ஈ) GSU 3/2022 எனும் தகவல் தொடர்பு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அரசியலமைப்பிற்கு பாதிப்பானது எனக் கூறிய தீர்வொன்றும் மற்றும் தீர்வுப் பிரகடனமொன்றை வழங்குமாறும் என்றாகும்,

(உ) GSU 3/2022 எனும் தகவல் தொடர்பு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மத்திய ஆட்சிக்குழுவினால் எச்சந்தர்ப்பத்திலும் கலந்துரையாடும் போது அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை கூறிய தீர்வொன்றும் மற்றும் தீர்வுப் பிரகடனமொன்றை வழங்குமாறும்,

(ஊ) 2 தொடக்கம் 19 வரை எதிராளிகளுக்கு குறித்த பதவிகளில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு உரித்தொன்று இல்லை எனக் கூறி தீர்வொன்றும் மற்றும் தீர்வுப் பிரகடனமொன்றை வழங்குமாறும்,

(எ) 2 தொடக்கம் 19 வரை எதிராளிகள் 2023.06.24 ஆம் திகதி பொதுச் சபைக் கூட்டத்தில் மற்றும் பதவித் தேர்வில் தெரிவு செய்து நியமிக்கப்படும் பதவிகளில் நடவடிக்கை புரிவதை தவிர்த்து நிரந்தர இன்ஜுன்சன் தடை உத்தரவொன்றை வழங்குமாறும் என்றும்,

(ஏ) இவ்வழக்கின் இறுதித் தீர்ப்பை வழங்கும் வரை 2 தொடக்கம் 19 வரையிலான எதிராளிகள் 2023.06.24 ஆம் திகதி பொதுச் சபைக் கூட்டத்தில் நியமிக்கப்படும் பதவிகளில் நடவடிக்கை புரிவதை தடுத்து இடைக்கால தடை உத்தரவொன்றை வழங்குமாறும்,

(ஐ) 2, 3, 4, 5, 7, 9, 12, 14, 15, 21, 22, 23, 24, 25 மற்றும் 26 ஆகிய எதிராளிகள் 1ஆம் எதிராளி சங்கத்தின் A2 மற்றும் A3 என முறையாக அரசியலமைப்பிற்கு மற்றும் சட்டத்திட்டங்களுக்கு சாதகமாக அங்கத்துவத்தை உறுதிப்படுத்தி, ஒன்றியம், பிரதேசம் மற்றும் கிளை பொதுச் சபைக் கூட்டம் மற்றும் பதவியை முறையாக நடைமுறைப்படுத்துவதுடன் தேசிய பொதுச் சபைக் கூட்டத்தினை நடைமுறைப்படுத்துமாறு கட்டளையிட்டு நிரந்தர கட்டளையான உத்தரவொன்றை வழங்குமாறும்,

(ஒ) இறுதித் தீர்ப்பை வழங்கும் வரையில் 2, 3, 4, 5, 7, 9, 12, 14, 15, 21, 22, 23, 24, 25 மற்றும் 26 ஆகிய எதிராளிகள் 1ஆம் எதிராளி சங்கத்தின் A2 மற்றும் A3 என முறையாக அரசியலமைப்பிற்கு மற்றும் சட்டத்திட்டங்களுக்கு சாதகமாக அங்கத்துவத்தை உறுதிப்படுத்தி, ஒன்றியம், பிரதேசம் மற்றும் கிளை பொதுச் சபைக் கூட்டம் மற்றும் பதவியை நடைமுறைப்படுத்துவதுடன் தேசிய பொதுச் சபைக் கூட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு நிரந்தர கட்டளையான தடை உத்தரவொன்றை வழங்குமாறும்,

(ஓ) 2 தொடக்கம் 20 வரையிலான எதிராளிகள் 1ஆம் எதிராளி செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதனம், வாகனம் மற்றும் வங்கி நிரந்தர வைப்பை விற்பனை செய்தல், அபகரித்தல், தவறாகப் பயன்படுத்தல் மற்றும்/அல்லது எல்லா வகையிலும் 1ஆம் எதிராளி நிறுவனத்தின் உரிமைகள் இழக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக நிரந்தர தடை உத்தரவொன்றை வழங்குமாறும்,

(ஔ) இறுதித் தீர்ப்பு வழங்கும் வரை 2 தொடக்கம் 20 வரையிலான எதிராளிகள் 1ஆம் எதிராளி செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதனம், வாகனம் மற்றும் வங்கி நிரந்தர் வைப்பை விற்பனை செய்தல், அபகரித்தல், தவறாகப் பயன்படுத்தல் மற்றும் அல்லது எல்லா வகையிலும் 1ஆம் எதிராளி நிறுவனத்தின் உரிமைகள் இழப்பதைத் தவிர்ப்பதற்காக நிரந்தர தடை உத்தரவொன்றை வழங்குமாறும்,

(க) இடைக்கால தடை உத்தரவு தொடர்பாக தீர்வொன்றை வழங்கும் வரையில் 2 தொடக்கம் 20 வரையிலான எதிராளிகள் 1ஆம் எதிராளி செஞ்சிலுவைச் சங்கத்தின் அசையா சொத்துக்கள், வாகனம் மற்றும் வங்கி நிரந்தர வைப்பை விற்பனை செய்தல், அபகரித்தல், தவறாகப் பயன்படுத்தல் மற்றும்/ அல்லது அல்லது எல்லா வகையிலும் 1ஆம் எதிராளி நிறுவனத்தின் உரிமைகள் இழப்பதைத் தவிர்ப்பதற்காக தடையாணை ஒன்றை வழங்குமாறும்,

(ங) மேற்படி கோரியவாறு இடைக்கால தடை உத்தரவிற்காக அறிவித்தலை வழங்குமாறும்,

(ச) வழக்கு கட்டணம்,

(ஞ) இந்நீதிமன்றம் தகுந்தது என கருதும் வேறு மற்றும் மேலதிக நிவாரணங்கள் வழங்குமாறும் என்றாகும்,

இவ்வழக்கு 2023.12.15 ஆம் திகதி கூட்டப்படும் சந்தர்ப்பத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் அனைத்து அங்கத்தவர்களிடமும் இவ்வழக்கு தொடர்பாக தெரிவிக்குமாறு நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்டுள்ளது எனினும், இதன்மூலம் உங்களுக்கு அறியத்தருவதாவது மேற்படி குறிப்பிடப்பட்ட நிவாரணங்களைக் கோரி வழக்காளிகளினால் 1 தொடக்கம் 26 வரையிலான எதிராளிகள் பெயரிடப்பட்டு இவ்வழக்கு தொடரப்பட்டுள்ளது எனவும் இங்கு உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

மேலும், மேற்படி இலக்கமிடப்பட்ட வழக்கில், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் இல. 01 நீதிமன்றத்தில், 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி முற்பகல் 9.00 கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என மேலும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

2024ஆம் ஆண்டு 04 மாதம் 16ஆம் திகதி.

**நீதிமன்றத்தின் கட்டளைப்படி**
**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம், கொழும்பு**

# INVITATION FOR BIDS (IFB)

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE

## POINT PEDRO PRADESHIYA SABHA

### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **loan** from the **World Bank** towards the cost of **Local Development Support Project**, and intends to apply part of the proceeds of this **loan** to payments under the Contract for Work as described below.
2. The **Chairman, Local Authority Procurement Committee** on behalf of the **Point Pedro Pradeshiya Sabha, Jaffna, Northern Province** now invites sealed bids from eligible and qualified bidders for the works as described below.

| No. | Contract No. | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn ) | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/ NP/JAF/ PPS/2024/ BT4/03 | Reconstruction of Nagarkovil Muththamil Pre school Road | 4.097 | C8 or above Highway | 90 | 41,000.00 | 07-Jul-2024 | 04-Aug-2024 |
| 02 | LDSP/NP/ JAF/PPS/ 2024/PT3/ 03 | Reconstruction of In Parsidyiyar Kovil Road | 16.615 | C6 or above Highway | 90 | 166,200 .00 | 21-Jul-2024 | 18-Aug-2024 |
| 03 | LDSP/NP/ JAF/PPS/ 2024/PT3/ 02 | Establishment of Children Park at Puloly West, Point Pedro | 15.790 | C 6 o r above Building Construction | 90 | 157,900.00 | 21-Jul-2024 | 18-Aug-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty and grade as stated above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award are included in Section 5 (Bidding Data and Contract Data, Schedule) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from **Secretary, Point Pedro Pradeshiya Sabha, Puloly (T.P No: 0212263276 / Fax No: 0212263276 / E-mail: pointpedrops@gmail.com)** and inspect the bidding documents at **Point Pedro Pradeshiya Sabha, Puloly** from **16-Apr-2024** until **05-May-2024** between **09:00 Hrs** and **15:00 Hrs** on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Point Pedro Pradeshiya Sabha, Puloly** from **16-Apr-2024** until **05-May-2024** between **09:00 Hrs** and **15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Rs. 5,500.00 (Five Thousand Five Hundred Rupees)**. The method of payment will be **by cash.**
8. Bids (Original & Duplicate) shall be delivered to the address below at **Chairman, Local Authority Procurement Committee, Point Pedro Pradeshiya Sabha, Puloly** at or before **10:30 Hrs** on **06 May-2024**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. Bids shall be valid up to the date stated in the table above.
10. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the table above. Bid security shall be valid up to the date mentioned in the table above.
11. Pre-bid meeting will be held on **30-Apr-2024** at **10:30 Hrs** at **Point Pedro Pradeshiya Sabha Conference Hall.** Interested bidders may attend the pre-bid meeting at their own expense.

The address referred to above is,

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Point Pedro Pradeshiya Sabha,**
**Puloly.**
16-Apr-2024

## சுற்றாடல் அமைச்சு

## அறிவித்தல்

### 2024ஆம் வருடத்திற்கான ஹைட்ரோபுளோரோகார்பன் (HFC) ஒதுக்கீட்டைப் பெற வணிக நிறுவனங்களைப் பதிவு செய்தல்

1989ஆம் ஆண்டு முதல் ஓசோன் படலத்தை அழிக்கும் பொருட்கள் தொடர்பான மொண்ட்ரியல் நெறிமுறையில் இலங்கை ஒரு பங்காளியாக இருந்து வருகிறது. சுற்றாடல் அமைச்சு மொன்ட்றியல் நெறிமுறையின் தேசிய மையப்புள்ளியாகச் செயற்படுவதுடன் இலங்கை தேவையான கடப்பாடுகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்கிறது.

மொண்ட்ரியல் நெறிமுறைக்கான தரப்பினரின் 28வது கூட்டத்தின் XXVIII/1 இலக்கத்தின் பிரகாரம் மொண்ட்ரியல் நெறிமுறையின் அனைத்து உறுப்பு நாடுகளும் ஹைட்ரோபுளோரோகார்பன்களின் (HFC) உற்பத்தி மற்றும் நுகர்வுகளை முறையாகவும் படிப்படியாகவும் குறைக்க ஒப்புக்கொண்டுள்ளன. அதன்படி, வருடாந்த நுகர்வுக்கான HFC இன் அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட வரம்பு ஒவ்வொரு உறுப்பு நாடுகளின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுகிறது. மொண்ட்ரியல் நெறிமுறைக்கான விதிமுறைகளுக்கு இணங்க, இலங்கையில் HFC நுகர்வை குறைப்பதற்கான இலக்கு 2024ஆம் வருடத்தில் ஆரம்பமாகின்றது. இதன் பிரகாரம் சுற்றாடல் அமைச்சு 2024ஆம் வருடம் முதல் இந்த வருடாந்த HFC ஒதுக்கீட்டை தகுதியான வணிக நிறுவனங்கள்/ நபர்களிடையே பகிர்ந்தளிக்கின்றது.

2023ஆம் வருடத்திற்கான HFC ஒதுக்கீட்டைப் பெற விரும்பும் ஆர்வமுள்ள வணிக நிறுவனங்கள்/ நபர்கள் பதிவு செய்து கொள்வதற்காக சுற்றாடல் அமைச்சிற்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க இத்தால் அழைக்கப்படுகின்றனர். வணிக நிறுவனம் / நபர்கள் பதிவு இன்றி எந்தவொரு நடவடிக்கைக்காகவும் HFC ஐ இறக்குமதி செய்வதற்கான தகுதியைப் பெறமாட்டார்கள்.

விண்ணப்பங்களை https://env.gov.lk எனும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் அல்லது கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை உறுதி செய்ய ஆதார ஆவணங்களின் சான்றுபடுத்தப்பட்ட நகல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஆதார ஆவணங்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒரு நேர்முகத்தேர்வு (தேவைப்பட்டால்) வழங்கப்பட்ட ஆவணங்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்யவும், தகுதியுள்ள ஒவ்வொரு விண்ணப்பதாரருக்குமான ஒதுக்கீடு தொகையை பரிந்துரைக்கவும் நடாத்தப்படும். இது தொடர்பில் சுற்றாடல் அமைச்சு செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அல்லது nousrilanka@gmail.com எனும் மின்னஞ்சலில் 2024 மே 07ஆம் திகதி பி.ப. 4.00 மணி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர், வான் வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் பிரிவு, சுற்றாடல் அமைச்சு, ‘‘சொபாதம்பியச’’, 416/C/1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு சான்றுபடுத்தப்பட்ட ஆவண நகல்களுடன் அனுப்புதல் வேண்டும். இது தொடர்பான மேலதிக தகவல்களை 0112034222, 0112034218 எனும் தொலைபேசி இலக்கங்களில் அல்லது nousrilanka@gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**சுற்றாடல் அமைச்சு,**
**பத்தரமுல்ல**

## பெயர் மாற்றம்

கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு பிரதேச சபையில் 22/14A, அசரப்பா வீதி, என்ற முகவரியில் வசிக்கும் ஜாபீர் ஆகிய நான், இன்றிலிருந்து எனது பெயரை மொஹமட் அபுபகர் ஜாபீர் என இலங்கை ஜனநாயகக் குடியரசு மக்களுக்கு தெரியப் படுத்துகிறேன்.

இப்படிக்கு
**மொஹமட் அபுபகர் ஜாபீர்**

www.adz.lk
it's what you want

## மட்டுப்படுத்தப்பட்ட அக்கரைப்பற்று மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அக்கரைப்பற்று

பதிவு இல : Kal/120 of 22.02.1971

## அறிவித்தல்

மட்டுப்படுத்தப்பட்ட அக்கரைப்பற்று மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 19 கிளைகளுக்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் குறித்த திகதிகளில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளன.

**2024.04.20ம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள்**

ஏசி 01 க/மு அக் அஸ்ஸாஹிரா வித்தியாலயம், அக்கரைப்பற்று
ஏசி 02 க/மு அக் அஸ்ஸாஹிரா வித்தியாலயம், அக்கரைப்பற்று
ஏசி 03 க/மு அக் அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று
ஏசி 04 சங்கத் தலைமைக் காரியாலயம், அக்கரைப்பற்று
ஏசி 06 க/மு அக் அரசினர் முஸ்லிம் ஆண்கள் வித்தியாலயம், அக்கரைப்பற்று
ஏசி 07 புதுப்பள்ளி வாசல் காரியாலயம், அக்கரைப்பற்று
ஏசி 08 ஏசி 08 கிளை நிலையம், அக்கரைப்பற்று
ஏசி 08A இஹ்ஸா பள்ளிவாசல் காரியாலயம், அக்கரைப்பற்று
ஏசி 10 ஏசி 11 கிளை நிலையம், அக்கரைப்பற்று
ஏசி 11 ஏசி 11 கிளை நிலையம், அக்கரைப்பற்று
ஏசி 12 ஏசி 08 கிளை நிலையம், அக்கரைப்பற்று

**2024.04.21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள்**

ஏசி 05 ஏசி 05 வாசிகசாலை நிலையம், அக்கரைப்பற்று
ஏசி 09 ஏசி 09 கிளை நிலையம், அக்கரைப்பற்று
ஏசி 13 ஏசி 09 கிளை நிலையம், அக்கரைப்பற்று
ஏசி 14 சங்க அரிசி ஆலை பட்டியடிப்பிட்டி, அக்கரைப்பற்று
ஏசி 15 க/மு அக் அல்பாயிசா மகா வித்தியாலயம், பள்ளிக்குடியிருப்பு
ஏசி 15A இசங்கனிச்சீமை ஜும்ஆ பள்ளிவாசல் காரியாலயம்
ஏசி 01A க/மு அக் காதிரிய்யா வித்தியாலயம், அக்கரைப்பற்று
ஏசி 03A பத்ர் ஜும்ஆ பள்ளிவாசல் காரியாலயம், அக்கரைப்பற்று

வாக்களிக்கத் தகுதி பெற்ற அனைத்து அங்கத்தவர்களும் கூட்டத்திற்கு சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன், தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய தேசிய அடையாள அட்டை அல்லது ஏற்றுக் கொள்ளக்கூடிய அடையாள அட்டை ஆகியவற்றை கொண்டு வரவும்.

**குறிப்பு : கிளைப் பொதுச் சபைக் கூட்ட அழைப்பிதழ் கடிதம் கிடைக்கப் பெறாத அங்கத்தவர்கள் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தி உரிய கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்க முடியும்.**

**இயக்குநர் சபைக் கட்டளைப்படி**
**செயலாளர்**
**மட்டுப்படுத்தப்பட்ட அக்கரைபற்று மத்திய ப.நோ.கூ.சங்கம்**
**அக்கரைப்பற்று.**
**2024.04.10**

## மாவட்ட பொது வைத்தியசாலை சிலாபம்

## மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

01. சிலாபம் பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக, இதன் பொருட்டு தகைமை வாய்ந்த இலங்கையில் மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்வதற்காக வியாபாரப் பதிவுடனான நிறுவனங்களிடமிருந்து 2024-05-08ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | குறிப்பீட்டு இலக்கம் | ஒப்பந்த விபரம் | உருப்படி | தேவை யான அளவு | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மதிப்பீட்டுப் பெறுமதி (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | DGH/CH/F5/ VENTILATOR/ 2024/01 | Supply. Delivery, Commissioning, Installation & Maintenance of 01 No. Neonatal ventilator with HFOV | Neonatal ventilator with HFOV | 02 | 3,000.00 | 300,000.00 | 20 |
| 02. | DGH/CH/F5/ Dialysis/ 2024/02 | Supply. Delivery, Commissioning, Installation & Maintenance of 01 No. Dialysis Machine | Dialysis Machine | 02 | 3,000.00 | 105,000.00 | 7 |
| 03. | DGH/CH/F5/ VAC/2024/03 | Supply. Delivery, Commissioning & Installation of 01 No. Vacuum Therapy Machine | Vacuum Therapy Machine | 05 | 3,000.00 | 45,000.00 | 3 |
| 04. | DGH/CH/F5/ ELECTRO CAUTERY/ 2024/04 | Supply. Delivery, Commissioning & Installation of 01 No. Electro cautery Machine | Electro cautery Machine | 01 | 3,000.00 | 15,000.00 | 1.5 |
| 05. | DGH/CH/F5/ Microtome/ 2024/05 | Supply. Delivery, Commissioning & Installation of 01 No. Microtome Machine | Microtome Machine | 01 | 3,000.00 | 270,000.00 | 18 |

02. தகைமை வாய்ந்த ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் ஆவணங்களை மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்குச் சமமான மீளளிக்கப்படாத கட்டணத்தை சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் 2024-04-16ஆம் திகதி முதல் 2024-05-07ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் சிலாபம் பொது வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

03. சமர்ப்பிக்கப்படும் சகல விலைமனுக்களுடனும் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது நிர்மாண உத்தரவாத நியதித்தினாலிருந்து (Construction Guarantee Fund) அல்லது இலங்கை காப்புறுதிச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும். சகல பொருட்களுக்குமான விலைக்கோரல் பிணை முறியானது 2024-07-24ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் பணிப்பாளர், சிலாபம் பொது வைத்தியசாலை எனும் பெயரில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

04. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ‘‘மூலப் பிரதி’’ மற்றும் ‘‘நகல் பிரதி’’ என குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு பின் வேறொரு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறையினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயரைக் குறிப்பிட்டு 2024-05-08ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை, சிலாபம் எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் நேரில் கொண்டுவந்து ஒப்படைப்பதானால் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடலாம்.

05. விலைக்கோரல் ஆவணங்களை இந்த அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. மேற்கூறிய அட்டவணையிலுள்ள சகல பொருட்களுக்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024-04-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

07. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைக்கோரல் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

08. விலைமனுக்கள் 2024-05-08ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள அலுவலகக் கட்டிடத்தின் கூட்ட அறையில் திறக்கப்படும் என்பதுடன் அன்றைய தினம் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

09. இந்த விலைக்கோரல் தொடர்பான மேலதிக விபரங்களை தெளிவுபடுத்திக் கொள்வதற்கு 032-2222261 நீடிப்பு 227/342/325 அல்லது 032-2222271 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு சிலாபம் மாவட்ட வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, சிலாபம்.**
**2024-04-16.**

Sunday Observer adz it's what you want
தினகரன் வாரமஞ்சரி
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# சம்பியனானது றைஸ்டார் பிங்க்



**கல்முனை மத்திய, பாலமுனை விசேட நிருபர்கள்**

புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகம் நடாத்திய கரப்பந் தாட்ட போட்டியில் 'றைஸ்டார் பிங்க்' அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

றைஸ்டார் கழகத்தின் சிரேஷ்ட கரப்பந்தாட்ட வீரர் மர்ஹூம் சாலிஹ் ஞாபகார்த்தமாக பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் றைஸ்டார் வொரியஸ் அணியை எதிர்கொண்ட பிங்க் அணி 21, 15, 21, 19 என வெற்றி பெற்றது.

# காயத்தில் இருந்து திரும்பிய யுபுன் அபேகோனுக்கு வெற்றி

இலங்கை குறுந்தூர ஓட்ட வீரர் யுபுன் அபேகோன் சிறு இடை வெளிக்குப் பின்னர் போட்டிக்கு திருப்பி 2024 ஆம் ஆண்டில் முதல் வெற்றியை பதிவு செய்துள்ளார்.

இத்தாலியில் நடைபெற்ற பிளோரன்ஸ் ஓட்டப் போட்டியின் 150 மீற்றர் ஓட்டத்தை தனது இரண்டாவது அதிவேக காலமான 15.19 விநாடிகளில் நிறைவு செய்து முதல் இடத்தை பிடித்துள்ளார். 150 மீற்றர் ஓட்டத்தை முன்னர் 15.16 விநாடிகளில் நிறைவு செய்த அவர் ஆசிய சாதனையையும் பதிவு செய்துள்ளார்.

யுபுன் ஆண்களுக்கான 100, 200 மற்றும் 150 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் தேசிய சாதனையை படைத்தவராவார். எனினும் கடந்த ஆண்டில் உபாதை காரணமாக அவர் உலக தடகள சம்பியன்சிப் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவில்லை. இதனால் கடந்த ஆண்டில் அவர் மட்டுப்படுத்தப் பட்ட போட்டிகளிலேயே பங்கேற்றிருந்தார்.



இந்நிலையில் அவர் குறிப்பிடத்தக்க இடைவெளிக்குப் பின்னர் பங்கேற்ற முதல் போட்டியிலேயே வெற்றியீட்டி இருப்பது முக்கிய அம்சமாகும்.

யுபுன் 100 மீற்றர் ஓட்டப் போட்டியை 10 விநாடிக்குக் குறைந்த காலத்தில் நிறைவு செய்த ஆசியாவின் முதலாவது மற்றும் ஒரே வீரராக உள்ளார். இந்த ஆண்டில் பாரிஸ் ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ள நிலையில் அவர் திறமைக்கு திரும்பி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# எல்லே போட்டியில் ட்ரைஸ்டார் வெற்றி



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை பிரதேச செயலக எல்லே சுற்றுப் போட்டியில் பாலமுனை ட்ரைஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அம்பாறை மாவட்டப் போட்டிக்கு தெரிவானது. பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு உத்தியோகத்தர் ஐ. இம்றுபஸ்கான் தலைமையில் கடந்த சனிக்கிழமை (13) அட்டாளைச்சேனை பிரதேச கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுகளில் ஓர் அங்கமாக எல்லே போட்டி நடைபெற்றது. இதன் இறுதிப் ஆட்டத்தில் சின்னப் பாலமுனை சுப்பர் ஒக்கிட் விளையாட்டுக் கழகத்தினை 10 ஓட்டங்களினால் ட்ரைஸ்டார் விளையாட்டுக் கழகம் வென்றது.



துறைநீலாவணை யுனைட்டெட் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்து நடாத்திய தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழாவின் மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்ற சித்தாண்டியைச் சேர்ந்த பாலசிங்கம் தசரதன் மற்றும் கழக உறுப்பினர்களை படத்தில் காணலாம். *(படம்: துறைநீலாவணை நிருபர்)*



## சர்வதேச செய்திகள்

# ஈரான் தாக்குதலையடுத்து காசாவில் 'போரைத் தொடர' இஸ்ரேல் உறுதி

## உலக நாடுகளின் எச்சரிக்கைக்கு மத்தியிலும் பிராந்தியத்தில் பதற்றம் உச்சம்

இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதலை அடுத்து இஸ்ரேல் காசா மீதான தாக்குதலை தீவிரப்படுத்தி இருப்பதோடு ஈரானின் தாக்குதல் காசா போரில் இருந்து தம்மை திசைதிருப்பாது என்று இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் மீது கடந்த சனிக்கிழமை (13) 300க்கும் அதிகமான ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் கொண்டு ஈரான் நடத்தி தாக்குதலை அடுத்து அமைதி காக்கும்படி உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. பெரும்பாலான தாக்குதல்களை இடைமறித்ததாக இஸ்ரேல் கூறியது.

இந்த மாத ஆரம்பத்தில் டமஸ்களில் உள்ள ஈரான் துணைத் தூதரகத்தின் மீதான தாக்குதலுக்கு பதில் நடவடிக்கையாக இந்தத் தாக்குதல் அமைந்திருந்ததோடு இஸ்ரேல் மீது ஈரான் நடத்தும் முதல் நேரடித் தாக்குதலாகவும் இது இருந்தது. எனினும் காசா போர் வெடித்தது தொடக்கம் ஈரான் மற்றும் அதன் ஆதரவுப் போராளிகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் பதற்றம் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

'ஈரானின் தாக்குதலுக்கு இலக்கானபோதும் கூட, ஈரான் ஆதாரவு ஹமாஸின் கைகளில் இருந்து எமது பணயக்கைதிகளை விடுவிப்பதற்காக காசாவில் எமது தீர்க்கமான நடவடிக்கையில் இருந்து எமது பார்வையை ஒரு கணம் கூட நாம் இழக்கமாட்டோம்' என்று இஸ்ரேல் இராணுவ பேச்சாளர் ரியர் அட்மிரல் டேனியல் ஹகரி குறிப்பிட்டுள்ளார்.

போர் நிறுத்தம் ஒன்றுக்கான முயற்சியில் மத்தியஸ்தர்கள் தொடர்ந்து ஈடுபட்டிருந்தபோதும் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் தெற்கு நகரான ரபா மீது இஸ்ரேல் படையெடுப்பு ஒன்றுக்கு திட்டமிட்டிருப்பது நிலைமையை மோசமடையச் செய்யும் என்று அஞ்சப்படுகிறது.

'காசாவில் ஹமாஸ் இன்னும் எமது பணயக் கைதிகளை பிடித்து வைத்துள்ளனர்' என்று ஹகரி குறிப்பிட்டார். காசாவில் தொடர்ந்து 130 பணயக் கைதிகள் இருப்பதாகவும் அதில் 34 பேர் மரணித்திருப்பதாகவும் நம்பப்படுகிறது.

'ரபாவிலும் எமது பணயக்கைதிகள் இருப்பதோடு அவர்களை மீட்பதற்கு எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம்' என்று இராணுவ பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் காசா முன்னரங்குகளின் போர் நடவடிக்கைகளுக்காக இஸ்ரேல் இரு மேலதிக படைப் பிரிவுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. காசாவில் இருந்து பெரும்பான்மை தரைப்படைகளை இஸ்ரேல் கடந்த வாரம் வாபஸ் பெற்ற நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்நிலையில் மத்திய காசாவில் இஸ்ரேல் போர் விமானங்கள் கடும் வான் தாக்குதல்களை நடத்தியதாக காசா அரச ஊடக அலுவலகம் நேற்று குறிப்பிட்டது.

முற்றுகையில் உள்ள காசாவின் தெற்கில் இருந்து வடக்கில் காசா நகருக்கு செல்லும் கடற்கரை வீதி சோதனைச்சாவடியை இஸ்ரேல் திறந்ததாக வதந்தி பரவியது அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் வடக்கை நோக்கி பயணிக்க ஆரம்பித்தனர். எனினும் அதனை இஸ்ரேல் மறுத்தது.

இவ்வாறு சென்றவர்கள் மீது இஸ்ரேல் சூடு நடத்தியதில் தனது மகளின் முகத்தில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்ததாக பலஸ்தீன தாய் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தகவலை பலஸ்தீன புகைப்படப்பிடிப்பாளர் அட்டியா தார்விஷ் சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளார்.

இதனால் கொல்லப்பட்ட மகளை கட்டித்தழுவிய படி அழுது கொண்டிருக்கும் அந்தத் தாயின் புகைப் படமும் வெளியாகியுள்ளது.



எனினும் தெற்கு நகரான கான் யூனிஸில் இருக்கும் தனது மனைவியுடன் ஒன்றிணைவதற்கு எதிர்பார்த்திருக்கும் மஹ்மூத் அவ்தாஹ் என்ற பலஸ்தீனர் கூறியதாவது, 'மக்கள் வெளியேறி இருப்பதாக அவர் தொலைபேசியில் என்னிடத்தில் குறிப்பிட்டார்.

வடக்கை நோக்கி வெளியேறுவதை இராணுவம் அனுமதிக்கும் வரை அவர் சோதனைச் சாவடியில் காத்திருக்கிறார்' என்றார்.

என்றாலும் இந்தப் பாதை திறக்கப்படுவதான செய்தி உண்மையில்லை என்று இஸ்ரேல் இராணுவம் ஏ.எப்.பி. செய்தி நிறுவத்திடம் குறிப்பிட்டுள்ளது.

### பதில் தாக்குதலுக்கான அச்சம்

ஈரான் தாக்குதலை அடுத்து கடந்த ஞாயிறன்று ஐ.நா. பாதுகாப்புச் சபை அவசர கூட்டத்தை நடத்தியபோது, ஈரானுக்கு எதிராக புதிய தடைகளை விதிக்க இஸ்ரேல் வலியுறுத்தியதோடு, பிராந்தியமே போரின் விளிம்பில் இருப்பதாக ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் எச்சரித்தார்.

'பிராந்தியத்தினாலோ அல்லது உலகத்தினாலோ மேலும் போர்களை தாங்க முடியாது' என்று வலியுறுத்திய குட்டரஸ், தற்போது பதற்றத்தை தணிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டதாக வலியுறுத்தினார்.

ஐ.நாவுக்கான ஈரான் தூதுவர் ஆமிர் செயித் இரவானி, டமஸ்களில் உள்ள ஈரான் துணைத் தூதரக தாக்குதலுக்கான பதில் நடவடிக்கையாக 'தாற்காப்புக்கான இயல்பான உரிமையையே' ஈரான் செயற்படுத்தியதாக வலியுறுத்தினார்.

'ஈரான் பதற்றத்தை அதிகரிக்கவோ அல்லது போரையோ நாடவில்லை' என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் இஸ்ரேல் தொடர்ந்து உஷார் நிலையில் இருப்பதாகவும் நிலைமையை மதிப்பீடு செய்து வருவதாகவும் இஸ்ரேல் இராணுவ பேச்சாளர் ஹகரி தெரிவித்துள்ளார்.

ஈரானின் தாக்குதலை கண்டித்த ஜி7 தலைவர்கள் அனைத்து தரப்புகளையும் அமைதி காக்கும்படி அழைப்பு விடுத்தனர்.

'அவசர போர் நிறுத்தம் ஒன்றின் மூலம் முடியுமான விரைவில் காசா பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவது, மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதாக அமையும்' என்று ஐரோப்பிய கௌன்சில் தலைவர் சார்ல்ஸ் மைக்கல் 'எக்ஸ்' சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்காவும் எச்சரிக்கையுடன் இருக்கவும் அமைதி காக்கவும் வலியுறுத்தியுள்ளது. 'இந்த நிலைமை தீவிரமடைவதை நாம் விரும்பவில்லை' என்று வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு கௌன்சில் பேச்சாளர் ஜோன் கிர்பி குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் தாக்குதலை அடுத்து இஸ்ரேலை 'இரும்புக் கவசம் கொண்டு பாதுகாப்பதாக' அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் ஒருமுறை கூறியபோதும், ஈரான் மீதான எந்த ஒரு பதில் தாக்குதலுக்கும் அமெரிக்கா உதவாது என்று அவர் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் குறிப்பிட்டிருந்தார்.

இஸ்ரேலின் 'பொறுப்பற்ற' பதிலடி தொடர்பில் கடந்த ஞாயிறன்று எச்சரித்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, அது தீர்க்கமான மற்றும் சக்திவாய்ந்த பதிலடிக்கு வழிவகுக்கும் என்று குறிப்பிட்டார்.

ஈரான் தாக்குதல் காரணமாக இஸ்ரேலில் பாடசாலைகள் மூடப்பட்டு, கூட்டங்கள் கூடுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட நிலையில் அவை பெரும்பகுதிகளில் தளர்த்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் நேற்று குறிப்பிட்டது.

### தொடரும் பேச்சு

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் பிராந்தியத்தில் பதற்றம் தீவிரம் அடைந்து காணப்படுகிறது. காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்தும் நீடித்து வருகிறது.

மத்திய காசாவில் உள்ள நுஸைரத் அகதி முகாமின் வடமேற்கில் இருக்கும் வீடு ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேல் ஞாயிறு இரவு நடத்திய வான் தாக்குதல்களில் ஐவர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது. போர் விமானங்கள் அர்பி குடும்பத்திற்கு சொந்தமான வீட்டை தாக்கி இருப்பதோடு அங்கிருக்கும் பள்ளிவாசல் ஒன்றை தரைமட்டமாக்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் காசாவில் 68 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 94 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது. இதன்படி கடந்த ஏழு மாதங்களாக நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 33,797 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 76,465 பேர் காயமடைந்துள்ளனர்.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றுக்காக கடந்த ஏப்ரல் 7 ஆம் திகதி தொடக்கம் எகிப்து தலைநகர் கெய்ரோவில் பேச்சுவார்த்தைகள் நீடித்து வரும் நிலையில் அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்தின் மத்தியஸ்தர்களால் முன்வைக்கப்பட்ட போர் நிறுத்த திட்டம் ஒன்றுக்கு ஹமாஸ் அமைப்பு கடந்த சனிக்கிழமை பதில் அளித்திருந்தது.

எனினும் நிரந்தர போர் நிறுத்தம் மற்றும் காசாவில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் வெளியேறுவது ஆகிய தமது முந்தைய நிபந்தனைகளில் தொடர்ந்து உறுதியாக இருப்பதாக ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது.

இது போர் நிறுத்த முன்மொழிவை நிராகரிப்பதாக உள்ளது என்று இஸ்ரேல் உளவுப் பிரிவான மொசாட் குறிப்பிட்டதோடு ஹமாஸ் ஈரானுடனான பதற்றத்தை தொடர்ந்து பயன்படுத்திக் கொள்வதாகவும் பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதாகவும் குற்றம்சாட்டியுள்ளது.

எனினும் மத்தியஸ்த முயற்சிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

# பதில் தாக்குதலுக்கு இஸ்ரேல் ஆலோசனை

பதற்றத்தை தணிப்பதற்கான சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துள்ளபோதும் ஈரானின் தாக்குதலுக்கான பதில் நடவடிக்கை குறித்து இஸ்ரேல் ஆராய்ந்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சாத்தியமான பதில் நடவடிக்கை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இஸ்ரேலிய போர் அமைச்சரவை கடந்த ஞாயிற்றுக்கிழமை (14) கூடியபோதும் எந்த முடிவும் எட்டப்படவில்லை என்று ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மையவாத இஸ்ரேலிய அமைச்சரான பென்னி காண்ட், 'சரியான நேரத்தில் ஈரானுக்கு சரியான விலை கொடுக்கப்படும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

சிரியாவில் உள்ள துணைத் தூதரகத்தின் மீது ஏப்ரல் 1 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாக ஈரான் 300க்கும் அதிகமான ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் தாக்குதலை நடத்தியது.

இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணிப் படைகளால் இலக்குகளை அடைவதற்கு முன் அந்த ஆயுதங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்களில் தெற்கு இஸ்ரேலில் இருக்கும் இராணுவத் தளம் ஒன்றில் சிறு சேதம் ஏற்பட்டதாகவும் ஏழு வயது இஸ்ரேலிய



சிறுமி ஒருவர் படுகாயம் அடைந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடிய இஸ்ரேலிய போர் அமைச்சரவை பதில் நடவடிக்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை பெற்றிருந்ததாக இஸ்ரேலிய அதிகாரிகளை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. எனினும் அதற்கான காலம் மற்றும் அளவு பற்றி அமைச்சரவையில் பிளவு ஏற்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் ஈரானுக்கு எதிரான பதில் தாக்குதல் ஒன்றில் அமெரிக்கா பங்கேற்காது என்று அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் இராணுவ தளபதி மேஜர் ஜெனர் மொஹமது பகெரி விடுத்த எச்சரிக்கையில், 'ஈரானுக்கு எதிராக இஸ்ரேல் பதில் நடவடிக்கை எடுத்தால் எமது பதில் தாக்குதல் இன்றைய நடவடிக்கையை விடவும் மிகப் பெரியதாக இருக்கும்' என்றார். இஸ்ரேலிய பதில் தாக்குதலுக்கு உதவினால் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க தளங்கள் தாக்கப்படும் என்று அவர் அமெரிக்காவையும் எச்சரித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 16ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.